


# தினபூமி

thinaboomi.com




புதுச்சேரி, வியாழன், ஏப்ரல் 25, 2024 ▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ பாண்டிச்சேரி பக்கம் 08 ₹ 3.00



**இந்திய வம்சாவளியை சேர்ந்தவர்: 3-வது முறையாக விண்வெளிக்கு செல்கிறார் சுனிதா வில்லியம்ஸ்**


...2-ம் பக்கம்

**உங்கள் செல்வத்தை காங்கிரஸ் கட்சி பறித்துவிடும்: சத்தீஷ்கரில் பிரதமர் நரேந்திர மோடி பேச்சு**

...3-ம் பக்கம்

**லக்னோவுக்கு எதிராக தோல்வி: புள்ளி பட்டியலில் 5-ம் இடத்திற்கு சரிந்தது சென்னை சூப்பர் கிங்ஸ்**

...7-ம் பக்கம்





● சித்திரை திருவிழாவையொட்டி மதுரை வண்டியூர் வீரராகவ பெருமாள் கோவிலில் எழுந்தருளிய கள்ளழகருக்கு நேற்று காலை நடந்த திருமஞ்சன நிகழ்ச்சிக்கு பின் தேனூர் மண்டபத்தில் எழுந்தருளிய கள்ளழகர் அங்கு மண்டூக முனிவருக்கு சாப விமோசனம் அளித்தார். இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு கள்ளழகரை தரிசனம் செய்தனர்.

# இட ஒதுக்கீட்டை உயர்த்த இந்தியா கூட்டணி நடவடிக்கை எடுக்கும்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிக்கை

சென்னை, ஏப். 25-

ஓ.பி.சி., எஸ்.சி./எஸ்.டி. மக்களின் இட ஒதுக்கீட்டை அதிகரிக்க இந்தியா கூட்டணி நடவடிக்கை எடுக்கும் என முதல்வர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் ஜவஹர் பவன் உள்ள சமாஜிக் நியாயக் சம்மேளனத்தில் சம்ருதா பாரத் அறக்கட்டளை சார்பில் மாநாடு நடைபெற்று வருகிறது. இந்த மாநாட்டிற்கு வாழ்த்து கூறி முதல்வா மு.க.ஸ்டாலின் அறிக்கை வெளியிட்டுள்ளார். அதில் கூறியிருப்பதாவது,

இந்தியாவில் சமூக நீதியை நிலைநாட்டுவதில் தமிழகம் முக்கிய பங்கு வகிக்கிறது. ஓ.பி.சி., எஸ்.சி./எஸ்.டி. மக்களின் இட ஒதுக்கீட்டை அதிகரிக்க இந்தியா கூட்டணி நடவடிக்கை எடுக்கும் என குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இந்தியாவிற்குள் சமூக நீதியை நிலைநாட்டுவதில் தமிழகம் முக்கிய பங்கினை ஆற்றி வருகிறது. சுதந்திரத்திற்குப் பிறகு, இடஒதுக்கீடு முறைக்கு அச்சுறுத்தல் வரும்போதெல்லாம் திராவிட இயக்கம் உறுதியான எதிர்ப்புகளை தெரிவித்து வருகிறது.

தமிழகத்தில் தற்போது ஓ.பி.சி., எஸ்.சி/எஸ்.டி உள்ளிட்டோருக்கு 69 சதவீதம் இடஒதுக்கீடு வழங்கி, தன்னிச்சையான 50 சதவீதம் இடஒதுக்கீடு வரம்பை விட கூடுதலாக இடஒதுக்கீடு வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. இந்த ஒதுக்கீட்டின் கீழ் அனுமதிக்கப்பட்டவாகளுக்கு முழு நிதியுதவியுடன், அரசுப் பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கான தொழில்முறை படிப்புகளில் 7.5 சதவீத இடஒதுக்கீடு அண்மையில் வழங்கபட்டுள்ளது.

மேலும் கிறிஸ்தவ மதத்திற்கு மாறிய பட்டியல் சாதியினருக்கும் இட ஒதுக்கீட்டை நீட்டிக்க வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தி தமிழக சட்டப்பேரவையில் சமீபத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 2024 பாராளுமன்றத் தேர்தலுக்கான காங்கிரஸ் தேர்தல் அறிக்கையில் தி.மு.க.வின் பல கொள்கைகள் எதிரொலிப்பது என் மனதுக்கு மகிழ்ச்சி அளிக்கிறது.

ஓ.பி.சி. மற்றும் எஸ்.சி/எஸ்.டியினரை மேம்படுத்துவதற்கான உறுதிமொழிகளை நமது வரவிருக்கும் அரசாங்கம் ஆர்வத்துடன் நிறைவேற்றும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். இவ்வாறு அவா அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### தமிழ்நாட்டில் ஈரோடு, சேலம் உள்ளிட்ட

# 15 மாவட்டங்களுக்கு வெப்ப அலைக்கான மஞ்சள் அலர்ட்

## வட உள்மாவட்டங்களில் வெப்பம் நிலை மேலும் உயரும்

புதுடில்லி, ஏப். 25-

தமிழகத்தில் ஈரோடு, சேலம் உட்பட 15 மாவட்டங்களுக்கு வெப்ப அலைக்கான மஞ்சள் அலர்ட் விடுக்கப்பட்டுள்ளது. மேலும் தமிழகத்தில் வட உள்மாவட்டங்களில் 3 முதல் 5 டிகிரி பாரன்ஹிட் வரை வெப்பநிலை மேலும் அதிகரிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வெப்ப அலை...**

நாடு முழுவதும் கோடைக்காலம் தொடங்கிவிட்ட நிலையில், கோடை வெயிலின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அக்னி நட்சத்திர காலத்திற்கு முன்பாகவே தமிழ்நாட்டில் வெப்ப அலை வீசத் தொடங்கியுள்ளது. பல இடங்களில் வெப்ப அலை வீசும் என்று இந்திய வானிலை மையம் எச்சரித்துள்ளதை தொடர்ந்து வெப்பம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இந்நிலையில், பல இடங்களில் கோடை வெயில் சதம் அடித்து வருகிறது.

**15 மாவட்டங்களில்...**

இது குறித்து இந்திய வானிலை மையம் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: ஈரோடு, சேலம், வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, தர்மபுரி, நாமக்கல், திருச்சி, பெரம்பலூர், அரியலூர், கரூர், திருப்பூர், திருவண்ணாமலை உள்ளிட்ட 15 மாவட்டங்களுக்கு வெப்ப அலைக்கான மஞ்சள் அலர்ட் விடுக்கப்பட்டுள்ளது. இந்த மாவட்டங்களில் வெயிலின் தாக்கம் இருக்கும்வரை மக்கள் தேவையின்றி வெளியில் போவதைத் தவிர்க்க வேண்டும்.

**28-ம் தேதி வரை...**

தமிழகத்தை போல் கர்நாடகா, தெலங்கானா, ராயலசீமா, உத்திரப்பிரதேசம், கடலோர ஆந்திரா மற்றும் ஏனம், மேற்கு வங்கம், சிக்கிம், ஜார்க்கண்ட், பீகார் உள்ளிட்ட மாநிலங்களில் வரும் 28 ஆம் தேதி வரை வெப்ப அலை வீசகூடும் என்றும் தெரிவித்துள்ளது. குறிப்பாக மேற்கு வங்கம் மற்றும் கடலோர ஒடிசாவின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 4 நாட்களுக்கு மிகக் கடுமையான வெப்ப அலை வீசகூடும் என்றும் எச்சரித்துள்ளது. இன்றும் மிகக் கடுமையான வெப்ப அலை வீசக்கூடும் என்பதால் மேற்குவங்க மாநிலத்திற்கு சிவப்பு நிற எச்சரிக்கையும், ஒடிசாவிற்கு ஆரஞ்சு நிற எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

### வண்டியூர் தேனூர் மண்டபத்தில்

# கள்ளழகர், மண்டூக மகரிஷிக்கு சாப விமோசனம் அளித்தார்

## ராமராயர் மண்டகப்படியில் விடிய, விடிய தசாவதாரம்

மதுரை, ஏப். 25-

வண்டியூர் தேனூர் மண்டபத்தில் கருட வாகனத்தில் எழுந்தருளிய கள்ளழகர் அங்கு மண்டூக முனிவருக்கு சாப விமோசனம் அளித்தார். அதை தொடர்ந்து ராமராயர் மண்டகப்படியில் இரவு 11 மணி முதல் இன்று காலை வரை விடிய, விடிய தசாவதார நிகழ்ச்சி நடக்கிறது.

மதுரை சித்திரை திருவிழாவின் சிகரநிகழ்ச்சியான வைகை ஆற்றில் கள்ளழகர் இறங்கும் வைபவம் நேற்று முன்தினம் காலை நடந்தது. இதற்காக கடந்த 21-ம் தேதி அழகர் கோவிலில் இருந்து கள்ளழகர் வேடம் பூண்டு பெருமாள் தங்கப் பல்லக்கில் மதுரைக்கு புறப்பட்டார்.

கள்ளந்திரி, அப்பன் திருப்பதி, கடச்சனேந்தல் உள்ளிட்ட இடங்களை கடந்து கடந்த 22-ம் தேதி மூன்று மாவடிக்கு வந்தார். அங்கு கள்ளழகரை பக்தர்கள் எதிர் கொண்டு வரவேற்கும் எதிர்சேவை நடந்தது. இதில் பல்லாயிரக் கணக்கானோர் கள்ளழகரை எதிர்கொண்டு வரவேற்றனர்.

பின்னர் தல்லாகுளம் பெருமாள் கோவிலுக்கு வந்தார். அங்கு நள்ளிரவு 12 மணியளவில் திருமஞ்சனமாகி தங்க குதிரை வாகனத்தில் கள்ளழகா எழுந்தருளினார். அதைத் தொடர்ந்து ஸ்ரீவில்லிபுத்தூரில் இருந்து கொண்டுவரப்பட்ட ஆண்டாள் சூடிக்கொடுத்த மாலை அணிந்து நேற்று முன்தினம் அதிகாலை தல்லாகுளம் கருப்பணசாமி கோவில் அருகில் ஆயிரம் பொன் சப்பரத்தில் கள்ளழகர் எழுந்தருளினார்.

அங்கிருந்து அதிகாலை 3 மணி அளவில் தங்க குதிரையில் அமர்ந்தபடி வைகை ஆற்றுக்கு வந்தார். பின்னர் அதிகாலை 6.02 மணியளவில் வைகை ஆற்றில் கள்ளழகர் இறங்கினார். இதனை காண 10 லட்சத்துக்கும் அதிகமான பக்தர்கள் குவிந்தனர். சுமார் ஒரு மணி நேரம் அங்கு அமைக்கப்பட்டிருந்த மண்டபத்தில் கள்ளழகர் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

அதன் பின்னர் மதிச்சியம் ராமராயர் மண்டபத்தில் எழுந்தருளினார். அப்போது கள்ளழகர் வேடமணிந்த பக்தர்கள் கள்ளழகர் மீது தண்ணீரை பீய்ச்சி அடித்து குளிர்வித்தனர். இரவு 9 மணி அளவில் வண்டியூர் வீரராகவ பெருமாள் கோவிலில் கள்ளழகர் எழுந்தருளினார். அங்கு ஆயிரக்கணக்கான பக்தர்கள் கள்ளழகரை தரிசனம் செய்தனர்.

வண்டியூர் வீர ராகவ பெருமாள் கோவிலில் கள்ளழகருக்கு நேற்று காலை திருமஞ்சனம் நடந்தது. அதனைத் தொடர்ந்து ஏகாந்த சேவை, பக்தி உலாத்துதல் நடந்தன. அதனைத் தொடர்ந்து கள்ளழகர் சேஷ வாகனத்தில் எழுந்தருளினார். அப்போது திரளான பக்தர்கள் சர்க்கரை தீபம் எடுத்து வழிபட்டனர்.

பின்பு அங்கிருந்து புறப்பட்ட கள்ளழகர் தேனூர் மண்டபத்தை வந்தடைந்தார். அங்கு கருட வாகனத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலித்தார். பின்னர் மண்டூக முனிவருக்கு கள்ளழகர் சாப விமோசனம் கொடுக்கும் நிகழ்வு நடந்தது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபாடு செய்தனர்.

அதை தொடர்ந்து மாலை 3.30 மணியளவில் அனுமன் கோவிலில் கள்ளழகர் எழுந்தருள்கிறார். அப்போது பக்தர்கள் அங்க பிரதட்சணம் செய்து வழிபாடு நடத்தினர். இரவில் கள்ளழகர் மீண்டும் ராமராயர் மண்டகப்படிக்கு சென்றார். அங்கு இரவு 11 மணி முதல் இன்று (25-ம் தேதி) காலை வரை விடிய, விடிய தசாவதார நிகழ்ச்சி நடக்கிறது.

மச்ச அவதாரம், கூர்ம அவதாரம், வராக அவதாரம், நரசிம்ம அவதாரம், வாமன அவதாரம், பரசுராம அவதாரம், ராம அவதாரம், பலராம அவதாரம், கிருஷ்ண அவதா ரம், மோகன அவதாரம் ஆகிய திருக்கோலங்களில் அழகர் காட்சி அளிக்கிறார்.

இன்று காலை 6 மணிக்கு மோகன அவதார கோலத்தில் கள்ளழகர் வீதி உலா வருகிறார். பகல் 12 மணிக்கு ராமராயர் மண்டபத்தில் அனந்தராயர் பல்லக்கில் ராஜாங்க கோலத்தில் கருப்பணசாமி கோவில் சன்னதியில் இருந்து அழகர் மலைக்கு புறப்படுகிறார்.

இன்று இரவு 11 மணிக்கு தல்லாகுளத்தில் ராமநாதபுரம் மன்னர் சேதுபதி மண்டபத்தில் திருமஞ்சனமாகி 26-ம் தேதி அதிகாலை 2.30 மணிக்கு பூப்பல்லக்கில் கள்ளழகர் எழுந்தருளுகிறார். அதே கோலத்தில் கருப்பணசாமி கோவில் சன்னதியில் இருந்து அழகர் மலைக்கு புறப்படுகிறார். மூன்று மாவடி, அப்பன் திருப்பதி, கள்ளந்திரி வழியாக வரும் 27-ம் தேதி காலை அழகர்மலையில் உள்ள இருப்பிடம் போய் சேருகிறார்.

### வி.வி.பாட் வழக்கில் தேர்தல் ஆணையம் விளக்கம்:

# தேதி குறிப்பிடாமல் தீர்ப்பை ஒத்திவைத்தது சுப்ரீம் கோர்ட்

புதுடெல்லி, ஏப். 25-

வி.வி.பாட் தொடர்பான வழக்கில் தேர்தல் ஆணையம் விளக்கமளித்ததை அடுத்து தேதி குறிப்பிடாமல் தீர்ப்பை சுப்ரீம் கோர்ட் ஒத்திவைத்தது.

பாராளுமன்ற மக்களவை தேர்தல் வாக்குப்பதிவு 19-ந்தேதி தொடங்கி ஜூன் 1-ந்தேதி வரை 7 கட்டங்களாக நடைபெறுகிறது. நாடு முழுவதும் வாக்குகளை பதிவு செய்ய மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. வாக்காளர்கள் தாங்கள் செலுத்திய வாக்கினை வி.வி.பாட் மூலம் சரிபார்க்க முடியும். இந்த நிலையில், வாக்கு எண்ணிக்கையின்போது வாக்கு இயந்திரத்தில் பதிவான வாக்குகளை வி.வி.பாட் சீட்டுடன் சரிபார்ப்பதை கட்டாயமாக்கக் கோரி சுப்ரீம் கோர்ட்டில் பொது நல வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. மேலும் வி.வி.பாட் இயந்திரத்தில் உள்ள கண்ணாடியை மாற்றிவிட்டு, அதற்கு பதிலாக ஒளி புகா கண்ணாடியை வைக்கும் தேர்தல் ஆணையத்தின் முடிவை திரும்ப பெற உத்தரவிட வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, தேர்தல் ஆணைய அதிகாரிகள் சுப்ரீம் கோர்ட்டில் ஆஜராகி விளக்கம் அளித்தனர். அதில், இவிஎம் (மின்னணு வாக்குப் பதிவு இயந்திரம்), வி.வி. பாட் இயந்திரம் ஆகிய இரண்டுக்கும் தனித்தனி கண்ட்ரோலர் உள்ளன. வாக்குப்பதிவு முடிந்ததும் பேலட் இயந்திரம், இவிஎம், வி.வி.பாட் ஆகிய மூன்றும் சீல் வைக்கப்படும். 45 நாட்கள் இந்த தகவல்கள் பாதுகாத்து வைக்கப்படும். தேர்தல் வழக்கு தொடரப்பட்டால் சம்மந்தப்பட்ட இயந்திரம் மட்டும் தனியாக பாதுகாத்து வைக்கப்படும் என தேர்தல் ஆணைய அதிகாரிகள் விளக்கம் அளித்தனர்.

மேலும், கண்ட்ரோல் யூனிட், பாலட் யூனிட் மற்றும் வி.வி.பாட் ஆகிய மூன்றும் அவற்றின் சொந்த மைக்ரோ கண்ட்ரோலரைக் கொண்டுள்ளன. இவற்றை தாமாக அணுக முடியாது. அனைத்து மைக்ரோ கண்ட்ரோலர்களும் ஒரு முறை நிரல்படுத்தக் கூடியவை. அவற்றை மாற்ற முடியாது எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையே, மனுதாரா தரப்பில், மைக்ரோ கண்ட்ரோல் யூனிட் பிளாஷ் மெமரியை கொண்டுள்ளதால் மீண்டும் புரோகிராம் எழுத முடியாது என்ற வாதத்தை ஏற்க முடியாது. வி.வி.பாட்டில் பிளாஷ் மெமரி இருக்கும்போது முறைகேடு செய்வதற்கான புரோகிராம் இருக்க முடியும். என வாதாடப்பட்டது.

இதனையடுத்து, ''தொழில்நுட்பம் சார்ந்த விவகாரங்களில் தேர்தல் ஆணையம் கூறும் தகவல்களை ஏற்றுக்கொள்ள தான் வேண்டும். தேர்தல்களில் முறைகேடு நடந்ததாக இதுவரை எந்த ஆதாரமும் தரப்படவில்லை. ஒரு அரசியல் அமைப்பான நீதிமன்றம், இன்னொரு அரசியல் அமைப்பான ஆணையத்தை எப்படி கட்டுப்படுத்துவது? அனைத்து சந்தேகங்களுக்கும் பதில் கிடைத்துள்ளது தீர்ப்பு பின்னர் வழங்கப்படும்'' எனக் கூறி தேதி குறிப்பிடாமல் வழக்கை ஒத்திவைத்தனர்.

### தேர்தல் பத்திர விவகாரம்: சுப்ரீம் கோர்ட்டில்

# சிறப்பு புலனாய்வுக்குழு விசாரணை கோரி வழக்கு


புதுடெல்லி, ஏப். 25-

தேர்தல் பத்திர திட்டத்தை சுப்ரீம் கோர்ட் ரத்து செய்துள்ள நிலையில், இந்த விவகாரம் தொடர்பாக சிறப்பு விசாரணைக் குழு அமைத்து விசாரிக்க வேண்டும் என சுப்ரீம் கோர்ட்டில் பொது நலன் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.


2018 ஆண்டு பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசு, தேர்தல் பத்திர திட்டத்தை கொண்டு வந்தது. இந்த தேர்தல் பத்திரத் திட்டம் அரசியலமைப்பு சட்டத்திற்கு எதிரானது எனக் கூறி, இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் சுப்ரீம் கோர்ட்டால் ரத்து செய்யப்பட்டது. பின்னர் தேர்தல் பத்திர விவரங்களை வெளியிட ஸ்டேட் பேங்கிற்கு உத்தரவிடப்பட்டு, அந்த தரவுகள் தேர்தல் ஆணைய இணையப் பக்கத்தில் பதிவேற்றப்பட்டன. இந்த தேர்தல் பத்திரம் விவகாரம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

இந்நிலையில், இந்த விவகாரம் தொடர்பாக சிறப்புப் புலனாய்வுக் குழு அமைக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ள வேண்டும் என சுப்ரீம் கோர்ட்டில் பொதுநல வழக்கு தொடரப்பட்டுள்ளது. தேர்தல் பத்திர திட்டம் மூலம் கார்ப்பரேட் நிறுவனங்கள், பெரும் அரசியல் கட்சிகள் பலன் அடைந்ததாக மனுவில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. பொதுநல வழக்குகள் மையம் மற்றும் பொது நலன் ஆகிய அமைப்புகள் சார்பில் இந்த பொது நல வழக்கு தொடரப்பட்டுள்ளது. இந்த விசாரணை சுப்ரீம் கோர்ட்டால் கண்காணிக்கப்பட வேண்டும் எனவும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த பொது நல வழக்கு விரைவில் விசாரணைக்கு வரும் என தெரிகிறது.


## மார்க்கெட் விலை நிலவரம்



| BSE | NSE |
|---|---|
| 114.49 | 34.40 |
| பாயிண்ட் 73852.94 | பாயிண்ட் 22402.4 |




**தங்கம்**
1 சவரன் ₹53,840
1 கிராம் ₹6,730



**வெள்ளி**
1 கிலோ ₹86,500
1 கிராம் ₹86.50

**$ டாலர்** ₹83.32

**பெட்ரோல்** ₹101.57
**டீசல்** ₹93.18



### இந்திய வம்சாவளியை சேர்ந்தவர்:
# 3-வது முறையாக விண்வெளிக்கு செல்கிறார் சுனிதா வில்லியம்ஸ்

**வாஷிங்டன், ஏப். 25-**

பூமி உள்ளிட்ட பிற கிரகங்களை ஆய்வு செய்வதற்காக ரஷியா, அமெரிக்க உள்ளிட்ட நாடுகள் விண்வெளியில் சர்வதேச விண்வெளி மையத்தை அமைத்துள்ளன. இங்கு ஆய்வுகளை மேற்கொள்வதற்காக சுழற்சி முறையில் வீரர்கள்- வீராங்கனைகள் அவ்வப்போது அனுப்பி வைக்கப்படுவது வழக்கம். இந்த ஆய்வு மையத்துக்கு செல்லும் விண்வெளி வீரர்கள் அங்கு தங்கியிருந்தபடி புவியில் ஏற்படும் மாற்றங்கள், செவ்வாய் உள்ளிட்ட கிரகங்களில் மனிதர்கள் வாழ்வதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பாக ஆய்வுசெய்து வருகின்றனர்.



சுழற்சி முறையில் இவர்கள் மாற்றப்பட்டு புதிய ஆராய்ச்சியாளர்கள் நாசாவின் விண்வெளி ஓடம் மூலம் அனுப்பி வைக்கப்படுவதுண்டு. மேலும், விண்வெளி மையத்தில் தங்கி இருப்பவர்களுக்கு தேவையான உணவு மற்றும் இதர உபகரணங்களும் அனுப்பப் படுகிறது. இந்நிலையில், நாசா விண்வெளி வீராங்கனையான இந்திய வம்சாவளியை சேர்ந்த அமெரிக்க பெண்மணி சுனிதா வில்லியம்ஸ் மூன்றாவது முறையாக விண்வெளிக்கு செல்கிறார். இவருடன், விண்வெளி வீரர் புட்ச் வில்மோர் ஆகியோர் யுனைடெட் லாஞ்ச் அலையன்ஸ் அட்லஸ் V ராக்கெட்டில் போயிங் ஸ்டார்லைனர் விண்கலத்தில் ஏறிச் சென்று, சுற்றுப்பாதையில் செல்லும் ஆய்வகத்தில் ஒரு வார காலம் தங்குவார்கள் என்று நாசா வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

போயிங் ஸ்டார்லைனர் விண்கலத்தில் க்ரூ ஃப்ளைட் டெஸ்ட் மிஷனின் முதல் பைலட்களில் ஒருவராக அவர் பயிற்சி பெற்று வருகிறார். மேலும், இந்த மிஷனை வரும் மே 6ம் தேதி திங்கட்கிழமை இரவு 10:34 மணிக்கு ஏவ திட்டமிடப்பட்டுள்ளது. புளோரிடாவில் உள்ள கேப் கனாவெரல் ஸ்பேஸ் ஃபோர்ஸ் ஸ்டேஷனில் உள்ள விண்வெளி ஏவுதள வளாகம்-41ல் இருந்து ராக்கெட் ஏவப்படுகிறது. விண்வெளியில் அதிக முறை நடந்த பெண் என்ற சாதனைக்கு சொந்தக்காரரான சுனிதா, 321 நாட்கள் விண்ணில் கழித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கேரளாவில் சக்திவாய்ந்த வெடிகுண்டுகள் கண்டெடுப்பு

**திருவனந்தபுரம்,ஏப். 25-**

கேரள மாநிலம், கண்ணூர் மாவட்டம் மட்டன்னூரில் உள்ள ஒரு வயலில் சக்திவாய்ந்த வெடிகுண்டுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளது குறித்து போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகிறார்கள்.

கேரள மாநிலத்தில் உள்ள 20 தொகுதிகளுக்கும் நாளை 26-ம் தேதி ஒரே கட்டமாக மக்களவை தேர்தல் நடைபெற உள்ளது. அங்கு நேற்று மாலை 6 மணியுடன் தேர்தல் பிரசாரம் நிறைவடைந்தது. இதையொட்டி அரசியல் கட்சியினர் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், கேரள மாநிலம், கண்ணூர் மாவட்டம் மட்டன்னூரில் உள்ள ஒரு வயலில் 9 இரும்பு வெடிகுண்டுகள் கிடப்பதை நேற்று காலை பொதுமக்கள் பார்த்தனர். இதனால் அதிர்ச்சியடைந்த அப்பகுதி மக்கள் போலீசார் மற்றும் வெடிகுண்டு தடுப்பு பிரிவு போலீசாருக்கும் தகவல் தெரிவித்தனர்.

இதையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த போலீசார் மற்றும் வெடிகுண்டு தடுப்பு பிரிவு போலீசார் வயலில் வாளியில் வைக்கப்பட்டிருந்த 9 இரும்பு வெடிகுண்டுகளையும் கைப்பற்றினர்.அதிபயங்கர விளைவை ஏற்படுத்தும் இந்த 9 இரும்பு வெடிகுண்டுகளையும் செயலிழக்க செய்யும் பணியில் வெடிகுண்டு தடுப்பு பிரிவு அதிகாரிகள் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக அப்பகுதியில் இருந்த மக்களை போலீசார் அப்புறப்படுத்தினர். இதன்பின் மிகக்கவனமாக 9 இரும்பு வெடிகுண்டுகளையும் அவர்கள் செயலிழக்க செய்தனர். இதனால் மாவட்டத்தின் அருகிலுள்ள பகுதிகளில் போலீசார் சோதனை நடத்தி வருகின்றனர். மேலும், இந்த சம்பவம் குறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் கேரளாவில் மக்களவை தேர்தலுக்கு இன்னும் 2 இரண்டு நாட்களே உள்ள நிலையில் இந்த சம்பவம் மக்கள் இடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

# செல்போன் டவரில் ஏறி தமிழக விவசாயிகள் திடீர் போராட்டம்
### தலைநகர் டெல்லியில் பரபரப்பு

**புதுடெல்லி, ஏப். 25-**

டெல்லி ஜந்தர் மந்தரில் செல்போன் டவர், மரத்தின் மீது ஏறி தமிழ்நாட்டை சார்ந்த விவசாயிகள் போராட்டம் நடத்தியதால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

விவசாய விளை பொருள்களுக்கு லாபகரமான விலையை மத்திய அரசு வழங்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி டெல்லி ஜந்தர் மந்தரில் தமிழ்நாட்டை சார்ந்த விவசாயிகள் காத்திருப்புப் போராட்டத்தை நேற்று முன்தினம் தொடங்கினர். தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்கத் தலைவர் அய்யாக்கண்ணு தலைமையில் நடைபெறும் இந்தக் காத்திருப்பு போராட்டத்தில் பெண்கள் உள்பட 100க்கும் மேற்பட்ட தமிழ்நாடு விவசாயிகள் பங்கேற்றுள்ளனர்.

மத்திய அரசு விவசாய விளை பொருள்களின் விலையை இருமடங்காக உயர்த்த வேண்டும், விவசாயிகளின் அனைத்துக் கடன்களும் தள்ளுபடி செய்யப்பட வேண்டும், காவிரி கோதாவரி இணைப்பு திட்டத்தை நிறைவேற்ற வேண்டும், மேகேதாட்டுவில் கர்நாடக அரசு அணை கட்டும் முடிவை கைவிட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி வரும் ஏப்ரல் 30-ஆம் தேதி வரையில் ஒரு வார காலத்திற்கு இப்போராட்டத்தை நடத்த விவசாயிகள் திட்டமிட்டுள்ளனர்.

இந்நிலையில், நேற்று காலை திடீரென பெண்கள் உள்பட சில விவசாயிகள் செல்போன் டவர் மீதும், மரத்தின் மீதும் ஏறி போராட்டம் நடத்தியதால் பரபரப்பு ஏற்பட்டது. உடனடியாக செல்போன் டவர் மீதும், மரத்தின் மீதும் ஏறிய டெல்லி காவலர்கள் மற்றும் துணை ராணுவப் படை வீரர்கள் விவசாயிகளை வலுகட்டாயமாக கீழே இறக்கினர். மேலும், பல்வேறு வகையில் தமிழ்நாடு விவசாயிகள் போராட்டத்தை முன்னெடுத்துள்ளதால், துணை ராணுவப் படையினர் குவிக்கப்பட்டு தீவிர கண்காணிப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். விவசாயிகளின் போராட்டத்தால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

### நாளை தேர்தல் நடைபெறவுள்ள நிலையில்
# மணிப்பூரில் அடுத்தடுத்து குண்டுவெடிப்பு சம்பவம்

**இம்பால், ஏப். 25-**

மணிப்பூரின் 2ம் கட்ட தேர்தல் நாளை நடைபெறவுள்ள நிலையில், அங்கு குண்டு வெடிப்பு சம்பவம் நிகழ்ந்துள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நாடு முழுவதும் பாராளுமன்ற மக்களவைத் தேர்தலுக்கான வாக்கு பதிவு 7 கட்டங்களாக நடைபெற்று வருகிறது. பதிவான வாக்குகள் ஜூன் 4-ம் தேதி எண்ணப்பட்டு, அன்றைய தினமே முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன. அந்த வகையில், முதற்கட்ட தேர்தல் கடந்த 19-ந்தேதி நடந்தது. இதில் மணிப்பூரிலும் வாக்குப்பதிவு நடந்தது. கலவரத்தால் பெரும் பதற்றத்தில் இருக்கும் மணிப்பூரில், வாக்குப்பதிவு நாளின்போதும் கலவரம் வெடித்தது. வாக்குச்சாவடிகளில் துப்பாக்கிச்சூடு, மிரட்டல், மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் சேதப்படுத்துதல் போன்ற வன்முறை சம்பவங்கள் அரங்கேறின. இவ்வாறு சமூக விரோத செயல்கள் நடந்த 11 வாக்குச்சாவடிகளில் நடந்த தேர்தல் செல்லாது என அறிவிக்கப்பட்டது. அந்த வாக்குச்சாவடிகளுக்கு நேற்று முன்தினம் மறுதேர்தல் நடந்தது. இதனையடுத்து, மணிப்பூரில் இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு ஏப்ரல் 26 ஆம் தேதி நடைபெறவுள்ளது.

இந்த நிலையில், மணிப்பூரின் காங்போக்பி மாவட்டத்தில் ஒரே இரவில் 3 முறை குண்டுவெடிப்பு சம்பவம் நிகழ்ந்துள்ளது. இச்சம்பவம் தேசிய நெடுஞ்சாலை சபர்மேனா அருகே நிகழ்ந்துள்ளது. இச்சம்பவத்தில் உயிரிழப்பு ஏதும் ஏற்படவில்லை. இதில் பாலம் சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த தாக்குதலுக்கு இதுவரை எந்த குழுவும் பொறுப்பேற்கவில்லை என்றும் விசாரணைகள் நடந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இஸ்ரேல்-ஹமாஸ் போர்:
# அமெரிக்க பல்கலைக்கழகங்களில் மாணவர்கள் போராட்டம் தீவிரம்

**நியூயார்க், ஏப். 25-**

இஸ்ரேல்-ஹமாஸ் போர், காசாவில் நிலவும் மனிதாபிமான நெருக்கடி ஆகியவற்றால் ஆத்திரமடைந்த மாணவர்கள், அமெரிக்காவில் பல்கலைக் கழக வளாகங்களில் ஒன்று திரண்டு போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இஸ்ரேல்-ஹமாஸ் போரில் காசாவில் உள்ள அப்பாவி பாலஸ்தீனர்கள் ஏராளமானோர் கொல்லப்பட்டுள்ளனர். போர் நிறுத்தம் தொடர்பான பேச்சுவார்த்தை முடிவுக்கு வராத நிலையில், தாக்குதல் நீடிக்கிறது.

போரை நிறுத்தும்படி பல்வேறு நாடுகள் வலியுறுத்தின. எனினும், ஹமாசை முற்றிலும் ஒழிக்கும் வரை தாக்குதலை நிறுத்தமாட்டோம் என இஸ்ரேல் உறுதியாக உள்ளது. இதனால் காசாவின் நிலை நாளுக்கு நாள் மோசமடைந்துள்ளது.

காசாவில் இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலுக்கு எதிராக பாலஸ்தீனர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். அவ்வகையில், அமெரிக்காவில் பாலஸ்தீன ஆதரவாளர்கள் தொடர்ந்து போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர். இந்த போராட்டத்தின் நீட்சியாக அமெரிக்காவில் உள்ள பல்கலைக் கழகங்களிலும் போராட்டம் வெடித்துள்ளது.

இஸ்ரேல்-ஹமாஸ் போர், காசாவில் நிலவும் மனிதாபிமான நெருக்கடி ஆகியவற்றால் ஆத்திரமடைந்த மாணவர்கள், பல்கலைக் கழக வளாகங்களில் ஒன்று திரண்டு போராட்டம் நடத்தி வருகின்றனர்.

நேற்று முன்தினம் நடந்த போராட்டங்களில், பல்கலைக் கழக நிர்வாகிகள் மற்றும் போலீசாருடன் மாணவர்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் பதற்றம் ஏற்பட்டது. இதனால் வகுப்பறைகள் மூடப்பட்டன. போராட்டத்தில் ஈடுபட்ட ஏராளமான மாணவர்கள் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப் பட்டனர்.

பரவி வரும் போராட்டத்தின் மையப் பகுதியாக இருக்கும் கொலம்பியா பல்கலைக் கழகத்திலும் போராட்டம் தீவிரமாக நடைபெற்றது. இஸ்ரேலிய இனவேற்றுமை, இனப்படுகொலை மற்றும் பாலஸ்தீன ஆக்கிரமிப்பினால் லாபம் ஈட்டும் நிறுவனங்களில் இருந்து பல்கலைக் கழகம் விலக வேண்டும் என்று போராட்ட ஒருங்கிணைப்பாளர்கள் வலியுறுத்தினர்.

இந்த போராட்டம் காரணமாக பல்கலைக் கழக வளாகத்தில் பாதுகாப்பு இல்லை என்று இஸ்ரேல் ஆதரவாளர்கள் கூறுகின்றனர். மிரட்டல் மற்றும் வெறுப்பு பேச்சுகளை பல்கலைக் கழக வளாகங்கள் ஊக்குவிப்பதாகவும் அவர்கள் குற்றம்சாட்டுகின்றனர். இது பற்றி கொலம்பியாவின் பொது விவகாரங்கள் துறை துணை தலைவர் பென் சாங் கூறுகையில்,

மாணவர்கள் போராட்டம் நடத்த உரிமை இருக்கிறது. ஆனால் அவர்கள் கல்வி நிறுவன வளாகத்தில் இயல்பு நிலையை சீர்குலைக்கவோ அல்லது மற்றவர்களை துன்புறுத்தவோ மிரட்டவோ அனுமதிக்கப் பட மாட்டார்கள் என்றார்.

இதற்கிடையில், யூத விரோத நிகழ்வுகள் நடப்பதாக கூறும் குற்றச்சாட்டுகளை காசா ஒற்றுமை முகாமில் உள்ள பல யூத மாணவர்கள் உள்ளிட்ட போராட்டக்காரர்கள் மறுத்துள்ளனர். பாலஸ்தீனியர்களுக்கு ஆதரவாக இருப்பதாகவும் தெரிவித்தனர்.

கொலம்பியா பல்கலைக் கழகத்தில் உள்ள யூத மாணவர்கள் பாதுகாப்பாக உணரவில்லை என்றும், வகுப்பறையை விட்டு மாணவர்களை வெளியேற்றும் அளவுக்கு இது ஆபத்தானது என்றும் குடியரசு கட்சியைச் சேர்ந்த சபாநாயகர் மைக் ஜான்சன் கூறினார்.

# நாட்டின் கவனத்தை திசை திருப்புவதே பாஜக தலைவர்களின் பாணி: பிரியங்கா

**திருவனந்தபுரம், ஏப். 25-**

உண்மையான பிரச்சினைகளில் இருந்து நாட்டின் கவனத்தை திசை திருப்புவதே பா.ஜ.க. தலைவர்களின் பாணி என்று காங்கிரஸ் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வயநாட்டில் செய்தியாளர்களிடம் பிரியங்கா காந்தி கூறியதாவது,

கடந்த 10 ஆண்டு கால பா.ஜ.க. ஆட்சியில் பெட்ரோல், டீசல் மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிவேகமாக உயர்ந்துள்ளது. அதே போன்று வேலையில்லாத் திண்டாட்டமும் அதிகரித்துள்ளது. ஆனால், பிரதமர் மற்றும் பா.ஜ.க. தலைவர்கள் இந்தப் பிரச்னைகளுக்கு தீர்வு காணவில்லை.

பா.ஜ.க.வினர் வளர்ச்சியைப் பற்றி பேச மாட்டார்கள். அவர்கள் உண்மையான பிரச்சினைகளைப் பற்றி பேச மாட்டார்கள். மாறாக, பா.ஜ.க. தலைவர்கள் மக்களுக்கு சற்றும் சம்பந்தமில்லாத பிரச்சினைகளை கொண்டு வருவார்கள்.

அதாவது, உண்மையான பிரச்சினைகளில் இருந்து நாட்டின் கவனத்தை திசை திருப்புவதற்காக மட்டுமே இவ்வாறு பேசி வருகிறார்கள். இந்த மக்களவைத் தேர்தல் என்பது ஜனநாயகத்தையும், இந்திய அரசியலமைப்பையும் பாதுகாப்பதற்கான வாய்ப்பு என்றார்.

### 25-04-2024



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** பல வழிகளிலும் பணவரவு ஏற்படும். எல்லா வகையிலும் ஏற்றம் கிடைக்கும். நண்பர்கள் சந்திப்பு, திருமணம் மற்றும் நல முன்னேற்றம் ஆகியவை ஏற்படும். 7

**ரிஷபம்:-** நல் ஆரோக்கியம் ஏற்படும். சந்ததி விருத்தி உண்டாகும். அரசுப் பணியாளர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். வாக்கு வன்மையால் வருமானம் பெருகும்.

**மிதுனம்:-** மனைவி, மக்களின் உடல் நிலையில் அக்கறை தேவை. மேலதிகாரிகள் மற்றும் பெரியவர்களிடம் வாக்குவாதம் செய்யாதிருப்பது நல்லது. செலவுகள் கட்டுக்கடங்காமல் இருக்கும்.

**கடகம்:-** இன்றைய நாள் கழிவது யுகங்கழிவது போன்றிருக்கும். தாயின் உடல் நிலையில் அதிக அக்கறை தேவை. நீர் நிலைகளில் எச்சரிக்கையோடு இருத்தல் அவசியம்.

**சிம்மம்:-** அரசு அதிகாரிகளின் ஆதரவு இருக்கும். கல்வியில் தேர்ச்சி உண்டு. தன்னம்பிக்கை மற்றும் தைரியம் அதிகரிக்கும். அதிகாரம் மிக்க பதவி உயர்வு ஏற்படலாம்.

**கன்னி:-** தனலாபம், குடும்ப சுகம் ஆகியவை குறையும். புதிய தொழில் முதலீடுகளை ஒத்திப் போடுவது நல்லது. வார்த்தைகளை அளந்து பேசுவது வம்புகளை தவிர்க்க உதவும்.

**துலாம்:-** இனிய பயணங்கள் ஏற்படும். புத்திர பாக்கியம் ஏற்படும். தெய்வீக காரிய ஈடுபாடு, தான தரும சிந்தனை ஏற்படும். தொழிலில் புதிய நல்ல திருப்பங்கள் ஏற்படும்.

**விருச்சிகம்:-** இட மாற்றங்களை எதிர்பார்க்கலாம். முறையற்ற வழிகளில் பணம் வரலாம். உறவுகளிடையே மனக்கசப்பு உருவாகலாம். கோபத்தைக் குறைத்தால் நன்மை ஏற்படும்.

**தனுசு:-** பணவரவு திருப்திகரமாக இருக்கும். பெண்களால் இலாபம் ஏற்படும். கல்வியில் வெற்றி உண்டு. பிறருக்கு உதவும் நல்லெண்ணம் ஏற்படும். மதிப்பு, மரியாதை, அந்தஸ்து உயரும்.

**மகரம்:-** புத்தாடை அணிகலன்கள் புதிதாகச் சேரும். பெயரும், புகழும் உண்டாகும். பதவி உயர்வு, மனத் திருப்தி, தொழில், வியாபாரத்தில் பணவரவு என யோகங்கள் தரும் நாள்.

**கும்பம்:-** அரசியல்வாதிகள் ஆதரவால் நன்மைகள் நடக்கும். தன்னம்பிக்கை கூடும். வேலை இல்லாதவர்களுக்கு வேலை கிடைக்கும். தெய்வ தரிசனப் பயணங்கள் திருப்தி தரும்.

**மீனம்:-** வழக்கு விவகாரங்களை தள்ளிப் போடுவது நல்லது. அதிகாரிகளிடம் பணிவுடன் நடந்து கொள்வது நல்லது. நினைப்பது ஒன்று, நடப்பது ஒன்றாக இருக்கும்.

### காஷ்மீர் பயங்கரவாதிகள் தாக்குதல்:
# பாதுகாப்புப்படை வீரர் காயம்

**ஸ்ரீநகர், ஏப். 25-**

காஷ்மீரில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் பாதுகாப்புப்படை வீரர் காயமடைந்தார்.

காஷ்மீரின் பந்திபோரா மாவட்டம் சிந்திபெண்டி கிராமத்தில் பயங்கரவாதிகள் பதுங்கி இருப்பதாக பாதுகாப்புப்படையினருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அந்த தகவலையடுத்து, பாதுகாப்புப்படையினர் அந்த கிராமத்தில் தீவிர தேடுதல் வேட்டை நடத்தினர்.

அப்போது கிராமத்திற்கு அருகே உள்ள ரெஞ்ஜி வனப்பகுதியில் பதுங்கி இருந்த பயங்கரவாதிகள், பாதுகாபுப்படையினர் மீது துப்பாக்கிச்சூடு தாக்குதல் நடத்தினர்.இந்த தாக்குதலில் பாதுகாப்புப்படை வீரர் காயமடைந்தார். இதையடுத்து அப்பகுதியை சுற்றிவளைத்த பாதுகாப்புப்படையினர் பதிலடி தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர்.

# மஞ்சுமெல் பாய்ஸ் பட நடிகரை கரம் பிடித்தார் அபர்ணா தாஸ்

**திருவனந்தபுரம், ஏப். 25-**

கேரள மாநிலம், வடக்கஞ்சேரியில் மஞ்சுமெல் பாய்ஸ் பட நடிகர் தீபக் பரம்போல்,நடிகை அபர்ணா தாஸ் ஆகியோரது திருமணம் நேற்று நடைபெற்றது. இது தொடர்பான புகைப்படங்கள் வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

தமிழ் திரையுலகில் வளர்ந்து வரும் நடிகை அபர்ணா தாஸ். மலையாளத்தில் பகத் பாசில் நடித்து வெளியான ஞான் பிராக்ஷன் என்ற படத்தின் மூலம் திரையுலகில் அறிமுகமானார். இதைத் தொடர்ந்து இயக்குநர் நெல்சன் இயக்கிய பீஸ்ட் படத்தில் சிறு கதாபாத்திரத்தில் நடித்தார். இந்த படத்தின் மூலம் தமிழ் ரசிகர்கள் மத்தியில் பிரபலமான அபர்ணா தாஸ் டாடா படத்தில் நாயகியாக நடித்தார்.

கவின் ஜோடியாக இவர் நடித்த டாடா படத்தை இயக்குநர் கணேஷ் கே பாபு இயக்கி இருந்தார். இந்த படம் பெரும் வரவேற்பை பெற்றது. அவரது அடுத்தப் படம் தமிழில் என்ன என ரசிகர்கள் எதிர்பார்த்திருக்க, ஸ்வீட் சர்ப்ரைஸாக அவரது திருமண செய்தி கடந்த சில தினங்களுக்கு முன்பு வெளியானது.

அது என்னவென்றால், மஞ்சுமெல் பாய்ஸ் படத்தில் நடித்த தீபக் பரம்போல் என்பவரை அபர்ணாதாஸ் திருமணம் செய்ய உள்ளதாக தகவல்கள் வெளியாகின. அபர்ணாதாஸ்- தீபக் பரம்போல் இருவரும் மனோஹரம் என்ற மலையாளப் படத்தில் இணைந்து நடித்தனர்.

அப்போது இருவருக்குள்ளும் ஏற்பட்ட நட்பு, காதலாக மாறியது. இதையடுத்து இருவரும் திருமணம் செய்ய முடிவு செய்தனர். அதன்படி இவர்களது திருமணம் கேரளா, வடக்கஞ்சேரியில் நடைபெற உள்ளதாக செய்திகள் வெளியாகின.

இந்த நிலையில், அபர்ணா தாஸ் மற்றும் மலையாள நடிகர் தீபக் பரம்போல் ஜோடிக்கு நேற்று காலை திருமணம் நடைபெற்றது. திருமணம் தொடர்பான புகைப்படங்கள் வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றன.

# ரேசன் அரிசி கடத்தல் விவகாரம்: ஓ.பன்னீர்செல்வம் கோரிக்கை

**சென்னை, ஏப் 25-**

ரேசன் அரிசி கடத்தலில் ஈடுபட்டு சட்டம் ஒழுங்கை சீர்குலைத்த தி.மு.க.வினரை உடனடியாக சட்டத்தின் முன் நிறுத்தி, உரிய தண்டனையை பெற்றுத் தரவேண்டுமென்று முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர் செல்வம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில்,

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி சுற்று வட்டாரப் பகுதிகளிலிருந்து மட்டும் மாதம் மூன்றரை லட்சம் கிலோ அளவிற்கு ரேஷன் அரிசி வெளி மாநிலங்களுக்கு கடத்தப்படுவதாக சிறுவர்களை வீடு வீடாக அனுப்பி ரேசன் அரிசியை விலை கொடுத்து வாங்குவதாகவும், இதற்கு மறுப்பு தெரிவிக்கும் சிறுவர்களை தி.மு.க.வினர் தாக்குவதாகவும், இவ்வாறு பாதிக்கப்பட்ட சிறுவர்களில் ஒரு சிறுவனுக்கு ஆதரவாக அப்பகுதியில் உள்ள வழக்கறிஞர் மாரிசெல்வம் எதிர்த்து கேட்டதற்கு, வழக்கறிஞர் வீட்டில் பெட்ரோல் குண்டு வீசியுள்ளதாகவும் ஊடகங்களில் செய்திகள் வந்துள்ளன.

இந்த பெட்ரோல் குண்டு தாக்குதலுக்கு முக்கிய காரணமாக விளங்கும் கார்த்திக் என்பவர் தி.மு.க. இளைஞரணி பொறுப்பில் உள்ளதாகவும், இந்தத் தாக்குதலில் காங்கிரஸ் நிர்வாகிகள் ஈடுபட்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட வழக்கறிஞர் தெரிவிக்கிறார்.

ஆகவே ரேசன் அரிசி கடத்தலில் ஈடுபட்டு சட்டம் ஒழுங்கை சீர்குலைத்த தி.மு.க.வினரை சட்டத்தின் முன் நிறுத்தி, உரிய தண்டனையை பெற்றுத் தர வேண்டுமென்றும், தமிழகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ரேசன் அரிசிக் கடத்தலை முழுமையாக தடுத்து நிறுத்த வேண்டுமென்றும் முதல்வர் ஸ்டாலினை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன் எனத் தெரிவித்துள்ளார்.

# தேசிய பஞ்சாயத்து ராஜ் தினம்: கவர்னர் ஆர்.என்.ரவி வாழ்த்து

**சென்னை, ஏப். 25-**

ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 24-ம் தேதி தேசிய பஞ்சாயத்து ராஜ் தினம் கொண்டாடப்படுகிறது. அதன்படி நேற்று தேசிய பஞ்சாயத்து ராஜ் தினம் கொண்டாடப்பட்டது. இதையொட்டி தமிழக கவர்னர் ஆர்.என்.ரவி நேற்று தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது,

பஞ்சாயத்து ராஜ் தின வாழ்த்துக்கள். பஞ்சாயத்து ஆட்சி முறையானது நமது பழமையான ஜனநாயக மதிப்புகள் மற்றும் நெறிமுறைகளின் ஆன்மாவாக இருந்து வருகிறது.

காஞ்சிபுரத்தில் உள்ள உத்திரமேரூர் போன்ற நமது கலாசார பாரம்பரிய கல்வெட்டுகள் அவற்றின் பெருமை மற்றும் துடிப்பான சாட்சியமாக உள்ளன.

இன்று, பஞ்சாயத்துகள், சுயராஜ்ஜியத்தின் வலுவான தூணாக மட்டுமல்லாமல், சுயசார்பு பாரதத்தின் உள்ளடக்கிய மற்றும் முழுமையான வளர்ச்சி மாதிரியின் பிரதிபலிப்பாகவும் உள்ளன. இவ்வாறு அவர் அந்த பதிவில் தெரிவித்துள்ளார்.

**கண் தானம் செய்வீர்**

# கிர்கிஸ்தானில் நீர் வீழ்ச்சியில் விழுந்து இந்திய மாணவர் பலி

**கிர்கிஸ்தான், ஏப். 25-**

கிர்கிஸ்தானில் உள்ள நீர்வீழ்ச்சியில் விழுந்து ஆந்திர மாணவர் பலியானார்.

ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தில் உள்ள அனகாபல்லியை சேர்ந்தவர் தாசரி சந்து (20). இவர் கிர்கிஸ்தான் நாட்டில் மருத்துவ படிப்பு படித்து வந்தார். இந்த நிலையில் தாசரி சந்து தனது நண்பர்களுடன் அங்குள்ள நீர்வீழ்ச்சிக்கு சென்றார்.

அப்போது மாணவர் தாசரி சந்து எதிர்பாராதவிதமாக உறைந்த நீர்வீழ்ச்சியில் விழுந்து உயிரிழந்தார். சந்துவின் குடும்பத்தினர் மத்திய அமைச்சர் கிஷன் ரெட்டியிடம் தங்கள் மகனின் உடலை இந்தியா கொண்டு வர உதவுமாறு கோரிக்கை விடுத்தனர்.

இதையடுத்து அமைச்சர் கிஷன் ரெட்டி கிர்கிஸ்தான் அதிகாரிகளை தொடர்பு கொண்டு பேசினார். மாணவரின் உடலை இந்தியாவுக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் நடந்து வருகிறது.

# கஷ்டப்பட்டு உழைத்து சேர்த்த உங்கள் செல்வத்தை காங்கிரஸ் பறித்துவிடும்

## சத்தீஷ்கரில் பிரதமர் மோடி பேச்சு



**புதுடெல்லி, ஏப். 25-**

நீங்கள் கஷ்டப்பட்டு உழைத்து சேர்த்த செல்வத்தை உங்கள் பிள்ளைகள் பெறமாட்டார்கள், அதை காங்கிரஸ் கட்சி பறித்துவிடும் என்று சத்தீஷ்கர் மாநிலத்தில் நடந்த கூட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடி பேசியுள்ளார்.

காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கை, சாதிவாரி கணக்கெடுப்பு, பொருளாதார ரீதியிலான ஆய்வு தொடர்பாக ராகுல் காந்தி கூறிய கருத்து பேசுபொருளாகி உள்ளது. மக்களின் சொத்துக்களை அபகரித்து குறிப்பிட்ட சிலருக்கு வழங்க காங்கிரஸ் நினைப்பதாக பிரதமர் மோடி விமர்சனம் செய்தார். ஊடுருவல்காரர்களுக்கும், அதிக பிள்ளைகள் பெற்றவர்களுக்கும் வழங்குவார்கள் என்று கடுமையான வார்த்தைகளை அவர் பயன்படுத்தினார். மோடியின் இந்த பேச்சு சர்ச்சையை ஏற்படுத்தியது.

இந்த சூழ்நிலையில், இந்தியன் ஓவர்சீஸ் காங்கிரஸ் தலைவர் சாம் பிட்ரோடாவின் கருத்து அடுத்த புயலை கிளப்பியிருக்கிறது. ஏ.என்.ஐ. செய்தி நிறுவனத்திற்கு சாம் பிட்ரோடா அளித்த பேட்டியில், சொத்து மறுபங்கீடு தொடர்பான கருத்தை ஆதரித்ததோடு, சில அமெரிக்க மாநிலங்களில் நடைமுறையில் உள்ள 'பரம்பரை வரி' என்ற கருத்தை மேற்கோள் காட்டி அந்த கொள்கையை இந்தியாவில் கொண்டு வருவது குறித்து விவாதிக்க வேண்டும் என தெரிவித்தார்.

சாம் பிட்ரோடாவின் இந்த கருத்தை பா.ஜ.க. விமர்சனம் செய்துள்ளது. இந்தியாவை அழிக்க காங்கிரஸ் முடிவு செய்துள்ளதாக பா.ஜ.க.வின் தகவல் தொழில்நுட்ப பிரிவின் அமித் மாளவியா கூறியிருந்தார். இந்நிலையில், சத்தீஷ்கார் மாநிலம் சுர்குஜா நகரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி பேசியபோது, சாம் பிட்ரோடாவின் கருத்தை மேற்கோள் காட்டி காங்கிரசை சாடினார்.

"இளவரசர் மற்றும் அரச குடும்பத்தின் ஆலோசகர், நடுத்தர வர்க்கத்தினருக்கு அதிக வரி விதிக்க வேண்டும் என்று கூறி உள்ளார். பரம்பரை வரி விதிக்கப்போவதாக காங்கிரஸ் கூறுகிறது. பெற்றோரிடமிருந்து பெறப்பட்ட பரம்பரை சொத்து மீதும் வரி விதிக்கும். நீங்கள் கஷ்டப்பட்டு உழைத்து சேர்த்த செல்வத்தை உங்கள் பிள்ளைகள் பெறமாட்டார்கள், காங்கிரஸ் பறித்துவிடும்" என மோடி குறிப்பிட்டார். எல்.ஐ.சி.யின் 'வாழும்போதும் வாழ்க்கைக்கு பிறகும்' என்ற முழக்கத்தைப் போன்று, மக்களிடம் வாழும்போதும் இறந்தபின்னரும் கொள்ளையடிக்க காங்கிரசிடம் ஒரு மந்திரம் உள்ளது, என்றும் மோடி விமர்சனம் செய்தார்.

# கண்ணுக்கு தெரியாத வாக்காளர்களை கண்டு பிரதமர் மோடி பயப்படுகிறார்

## கேரளாவில் கார்கே பேட்டி

**திருவனந்தபுரம், ஏப். 25-**

கண்ணுக்கு தெரியாத வாக்காளர்களை கண்டு பிரதமர் மோடி பயப்படுகிறார். அதனால்தான் அவர் எப்போதும் காங்கிரசை விமர்சித்து வருகிறார் என்று கேரளாவில் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜூன கார்கே தெரிவித்தார்.

கேரள மாநிலத்தில் உள்ள 20 தொகுதிகளுக்கு நாளை 26-ம் தேதி ஒரே கட்டமாக மக்களவை தேர்தல் நடைபெற உள்ளது. நேற்று மாலையுடன் தேர்தல் பிரச்சாரம் நிறைவடைய உள்ளது. இந்த நிலையில், கேரளாவில் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே செய்தியாளர்களிடம் கூறியதாவது:

கிட்டத்தட்ட 10-12 மாநிலங்களுக்குப் பிரதமர் மோடி பயணம் செய்ததாகவும், அங்குள்ள வாக்காளர்களிடமிருந்து கட்சிக்கு நல்ல வரவேற்பு கிடைத்து வருவதாகவும் கூறுகிறார்.

ஆனால் கண்ணுக்கு தெரியாத வாக்காளர்களை கண்டு பிரதமர் மோடி பயப்படுகிறார். அதனால்தான் அவர் எப்போதும் காங்கிரசை விமர்சித்து வருகிறார். காங்கிரஸ் என்ற கட்சியே இல்லை என கூறிவரும் அவர், பிறகு எதற்காக எங்கள் கட்சியை பற்றி கவலைப்பட வேண்டும்?

வெற்றிப் பெறுவோம் என பா.ஜனதாவுக்கு அதிக நம்பிக்கை இருந்தால், எதற்காக ஊழல்வாதிகளை பா.ஜ.க.வில் சேர்க்கிறீர்கள்? அவர்கள் காங்கிரசிலோ அல்லது வேறு ஏதாவது கட்சியிலோ இருந்தால் அவர்களை பெரிய ஊழல்வாதிகள் எனக் கூறுவார்கள். பிரதமர் மோடி, நாட்டில் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ.15 லட்சம் தருவதாக கூறினார். காங்கிரஸ் கட்சியினர் வெளிநாடுகளில் பதுக்கி வைத்திருக்கும் கருப்பு பணத்தை மீட்டு கொண்டுவருவேன் என்றார். அந்த பணமெல்லாம் எங்கே?

அடுத்த தேர்தலில் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவதாக கூறினார். விவசாயிகளின் இரட்டிப்பு வருமானம் எங்கே? தற்போது மோடியின் கியாரண்டி என பேசி வருகிறார். தாங்கள் அளிக்கும் வாக்குறுதிகளை நிறைவேற்ற மாட்டோம் என்பதே மோடியின் கியாரண்டி . வாக்குகளுக்காக இந்த விளையாட்டுகளை எல்லாம் பிரதமர் மோடி விளையாடுகிறார்.இவ்வாறு அவர் கூறினார்.

### இன்டியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து

# வடமாநிலங்களில் தேர்தல் பிரசாரம் செய்ய முதல்வர் ஸ்டாலின் திட்டம்

**சென்னை, ஏப். 25-**

இன்டியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து டெல்லி உள்ளிட்ட மாநிலங்களுக்கு சென்று முதல்வர் மு.க.ஸ்டாலின் பிரசாரம் செய்ய திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

பாராளுமன்ற தேர்தலையொட்டி தி.மு.க. தலைவர் முதல்வர் மு.க. ஸ்டாலின் தமிழ்நாட்டில் 40 தொகுதி வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் செய்திருந்தார். கடந்த மார்ச் மாதம் 22-ந் தேதி தொடங்கி இந்த மாதம் 17-ந் தேதி வரை 20 பிரமாண்ட பொதுக்கூட்டங்களில் தி.மு.க. கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து பேசினார்.

பிரதமர் மோடியை கடுமையாக விமர்சித்து பேசிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியையும் தமிழக பா.ஜனதா தலைவர் அண்ணாமலையையும் கடுமையாக சாடினார்.

பொதுக் கூட்டங்களில் பேசியது மட்டுமின்றி காலையில் நடைபயிற்சிக்கு சென்றபோதும் மக்களை சந்தித்து வாக்கு கேட்டார். தற்போது தமிழ்நாட்டில் வாக்குப்பதிவு நடந்து தேர்தல் முடிந்து விட்ட நிலையில் வட மாநிலங்களில் இன்னும் 6 கட்டங்களாக தேர்தல் நடைபெற உள்ளன. இந்த நிலையில் முதல்வர் மு.க.ஸ்டாலினை அரசியல் கட்சித் தலைவர்கள் கூட்டணி கட்சியினர் மாவட்ட கழக செயலாளர்கள் அமைச்சர்களை சந்தித்து வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். இன்டியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து டெல்லி உள்ளிட்ட மாநிலங்களுக்கு சென்று முதல்வர் மு.க.ஸ்டாலின் பிரசாரம் செய்வார் என தகவல்கள் வெளியாகியுள்ளது. இதற்காக அவரது பிரசார சுற்றுப்பயண விவரம் தயாராகி வருகிறது. இதுகுறித்த தகவல் அதிகாரப்பூர்வமாக விரைவில் வெளியாகும் என தெரிகிறது.

### வள்ளலார் சர்வதேச மையம்: ஆய்வு செய்து

# தொல்லியல் குழு அறிக்கை தாக்கல் செய்ய சென்னை ஐகோர்ட் உத்தரவு

**சென்னை, ஏப். 25-**

வடலூர் வள்ளலார் சர்வதேச மையம் அமைய உள்ள பகுதியை தொல்லியல் குழு அமைத்து ஆய்வு செய்து அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என தமிழக அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடலூர் மாவட்டம், வடலூரில் வள்ளலார் நிறுவிய சத்திய ஞான சபை பெருவெளியில், தமிழக அரசு சார்பில், 100 கோடி ரூபாய் மதிப்பில் வள்ளலார் சர்வதேச மையம் கட்டுமானப் பணி பிப்., 17ல் துவங்கியது. பெருவெளியில் வள்ளலார் சர்வதேச மையம் அமைப்பதற்கு தடை விதிக்கக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டன. இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம் வள்ளலார் சர்வதேச மையத்தில் என்னென்ன வசதிகள் செய்யப்பட உள்ளன என்பது குறித்து அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட்டு இருந்தது.

இந்த வழக்குகள், தலைமை நீதிபதி கங்காபுர்வாலா மற்றும் நீதிபதி சத்தியநாராயண பிரசாத் ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது தமிழக அரசு தரப்பில், ஏற்கெனவே பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில், சர்வதேச மையத்தில் செய்யப்படவுள்ள 16 வகையான வசதிகளை விளக்கி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. இதையடுத்து, வடலூர் வள்ளலார் சர்வதேச மையம் அமைய உள்ள பகுதியை தொல்லியல் குழு அமைத்து ஆய்வு செய்து அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என தமிழக அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# விமான பயணத்தின்போது பெற்றோருக்கு அருகிலேயே குழந்தைகளுக்கு இருக்கை

## டி.ஜி.சி.ஏ. புதிய உத்தரவு

**புதுடெல்லி, ஏப். 25-**

விமானங்களில் 12 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு அவர்களின் பெற்றோர் ஒருவருடன் இருக்கை ஒதுக்க வேண்டும் என்று விமான நிறுவனங்களுக்கு விமான போக்குவரத்து தலைமை இயக்குநரகம் (டிஜிசிஏ) அறிவுறுத்தியுள்ளது.

உலகில் விமான போக்குவரத்து வேகமாக வளரும் நாடுகளில் ஒன்றாக உள்ள இந்தியாவில், உள்நாட்டு விமான போக்குவரத்தும் அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில், விமானங்களில் பயணிக்கும் 12 வயதுக்குள்பட்ட குழந்தைகளுக்கு அவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலர்களுடன் இருக்கை ஒதுக்கப்படுவதில்லை என்று புகார் எழுந்தது. இது தொடர்பாக விமான போக்குவரத்து தலைமை இயக்குநரகம் அறிக்கை ஒன்று வெளியிட்டுள்ளது.

விமான போக்குவரத்து தலைமை இயக்குநரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியதாவது., "விமானங்களில் 12 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு அவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஒருவருடன் இருக்கை ஒதுக்கப்படுவதை விமான நிறுவனங்கள் உறுதி செய்ய வேண்டும். மேலும் அதற்கான பதிவேடு பராமரிக்கப்படும்.

இவ்வாறு விமான போக்குவரத்து தலைமை இயக்குநரகம் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஒழுங்குமுறை ஆணையம் ஆலோசனை வழங்கி உள்ளது. சிவில் விமானப் போக்குவரத்து ஆணையம் பூஜ்ஜிய சாமான்கள், முன்னுரிமை இருக்கைகள், உணவு, பானங்கள் மற்றும் இசைக்கருவிகளின் வண்டி போன்ற சேவைகளுக்கான கட்டணங்களையும் அனுமதித்துள்ளது.

# தங்கம் விலை மீண்டும் உயர்வு

**சென்னை, ஏப். 25-**

தென் இந்தியாவில் அதிகளவிலான தங்கத்தை வைத்துள்ள மாநிலத்தில் தமிழ்நாடு முன்னிலையில் உள்ளது. தமிழ்நாட்டில் சென்னை போன்ற முக்கிய நகரங்களில் தங்கத்தின் வர்த்தகம் மிகவும் அதிகமாக உள்ளது. சர்வதேச பொருளாதார நிலவரத்துக்கு ஏற்ப இந்தியாவில் தங்கத்தின் விலை அவ்வப்போது உயர்ந்தும், குறைந்தும் வருகிறது.

தங்கத்தின் விலை ஏறியும், இறங்கியும் வருவது வழக்கம். இதற்கிடையே கடந்த மாதத்தில் இருந்து தங்கம் விலை கிடுகிடுவென அதிகரித்து ஒரு சவரன் ரூ.55,000 கடந்தது. தொடர்ந்து அதிகரித்து வரும் விலை, நடுத்தர மக்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி வருகிறது. சென்னையில் ஆபரணத்தங்கத்தின் விலை நேற்று முன்தினம் சவரனுக்கு ரூ.1.160 குறைந்து ரூ.53,600-க்கு விற்பனையானது. தங்கம் கிராமுக்கு ரூ.145 குறைந்து ரூ. 6,700-க்கு விற்பனையானது.

கடந்த மாதம் தொடக்கம் முதல் உயர்ந்து வந்த தங்கம் விலை நேற்று முன்தினம் சவரனுக்கு ரூ.1,160 குறைந்தது மக்களிடையே சற்று நிம்மதியை ஏற்படுத்திய நிலையில், நேற்று மீண்டும் உயர்ந்துள்ளது. அதன்படி சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை நேற்று சவரனுக்கு ரூ.240 அதிகரித்து ரூ.53,840-க்கு விற்பனையானது. தங்கம் கிராமுக்கு ரூ.30 அதிகரித்து ரூ.6.730-க்கு விற்பனையானது.வெள்ளி விலை மாற்றமின்றி ஒரு கிராம் ரூ.86.50-க்கு விற்பனையானது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

### நீர்மட்டம் தொடர் சரிவு:

# மேட்டூர் அணை பகுதியில் வெளியே தெரியும் நந்தி சிலை, தேவாலயம்

**சேலம், ஏப். 25-**

மேட்டூர் அணையின் நீர்மட்டம் தொடர்ந்து சரிந்து வருவதால் நந்தி சிலை, கிறிஸ்தவ தேவாலயம் முழுவதும் வெளியே தெரிகிறது.

மேட்டூர் அணையின் மொத்த நீர்த்தேக்க உயரம் 120 அடி. மொத்த நீர் இருப்பு 93.47 டி.எம்.சி. ஆகும். மேட்டூர் அணை கட்டுவதற்கு முன்பு பண்ணவாடி, கோட்டையூர் பகுதியில் வாழ்ந்து வந்த கிராம மக்கள் அணையின் நீர்த்தேக்க பகுதியில் கோவில்களை கட்டி வழிபாடு நடத்தி வந்தனர்.

அணை கட்டி முடிக்கப்பட்ட பிறகு கிராம மக்கள் வேறு இடத்திற்கு குடிபெயர்ந்தனர். இதில் 120 அடி கொண்ட மேட்டூர் அணையின் நீர்மட்டம் 70 அடிக்கு கீழ் குறையும் போது பண்ணவாடி நீர்த்தேக்க பகுதியில் மூழ்கி இருக்கும் நந்தி சிலையின் தலைப்பகுதி, கிறிஸ்துவ ஆலயத்தின் முகப்பு பகுதி வெளியே தெரிவது வழக்கம்.

இந்நிலையில் நீர்மட்டம் தொடர்ந்து சரிந்து வருவதால் நந்தி சிலை, கிறிஸ்தவ தேவாலயம் முழுவதும் வெளியே தெரிகிறது. மேலும் நீரில் மூழ்கி இருந்த ஜலகண்டேஸ்வரர் ஆலயத்தில் கோபுரத்தில் மேல் பகுதி நீருக்கு வெளியே தெரிய தொடங்கி உள்ளது.

இதனை சுற்றுவட்டாரப் பகுதியை சேர்ந்த கிராம மக்கள் பரிசல் மூலம் சென்று வழிபாடு செய்து வருகின்றனர். நேற்றைய நிலவரப்படி மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 57 கன அடியாக உள்ளது. மேட்டூர் அணையின் நீர்மட்டம் 54.66 அடியாகவும், நீர் இருப்பு 20.87 டி.எம்.சி.யாகவும் உள்ளது. அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 1,200 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது.

# திரவ நைட்ரஜனை உணவாக எடுக்கக்கூடாது

## மாநில உணவு பாதுகாப்புத்துறை எச்சரிக்கை

**சென்னை, ஏப். 25-**

திரவ நைட்ரஜன் அடங்கிய ஸ்மோக்கிங் பிஸ்கட்டை உட்கொள்ள வேண்டாம் என மாநில உணவு பாதுகாப்புத் துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

அண்மையில் கர்நாடகாவில் நைட்ரஜன் ஐஸ் கலந்து உருவாக்கப்பட்ட ஸ்மோக்கிங் பிஸ்கட் சாப்பிட்ட சிறுவன் ஒருவன் துடிதுடிக்கும் வீடியோ காட்சிகள் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வரும் நிலையில் நைட்ரஜன் பிஸ்கெட்டுக்கு எதிராக பலரும் குரல் எழுப்பி வருகின்றனர்.

திரவ நைட்ரஜனை பிஸ்கெட் உடன் சேர்த்து சாப்பிடும் போது வாய் மற்றும் மூக்கில் இருந்து புகை வரும். இதை பொழுதுபோக்கான உணவாக பல்வேறு பொது இடங்களில் மற்றும் சுற்றுலா தளங்களில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. பொருட்காட்சிகளில் நைட்ரஜன் பிஸ்கெட் விற்பனை செய்யப்பட்டுவதை பார்க்க முடிகிறது. திரவ நிலையில் மைனஸ் 196 செல்சியஸ் வெப்பநிலையில் இருக்கும் திரவ நைட்ரஜன் பிஸ்கெட்டில் சேர்த்து பயன்படுத்துவது ஆபத்து என்கின்றனர் உணவுத்துறை வல்லுநர்கள்.

பொதுவாக உணவுப் பொருள்களை உறைய வைக்கவே திரவ நைட்ரஜன் பயன்படுத்தப்பட்டு வருகிறது. உணவுப் பொருட்களைப் பதப்படுத்துவதற்கு திரவ நைட்ரஜன் பயன்படுத்தப்பட்டாலும் அது ஆபத்து நிறைந்ததாகவும் உள்ளது. ஒரே நொடியில் பொருட்களை உறைய வைக்கும் தன்மை கொண்டது. திரவ நைட்ரஜனை சிறிது திரவ நிலையில் எடுத்துக் கொண்டாலும் வயிற்றில் சென்று ஆவியாகுதல் நடைபெற்று கடும் உடல் உபாதை ஏற்படுத்துவதோடு உயிரிழப்பு ஆபாயமும் ஏற்படும்.

குறைந்த அளவில் திரவ நைட்ரஜனை குறைவாக பயன்படுத்தும் பொழுது எந்த ஆபத்தும் இருக்காது எனவும் மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். இந்நிலையில் சமூக வலைத்தளத்தில் வெளியான இந்த வீடியோ பலருக்கும் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது. அண்மையில் பஞ்சு மிட்டாயில் உள்ள நிறமி வேதிப்பொருள் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் என உறுதி செய்யப்பட்ட நிலையில் அதனை அரசு தடை செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

சென்னையில் ஸ்மோக்கிங் பிஸ்கெட் தயார் செய்யும் இடங்களில் ஆய்வு செய்து, இதன் பாதிப்பை எடுத்துக் கூறி, சுற்றறிக்கை கொடுக்கவும், முடிவு செய்யப்பட்டிருக்கிறது. திரவ நைட்ரஜன் பயன்படுத்திய உணவுப்பொருட்களை விற்கக் கூடாது என மாநில அரசின் உணவு பாதுகாப்புத்துறை உத்தரவு அளித்துள்ளது. அதனை மீறி விற்பனை செய்யும் உணவு விடுதிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என உணவு பாதுகாப்புத்துறை தெரிவித்துள்ளது.

# வயநாடு தொகுதிக்கு ராகுல் செய்தது என்ன?

## பிரசாரத்தில் அண்ணாமலை கேள்வி

**திருவனந்தபுரம், ஏப். 25-**

வயநாடு தொகுதிக்கு என்ன செய்தேன் என ராகுல் வெள்ளை அறிக்கை வெளியிட முடியுமா? என தமிழக பா.ஜ., தலைவர் அண்ணாமலை சவால் விடுத்துள்ளார்.

கேரள மாநிலம் வயநாட்டில் தேர்தல் பிரசாரத்தில் அண்ணாமலை பேசியதாவது: பா.ஜ., வேட்பாளர் சுரேந்திரன் ராகுலை தோற்கடிக்க ஓட்டு கேட்டு வரவில்லை. மக்களுக்கு சேவை செய்ய வந்துள்ளார். கடந்த ஐந்தாண்டுகளில் வயநாடு தொகுதிக்கு என்ன செய்தேன் என ராகுல் வெள்ளை அறிக்கை வெளியிட முடியுமா?.

வயநாடு தொகுதியில் சுரேந்திரன் அதிக ஓட்டு வித்தியாசத்தில் வெற்றி பெறப்போகிறார். 10 முறைக்கும் குறைவாகவே ராகுல் வயநாடு தொகுதி மக்களை சந்தித்துள்ளார். தற்போது அவர் தேர்தல் பிரசாரத்திற்கு மட்டும் வருகிறார். இதன் மூலம் காங்கிரசின் மனநிலை என்ன என்பது தெளிவாகிறது. இவ்வாறு அண்ணாமலை பேசினார்.

### சுப்ரீம் கோர்ட் அறிவுறுத்தல் எதிரொலி:

# பெரிய அளவில் விளம்பரம் வெளியிட்டு மன்னிப்பு கோரியது பதஞ்சலி நிறுவனம்

**புதுடெல்லி, ஏப். 25-**

சுப்ரீம் கோர்ட் அறிவுறுத்தலை அடுத்து 67 தேசிய செய்தித்தாள்களில் பெரிய அளவில் விளம்பரம் வெளியிட்டு நிபந்தனையற்ற பொதுமன்னிப்பு கோரியது பதஞ்சலி நிறுவனம்.

பிரபல யோகா குரு பாபா ராம்தேவின் 'பதஞ்சலி' நிறுவனம் ஆயுர்வேத பல்பொடி, சோப்பு, எண்ணெய் உள்ளிட்ட பல்வேறு பொருட்களை தயாரித்து விற்பனை செய்து வருகிறது. கடந்த மாதம் 'பதஞ்சலி' நிறுவனம் மீது தவறான விளம்பரங்கள் வெளியிடுவதாக கூறி வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கில் பதஞ்சலி விளம்பரங்களில் தவறான தகவல்களை வெளியிடக்கூடாது என்று எச்சரித்த சுப்ரீம் கோர்ட்டு, பதிலளிக்க கோரி அந்நிறுவனத்துக்கு நோட்டீஸ் அனுப்பியது. இதையடுத்து நோட்டீசுக்கு பதிலளிக்காததால், அந்நிறுவனத்தின் இணை நிறுவனர் பாபா ராம்தேவை நேரில் ஆஜராக சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டது.

வழக்கு தொடர்பாக ஏற்கனவே பிரமாண பத்திரம் தாக்கல் செய்த நிலையில் யோகா குரு ராம்தேவ் கடந்த 2-ம் தேதி சுப்ரீம் கோர்ட்டில் நேரில் ஆஜரானார். அப்போது, பிரமாண பத்திரம் திருப்தி அளிக்கவில்லை என நீதிபதிகள் அதிருப்தியை தெரிவித்தனர். ராம்தேவ் சார்பில் ஆஜரான வழக்கறிஞர், இருவரும் தனிப்பட்ட முறையில் நீதிமன்றத்தில் மன்னிப்பு கேட்க தயாராக உள்ளனர். நீதிமன்றம் என்ன சொன்னாலும் அதை செய்ய தயாராக இருக்கிறோம் என்றார். மன்னிப்பு என்ற பெயரில் எதையாவது எழுதி கொடுத்துவிட்டு தப்பித்து விடலாம் என நினைக்காதீர்கள் என பாபா ராம்தேவ் தரப்புக்கு நீதிபதிகள் கண்டனம் தெரிவித்தனர்.

மேலும், நீங்கள் செய்திருப்பது மிக தீவிரமான நீதிமன்ற அவமதிப்பு செயல், மன்னிப்பு என்ற பெயரில் எதையாவது எழுதிக் கொடுத்துவிட்டு தப்பிக்க முடியாது என்று நீதிபதிகள் காட்டத்துடன் தெரிவித்தனர். அத்துடன், புதிய பிரமாண பத்திரத்தை தாக்கல் செய்ய இருவருக்கும் ஒரு வாரம் அவகாசம் அளித்த நீதிபதிகள், வழக்கின் விசாரணையை தள்ளிவைத்தனர்.

இதனை தொடர்ந்து இந்த வழக்கின் விசாரணை கடந்த 16ம் தேதி மீண்டும் நடைபெற்றது. அப்போது எங்களுடைய கருத்துகள், செய்த தவறுக்காக நிபந்தனையற்ற மன்னிப்பை ஏற்க வேண்டும் என்று பாபா ராம்தேவ், ஆச்சார்யா பாலகிருஷ்ணன் வேண்டுகோள் விடுத்தனர். அப்போது குறுக்கீட்ட நீதிபதிகள் மற்ற மருந்து முறைகளை இழிவுபடுத்த அதிகாரம் வழங்கியது யார்?; நிரூபணமற்ற அலோபதி மருந்து விளம்பரங்களை எங்காவது பார்த்துள்ளீர்களா? என்று கேள்வி எழுப்பினர். தொடர்ந்து விளம்பரங்களை வெளியிடுவதில் மாற்றங்கள் செய்வதாக பதஞ்சலி தரப்பில் உத்தரவாதம் அளித்த நிலையில், பதஞ்சலி நிறுவனர் பாபா ராம்தேவ் மற்றும் நிர்வாக இயக்குனர் ஆச்சார்யா பாலகிருஷ்ணன் ஆகியோர் பொது மன்னிப்பு கோர உத்தரவிட்டு வழக்கு விசாரணையை ஏப்ரல் 23ம் தேதிக்கு (அதாவது நேற்று முன்தினம்) ஒத்திவைத்தனர்.

இதையடுத்து அன்றைய தினம் நாளிதழ்களில் விளம்பரம் வெளியிட்டு பாபா ராம்தேவ் பொது மன்னிப்புக் கோரினார். இந்நிலையில், இந்த வழக்கின் விசாரணை நேற்று முன்தினம் நடைபெற்றது. அப்போது நாளிதழ்களில் வெளியிடப்பட்ட பொதுமன்னிப்பு கோரும் விளம்பர நகலை பதஞ்சலி நிறுவன வழக்கறிஞர் தாக்கல் செய்தார். அதனை பார்த்த நீதிபதிகள் மன்னிப்பு கோரும் விளம்பரங்கள் பூதக் கண்ணாடியை வைத்து பார்க்கும் அளவுக்கு சிறிதாக உள்ளது என்றும் பதஞ்சலி நிறுவனத்தின் விளம்பரங்களை இது போன்ற சிறிய அளவில் தான் வெளியிடுவீர்களா? என்று கேள்வி எழுப்பினர். பொருளை விளம்பரப்படுத்துவது போல, மன்னிப்பும் மிகப்பெரிய அளவில் புதிய விளம்பரமாக வெளியிட்டு அதை கோர்ட்டில் தாக்கல் செய்ய வேண்டும் என நீதிபதிகள் உத்தரவிட்டனர். மேலும் இந்த வழக்கு விசாரணையை ஏப்ரல் 30ம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.

இந்நிலையில், சுப்ரீம் கோர்ட் கண்டனத்தை தொடர்ந்து பதஞ்சலி நிறுவனம் 67 தேசிய செய்தித்தாள்களில் நேற்று மீண்டும் பொதுமன்னிப்பு கோரி விளம்பரம் செய்துள்ளது. இந்தி மற்றும் ஆங்கிலம் ஆகிய 2 மொழிகளில் இந்த விளம்பரங்கள் வெளியிடப்பட்டுள்ளது.

# தீர்ப்பு தாமதம்: சுப்ரீம் கோர்ட்டில் ஹேமந்த் சோரன் மனு தாக்கல்

**புதுடெல்லி, ஏப். 25-**


பணமோசடி வழக்கில் அமலாக்கத் துறையின் கைது நடவடிக்கையை எதிர்த்து தாக்கல் செய்த மனு மீதான தீர்ப்பை ஐகோர்ட் தாமதப்படுத்துவதாகக் கூறி, ஜார்கண்ட் முன்னாள் முதல்வர் ஹேமந்த் சோரன் சுப்ரீம்கோர்ட்டை நாடியுள்ளார்.

ஹேமந்த் சோரன் சார்பாக மூத்த வழக்கறிஞர் கபில் சிபல் நேற்று சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் சஞ்சீவ் கண்ணா மற்றும் திபங்கர் தத்தா ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு ஆஜரானார். அப்போது கபில் சிபல், கைது நடவடிக்கையை ரத்து செய்ய வேண்டும் என்று கோரிய மனு ஐகோர்ட்டில் சிக்கியுள்ளது. இந்த கைது நடவடிக்கைக்கு எதிரான மனு மீதான தீர்ப்பை உயர் நீதிமன்றம் பிப்ரவரி 28-ம் தேதிக்கு ஒத்திவைத்தது என்றாலும், இதுவரை தீர்ப்பினை வழங்கவில்லை. இந்த வழக்கை அவசர வழக்காக வெள்ளிக்கிழமை விசாரிக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

ஜார்க்கண்ட் முதல்வர் பதவியை ஹேமந்த் சோரன் ராஜினாமா செய்ததை தொடர்ந்து நில மோசடி தொடர்பான சட்டவிரோத பணப் பரிவர்த்தனை வழக்கில் அவர் கடந்த ஜனவரி 31-ம் தேதி இரவு கைது செய்யப்பட்டார்.


சுரங்கங்களின் உரிமையை சட்டவிரோதமாக மாற்றும் மிகப் பெரிய மோசடி ஜார்க்கண்டில் நடப்பதாக அமலாக்கத் துறை குற்றம்சாட்டியிருந்தது. போலி ஆவணங்கள் மூலம் போலியான விற்பனையாளர்கள் மற்றும் வாங்குபவர்களை காட்டி பல கோடி ரூபாய் மதிப்புள்ள நிலங்களைக் கையகப்படுத்த பெரிய அளவிலான குற்ற நடவடிக்கை நடந்திருப்பதாக கூறப்படும் குற்றச்சாட்டினை அமலாக்கத் துறை விசாரித்து வருகிறது.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....




நாட்டில் உள்ள தொழிலதிபர்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி ரூ.16 லட்சம் கோடி அளவுக்கு கடனை தள்ளுபடி செய்திருக்கிறார். பிரதமர் மோடி தள்ளுபடி செய்த பணத்தை தொழிலதிபர்களிடமிருந்து மீட்டு அதனை நாட்டில் உள்ள 90 சதவீத மக்களுக்கு பகிர்ந்தளிப்பேன். இதனை காங்கிரஸ் தேர்தல் அறிக்கையிலும் உறுதி அளித்திருக்கிறோம்.

- ராகுல் காந்தி




காங்கிரஸ் கட்சி தனது தேர்தல் அறிக்கையில் ஏராளமான வாக்குறுதிகளை அளித்துள்ளது. ஆட்சிக்கு வர முடியாது என்று உறுதியாக தெரிந்திருக்கும் கட்சிதான் இவ்வளவு வாக்குறுதிகளை அளிக்கும்.நாட்டை தலைகீழாக மாற்றுவதற்கு காங்கிரஸ் விரும்புகிறது. எந்த விலை கொடுத்தாவது ஆட்சிக்கு வர விரும்புவதையே அவர்களின் வாக்குறுதிகள் காட்டுகின்றன.

- தேவ கவுடா



காங்கிரசின் தேர்தல் அறிக்கை, தமிழகத்தின் தொலைதூர கிராமங்களை கூட சென்றடைந்துள்ளது. அதோடு நாடு முழுவதும் பேசு பொருளாகவும் மாறியுள்ளது. ஆனால் பா.ஜ.க. தேர்தல் அறிக்கை 2 மணி நேரத்தில் சுவடு தெரியாமல் காணாமல் போனது. அதில் எதுவும் இல்லை என்பதால் யாரும் அதைப்பற்றி பேசுவதில்லை.

- ப.சிதம்பரம்



என் தாயின் தாலி இந்த நாட்டிற்காக தியாகம் செய்யப்பட்டது. இன்று பெண்களை ஓட்டுக்காக பயமுறுத்துகிறார்கள். மணிப்பூர் பெண்களின் தாலி குறித்து கவலைப்பட்டாரா? பண மதிப்பிழப்பு நடவடிக்கையின் போது எனது சகோதரிகள் தங்களுடைய தாலியை அடமானம் வைக்க நேரிட்டபோது, பிரதமர் எங்கே இருந்தார்?

- பிரியங்கா காந்தி



• பாராளுமன்ற தேர்தல் வாக்குப்பதிவு நிறைவடைந்ததை யொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலினை அவரது இல்லத்தில் தமிழக நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் பெரியசாமி, வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் மூர்த்தி, சட்டமன்ற உறுப்பினர், தேனி தெற்கு மாவட்ட செயலாளர் ராமகிருஷ்ணன், சட்டமன்ற உறுப்பினர்கள் மகாராஜன்,வெங்கடேசன், சரவணகுமார், தேனி மக்களவைத் தொகுதி வேட்பாளர் தங்க தமிழ்ச்செல்வன், மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் மு.மணிமாறன் மற்றும் நிர்வாகிகள் மரியாதை நிமித்தமாக சந்தித்து பேசினார்கள்.

# ஆட்டிசம் குழந்தைகளுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி: விருதுநகர் கலெக்டர் ஜெயசீலன் துவக்கி வைத்தார்



**விருதுநகர், ஏப். 25-**

விருதுநகர் மாவட்ட மருத்துவக்கல்லூரியில், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவ மனையின் குழந்தைகள் நலத்துறை மற்றும் மனநலத் துறை சார்பாக, உலக ஆட்டிசம் தினத்தை முன்னிட்டு சிறப்பு குழந்தைகளுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சியினை மாவட்ட கலெக்டர் ஜெயசீலன். குத்துவிளக் கேற்றி துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டர் தெரிவித்ததாவது:

ஆட்டிசம் என்னும் மூளை வளர்ச்சிக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டவர்களை எப்படிக் கையாள வேண்டும், எந்த முறையில் அனுசரித்து நடந்துகொள்ள வேண்டும் என்பதை உணர்த்தும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 2 ஆம் நாள் அனுசரிக்கப்படுகிறது. உலகம் முழுவதும் மதியிறுக்க நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் சுமார் 1.5 சதவீதம் பேர் உள்ளனர் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இது தொடர்பான அறிவியல் வளர்ச்சி மற்றும் அரசின் திட்டங்கள் நிறைய இருக்கின்றன.

இதுபோன்ற நிறைய பயிற்சிகள் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்துவதன் மூலமாக ஆட்டிசம் குறைபாடு, மனநல மருத்துவம் சார்ந்த பிரச்சனைகளுக்கு தேவையான அறிவியல் பயன்களை ஏழை எளிய மக்களுக்கும் எடுத்துச் செல்வது மிகவும் தேவையாக இருக்கிறது. எனவே மருத்துவ கல்லூரிகளும், அரசு மருத்துவமனைகளும் பொதுமக்களிடையே இது போன்ற நிகழ்ச்சிகள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாற்றுத்திறன் உள்ள குழந்தைகளுக்கு கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது. ஆத்திச்சூடி ஒப்புவித்தல், யோகா, சிலம்பாட்டம் மற்றும் நடனம் என பல்வேறு நிகழ்ச்சிகளில் இக்குழந்தைகள் பங்கேற்றனர்.

இந்நிகழ்ச்சியில், அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர் சீதாலட்சுமி, குழந்தைகள் நலத்துறைத் துறைத்தலைவர் பேராசிரியர் வெங்கட்ராமன், மருத்துவக் கல்லூரி மனநலத் துறை பேராசிரியர் .ராஜசேகரன் மற்றும் ஆட்டிசம் குறைபாடுடைய குழந்தைகள், பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# கடும் வெயில்: ராமேஸ்வரத்தில் மக்களின் தாகம் தீர்க்க இலவச நீர் மோர் வழங்கல்

## டி.எஸ்.பி துவங்கி வைத்தார்



**ராமேஸ்வரம், ஏப். 25-**

ராமேஸ்வரத்தில் கடுமையான வெப்பத்தின் தாக்கத்திலிருந்து பொதுமக்களின் தாகத்தை தனிப்பதற்கு அகமுடையார் சங்கம் பேரவை சார்பாக இலவசமாக நீர் மோர் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

தமிழகம் முழுவதும் வெப்பத்தின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது இந்த நிலையில் தமிழக வானிலை மையம் ஜூன் மாதம் வரை வெப்பத்தின் தாக்கம் அதிகமாக இருக்கும் என அறிவித்துள்ளது.

அதன் ஒரு பகுதியாக நான்கு பக்கமும் கடல் சூழ்ந்த ராமேஸ்வரம் பகுதி முழுவதும் கடுமையான வெப்ப தாக்குதல் உள்ளது. இந்த வெப்ப தாக்குதலில் ராமேசுவரம் திருக்கோவிலுக்கு வருகை தரும் பக்தர்களும்,கிராம பகுதியிரிருந்து வர்த்தக ரீதியாக நகர் பகுதியில் வருகை தரும் பொது மக்களும் சோர்வடைந்து பாதிக்கப்படைந்து வருகின்றனர்.

இதனால் பக்தர்கள் மற்றும் பொதுமக்களும் வெப்பத்தின் தாக்கத்திலிருந்து தாகத்தை தனிப்பதற்காக ராமேஸ்வரம் அகமுடையார் சங்கம் பேரவை சார்பில் ஜூன் மாதம் வரை இலவசமாக நீர் மோர் வழங்கும் பந்தல் நேற்று மேலா வாசல் பகுதியில் திறக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் சங்கத்தலைவர் என்.ஜெ.போஸ் தலைமை வகித்தார். ராமேஸ்வரம் காவல் துறை துணை கண்காணிப்பாளர் உமா தேவி நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு நீர்,மோரை வழங்கி நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். இதனையடுத்து அந்த பகுதியில் ஏறத்தாழ 200 க்கு மேற்பட்ட பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் நீர் மோர் வாங்கி தன் தாகத்தை தனித்துக் கொண்டு சென்றனர்.இந்த நிகழ்ச்சியில் வழக்கறிஞர் சரவணன்,முன்னாள் நகர் மன்ற உறுப்பினர் ராதாகிருஷ்ணன் ,மீனவர் கூட்டறவு சங்க தலைவர் ராதா உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



• ராஜபாளையத்தில் குவைத் ராஜாவின் பிறந்தநாளை முன்னிட்டு பல நூற்றுக்கும் மேற்பட்ட பெண்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்



• அருப்புக்கோட்டை நாடார்கள் உறவின் முறைக்கு பாத்தியப்பட்ட அமுதலிங்கேஸ்வரர் திருக்கோவிலில் சித்திரகுப்தர் சிறப்பு அலங்காரத்தில் பொதுமக்களுக்கு அருள் பாலத்த காட்சி

# வத்தலகுண்டு அருகே மானாவரி நிலத்தில் வெயிலின் காரணமாக பற்றி எரிந்த திடீர் தீ



**வத்தலக்குண்டு ஏப் 25**

திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை வத்தலகுண்டு மெயின் ரோட்டில் மானாவரி நிலத்தில் கடும் வெயிலின் காரணமாக திடீரென தீ பிடிததது. இந்த தீ மள மளவென பிடித்து 10 ஏக்கருக்கு மேல் இருந்த மானாவரி நிலத்தில் தீப்பிடித்தது கருகிய குழுக்கள் மற்றும் செடிகள் அனைத்தும் எரிந்தது இந் நிலையில் தீ குடியிருப்பு பகுதிகளுக்கும் விவசாய நிலங்களுக்கும் பரவிவிடும் என்ற அச்சத்தில் அருகில் இருந்தவர்கள் தீயணைப்பு நிலையத்திற்கு தகவல் கொடுத்தனர் நிலக்கோட்டை தீயணைப்பு நிலைய அதிகாரி பாஸ்கரன் தலைமையில் தீயணைப்பு நிலைய வீரர்கள் விரைந்து சென்று இரண்டு மணி நேர போராட்டத்திற்கு பின் தீயை பரவ விடாமல் கட்டுக்குள் கொண்டு வந்தனர் இதனால் இப்பகுதியில் புகை மண்டலமாக காட்சியளித்தது கடும் வெப்பநிலை நாளுக்கு நாள் அதிகரித்த நிலையிலும் வெப்ப அலை கூடியதாகும் இந்த திடீர் தீ ஏற்பட்டுள்ளது. பரவி வரும் தீயை அணைக்க கிராம மக்களும் உதவி செய்தனர் மேலும் திடீர் தீ ஏற்படுவதால் கிராம மக்கள் மற்றும் இருசக்கர நான்கு சக்கர வாகன ஓட்டிகள் இப்பகுதி வழியாக பயணிப்போர் பாதுகாப்பாக இருக்க வேண்டுமென தீயணைப்பு துறையினர் கேட்டுக்கொண்டனர்

# குஜிலியம்பாறை தாலுகாவில் உலக பூமி தினவிழா



**குஜிலியம்பாறை, ஏப் 25-**

குஜிலியம்பாறை தாலுகாவில் எள் ஹாப் மற்றும் ரோஸ் அறகட்டளை சார்பாக உலக பூமி தினவிழா கொண்டாடப்பட்டது. இந்த பூமி திருவிழா வடுகம்பாடி, உல்லியக்கோட்டை, எல்லைப்பட்டி புதூர், கரிக்காலி, சின்னழகு நாயக்கனூர், போன்ற ஊர்களில் உள்ள குழந்தைகள் விழிப்புணர்வு மையத்தில் நடைபெற்றது.

இதன் மூலம் பிளாஸ்டிக் பயன்பாட்டை தவிர்ப்போம் பூமியை காப்போம் என்று மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இந்த நிகழ்ச்சியில் மைய பணியாளர்கள் கஸ்தூரி, சண்முகவடிவு, மகேஸ்வரி, துளசிமணி, வான்மதி, நிகழ்ச்சியை நடத்தினார்கள். நிகழ்ச்சி ஏற்பாட்டை ஒருங்கிணைப்பாளர்கள் மகாலட்சுமி மற்றும் ரூபன் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.

# எஸ்.ஐ. வாக்கி டாக்கி மாயமான வழக்கில் இளைஞர் விடுதலை

**அருப்புக்கோட்டை ஏப். 25.**

நரிக்குடி அருகே அ. முக்குலம் காவல் நிலையத்தில் எஸ்.ஐ. மணிகண்டன் வாக்கி டாக்கி மாயமான வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட தவக்கண்ணனை 25 திருச்சுழி நீதிமன்றம் விடுதலை செய்து உத்தரவிட்டுள்ளது. நரிக்குடி அ முக்குளம் போலீஸ் ஸ்டேஷனில் 2020 மார்ச் 21 இல் எஸ் ஐ மணிகண்டன் பணியாற்றினார். அப்போது அவரது வாக்கி டாக்கி மாயமானது. அன்று பாஸ்போர்ட் விசாரணைக்கு வந்த எஸ் மறைகுளத்தைச் சேர்ந்த தவக்கண்ணன் திருடினார் என எனவும் மேலும் குடிபோதையில் அரசு சொத்தை சேதப்படுத்தி ஆபாசமாக பேசியதாக எஸ்ஐ மணிகண்டன் அவர் மீது வழக்கு தொடர்ந்தார். திருச்சுழி உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றத்தில் விசாரணை நடந்தது. நீதிமன்ற விசாரணையில் தவக்கண்ணன் குற்றமற்றவர் என விடுதலை செய்து நீதிபதி அபர்ணா தீர்ப்பளித்தார்.

கள்ளிக்குடி பகுதியில் தொழிற்சாலையை நிரந்தரமாக மூடக்கோரி

# சாலை மறியலில் ஈடுபட்ட முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் கைது



**திருமங்கலம், ஏப். 25-**

திருமங்கலம் சட்டமன்ற தொகுதி கள்ளிக்குடி பகுதியில் பொதுமக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்திடும் கேரள மாநில தனியார் தொழிற்சாலையை நிரந்தரமாக மூடக்கோரி முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் தலைமையில் நடைபெற்ற சாலை மறியல் போராட்டத்தில் 200க்கும் மேற்பட்டோரை காவல் துறையினர் கைது செய்தனர்.

மதுரை மாவட்டம் கள்ளிக்குடி தாலுகா கே.சென்னம்பட்டி பகுதியில் கேரளாவைச் சேர்ந்த தனியார் கழிவு சுத்திகரிப்பு தொழிற்சாலை நிறுவனம் செயல்பட்டு வருகிறது.இந்த நிறுவனத்தில் கோழி,இறைச்சி கழிவுகளை சுத்திகரித்து உரமாக மாற்றும் பணி நடைபெறுகிறது. இதனால் அந்த பகுதியை சுற்றியுள்ள கிராமங்களில் நிலத்தடி நீர் பாதிப்பு,காற்று மாசு மற்றும் பொதுமக்களுக்கு தொற்று நோய்கள் ஏற்படுவதாக கூறி ஆறு கிராமங்களின் மக்கள் கடந்த வாரம் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலை புறக்கணித்தனர். இந்த நிலையில் மாசு கட்டுப்பாடு வாரியத்திடம் மதுரை மாவட்ட ஆட்சியர் இது சம்பந்தமாக அறிக்கை கேட்டிருந்தார், அதற்கு பதில் அளித்த மாசு கட்டுப்பாட்டு வாரியம் அந்த தொழிற்சாலை சட்ட விதிகளுக்கு உட்பட்டு இயங்குவதாக தெரிவித்திருந்தது.

இந்நிலையில் பொதுமக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்திடும் இந்த தொழிற்சாலையை நிரந்தரமாக மூடக் கோரி முன்னாள் அமைச்சர், சட்டமன்ற எதிர்க்கட்சித் துணை தலைவர் ஆர்.பி.உதயகுமார்,இந்த பகுதி சேர்ந்த நூற்றுக்கணக்கான பொதுமக்களுடன் இணைந்து கொளுத்தும் வெயிலில் கள்ளிக்குடி தேசிய நெடுஞ்சாலையில் அமர்ந்து சாலை மறியல் ஈடுபட்டார்.

அப்போது தமிழக அரசு இந்த ஆலையை நிரந்தரமாக மூட வேண்டும் ஆலையை மூடும் வரை தொடர் போராட்டம் நடத்துவோம் என்று கண்டன முழக்கங்கள் எழுப்பப்பட்டது.இதனைத் தொடர்ந்து திருமங்கலம் டி.எஸ்.பி.அருள் தலைமையிலான காவல்துறையினர் முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் உள்ளிட்ட 200க்கும் மேற்பட்டோரை கைது செய்து வேனில் ஏற்றி அகத்தாபட்டியிலுள்ள சமுதாய கூடத்திற்கு கொண்டு சென்றனர்.

முன்னதாக முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் கூறுகையில்:

கள்ளிக்குடி ஒன்றியம், சென்னம்பட்டி, ஆவல்சூரன்பட்டி கிராமத்தில் கோழி கழிவுகள் மற்றும் மருத்துவக் கழிவுகள் மக்கச் செய்யும் தொழிற்சாலை யால் சுற்றுச்சூழல் மாசு அடைந்து மக்களுக்கு புற்றுநோய் மற்றும் கொடிய தொற்று நோய் ஏற்படும சூழ்நிலை உள்ளது. இதனால் அப்பகுதி கிராம மக்கள் இந்த தொழிற்சாலையை அகற்ற வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். தற்போது இந்த கழிவு தொழிற் சாலையால் மக்களுக்கு எந்த முன்னேற்றமும் இல்லை, மக்களுக்கு கேடு விளைவிக்கும் இந்த தொழிற்சாலையை எங்கே வேண்டுமானாலும் மாற்றி கொள்ளட்டும் ஆனால் மக்களின் விருப்பத்துக்கு மாறாக இயங்கக் கூடாது நிரந்தரமாக மூட வேண்டும்.கழிவுகளை கொட்டுவதற்கு இந்த இடத்தை தேர்வு செய்தால் மக்கள் அனுமதிக்க மாட்டார்கள் இது பொன் விளையும் பூமி. மக்களுக்காக தான் திட்டங்களே தவிர திட்டங்களுக்காக மக்கள் இருக்ககூடாது என்று கூறினார். அப்போது கட்சி நிர்வாகிகள், பொது மக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் உடனிருந்தனர்.

# ராஜபாளையத்தில் ராம்கோ நிறுவனர் பி.ஏ.சி. ராமசாமி ராஜா பிறந்த தின விழா



**ராஜபாளையம், ஏப். 25-**

ராஜபாளையத்தில் ராம்கோ நிறுவனத்தை பல ஆண்டுகளுக்கு முன்பு நிறுவி பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கி ராஜபாளையத்தை தொழில் நகரமாக மாற்றிய பெருமை ராம்கோ நிறுவனர் பி.ஏ.சி. ராமசாமி ராஜா 130வது பிறந்த தின விழா ராஜபாளையத்தில் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

காலையில் சஞ்சீவி மலை அடிவாரத்தில் உள்ள அன்னாரது நினைவாலயத்திற்கு அன்னாரது பேரனும் ராம்கோ சேர்மனுமான பி ஆர் வெங்கட்ராமராஜா தலைமையில் முக்கிய பிரமுகர்கள் மாலை அணிவித்து மலர் தூவி மலர் அஞ்சலி செலுத்தினார்கள். பி.ஏ.சி. ராமசாமி ராஜா நினைவு இசைப்பள்ளி மாணவ, மாணவிகள் இசை அஞ்சலி நடத்தினார்கள்.

தொடர்ந்து ராஜபாளையம் தென்காசி சாலையில் உள்ள அன்னாரது திரு உருவ சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு பொதுமக்களுக்கு சர்க்கரை பொங்கல் வழங்கப்பட்டது. ராஜபாளையம் சொக்கர் கோவிலில் முன்பு வைக்கப்பட்டிருந்த பிஏசி ராமசாமி ராஜா திருவுருவப் படத்திற்கு சிறப்பு வழிபாடு நடத்தப்பட்டது. தொடர் ஓட்டம் மூலம் ஜோதி எடுத்துச் செல்லும் துலுக்கபட்டி ஆர். ஆர். நகர் சிமெண்ட் தொழிற்சாலை ஊழியர்களுக்கு ராம்கோ சேர்மன் பி. ஆர். வெங்கட்ராம ராஜா ஜோதியை எடுத்துக் கொடுத்தார். தொடர்ந்து அன்னாரது இல்லமான ராம மந்திரத்தில் சிறப்பு வழிபாடு நடத்தப்பட்டது.

# ரமணா ஆசிரமம் சார்பில் அரசு பள்ளிக்கு கூடுதல் வகுப்பறை கட்டிடம் கட்ட பூமிபூஜை

**அருப்புக்கோட்டை ஏப்.25.**

திருச்சியில் சேதுபதி அரசு மேல்நிலைப் பள்ளியில் திருவண்ணாமலை ரமண ஆசிரமம் சார்பில் ஒரு 1.50 கோடியில் கூடுதல் வகுப்பறை கட்டிடத்திற்கு பூமி பூஜை நடைபெற்றது.

திருச்சுழியில் சேதுபதி அரசு மேல்நிலைப் பள்ளியில் ஆயிரம் மேற்பட்ட மாணவ, மாணவிகள் படிக்கின்றனர். 450 பேர் படிக்கின்ற வகையில் வகுப்பறை உள்ளது. இதனால் இட நெருக்கடி ஏற்பட்டது. விளையாட்டு மைதானம், ஆய்வகம் போன்ற வசதிகளும் இல்லை, கூடுதல் வகுப்பறைகள் கட்டிடங்கள் கட்டப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை பள்ளியின் சார்பாக திருவண்ணாமலை ரமணாஸ் நிர்வாகத்திடம் வைத்தனர் .ஆசிரம நிர்வாகிகள் பள்ளியில் ஆய்வு செய்தனர். பின்னர் மாவட்ட நிர்வாகத்தின் அனுமதி பெற்று கூடுதல் வகுப்பறைகள் 1.50 கோடியில் செலவில் கட்டுவதற்காக பூமி பூஜை நேற்று நடைபெற்றது. இதில் ஆறு வகுப்பறைகள், தண்ணீர் வசதி கூடிய கழிப்பறைகள் கட்டப்பட உள்ளன. ஆசிரம நிர்வாகி சந்திரமௌலி, இன்ஜினியர் வெங்கடேசன், பள்ளி தலைமை ஆசிரியர் சித்திரவேல் மற்றும் ஆசிரியர்கள் பூமி பூஜையில் கலந்து கொண்டனர்.

### புதுச்சேரி மாநிலம் காரைக்காலில்

# வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டு சீல் வைக்கப்பட்ட அறை: கலெக்டர் மணிகண்டன் ஆய்வு



**புதுச்சேரி,ஏப்.25-**

புதுவை அரசு காரைக்கால் மாவட்டத்தில் 2024-நாடாளுமன்ற தேர்தல் நடைபெற்று அனைத்து வாக்கு இயந்திரங்களும் அறிஞர் அண்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள பட்ட மேற்படிப்பு மையத்தின் புதுச்சேரி பாதுகாப்பு அரையில் வைக்கப்பட்டு சீல் வைக்கப்பட்ட நிலையில் மாவட்ட ஆட்சியரும் மாவட்ட தேர்தல் அதிகாரியமான து. மணிகண்டன் இன்று அந்த மையத்திற்கு சென்று அங்கு அமைக்கப்பட்டுள்ள C C T V வீடியோ கேமராவில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

மேலும் அங்கு பணியில் இருக்கும் காவல்துறையினரிடம் விழிப்புடன் பணியாற்றுமாறு கேட்டுக் கொண்டார்கள். அங்கு 24 மணி நேரமும் உள்ளூர் காவலர்கள் மற்றும் மத்திய பாதுகாப்பு படையினரின் மூன்றடுக்கு பாதுகாப்பு அமைக்கப்பட்டுள்ளன.

### புதுச்சேரியில்

# மதுபான விற்பனை நேரத்தை நீடிக்க அனுமதி கோரும் கலால் துறை

## மக்கள் வாழ்வுரிமை இயக்க செயலாளர் ஜெகநாதன் கண்டனம்

**புதுச்சேரி ஏப். 25,**

புதுச்சேரியில் முதல் கட்ட நாடாளுமன்றத் தேர்தல் முடிந்துள்ள நிலையில் மதுபான கடைகளின் விற்பனை மற்றும் நுகரும் நேரத்தை நீட்டிக்க வேண்டும் என கலால் துறை தேர்தல் துறைக்கு அனுப்பி உள்ள கடிதத்தை மக்கள் நலன் கருதி உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என மக்கள் வாழ்வுரிமை இயக்கம் மக்கள் நலன் சார்ந்து வலியுறுத்துகிறது. சென்னை உயர்நீதிமன்றம் நீதிபதி ஆனந்த வெங்கடேஷ் அவர்கள் சில தினங்களுக்கு முன்னர் விபத்து வழக்கில் மரணம் அடைந்த நபரின் மதுவின் அளவு எவ்வளவு என பரிசோதனை செய்து அதன்படி நட்ட ஈடு வழங்க வேண்டும் என தீர்ப்பு வழங்கியுள்ளார்.

அந்தத் தீர்ப்பில் அரசு மதுபானம் விற்றதன் மூலம் தான் மேற்கண்ட விபத்து ஏற்பட்டதற்கு அரசு தான் முழு பொறுப்பேற்க வேண்டும் என சமூக அக்கறையோடு தீர்ப்பை அளித்துள்ளார். இதனை மக்கள் வாழ்வுரிமை இயக்கம் வரவேற்கிறது.

புதுச்சேரி மற்றும் தமிழ்நாடு அரசுகள் மதுக் கொள்கையில் மாற்றம் கொண்டு வந்து, படிப்படியாக மது விற்பனையின் நேரத்தையும் மற்றும் கடைகளையும் குறைத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும். மது விற்பனை மூலம் கோடி கணக்கில் வருவாய் பார்த்து மக்கள் உயிரோடு விளையாடுவது ஏற்கத்தக்கது அல்ல. புதுச்சேரி அரசும் கலால் துறையும் தேர்தல் துறைக்கு அனுப்பியுள்ள மது விற்பனைக்கான நேரத்தை நீட்டிக்க வேண்டும் எனும் கடிதத்தை திரும்ப பெற வேண்டும். 482- சதுர கிலோமீட்டர் பரப்பளவு கொண்ட புதுச்சேரியில் மதுபான கடைகளும், ரெஸ்ட்ரோ பார்களும் புற்றீசல் போல் முளைத்து மக்களின் நாடி, நரம்பு, எலும்பு, சதை மற்றும் புத்தி என அனைத்திலும் குடிவெறியை உருவாக்கியுள்ளது, மக்கள் நலன் சார்ந்த அரசுக்கு அழகல்ல. எனவே உடனடியாக கலால் துறை அனுப்பிய நேர நீட்டிப்பு கடிதத்தை திரும்ப பெற வேண்டும் என வலியுறுத்துகிறோம்.

மேலும் தேர்தல் துறை எக்காரணத்தைக் கொண்டும், மதுபான விற்பனை நேரத்தையும் மற்றும் மது நுகர்வு நேரத்தையும் 11 மணி என நேர நீட்டிப்பு செய்ய அனுமதி அளிக்கக்கூடாது, கலால் துறையின் நேர நீட்டிப்பு கடிதத்தை சமூக நலன் கருதி ஏற்கக் கூடாது என மக்கள் வாழ்வுரிமை இயக்கம் சார்பாக வலியுறுத்துகிறோம்.

# கடலூர் கோ ஆப் டெக்ஸ் பருத்தி சேலை சிறப்பு விற்பனை கண்காட்சி

## மண்டல மேலாளர் சுப்ரமணியன் தொடங்கி வைத்தார்



**கடலூர் ஏப்.25**

கடலூர் கோ ஆப் டெக்ஸ் பருத்தி சேலை அதிரடி சிறப்பு விற்பனை கண்காட்சியை கடலூர் மண்டல மேலாளர் சுப்ரமணியன் குத்துவிளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார்.

தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் நெசவாளர்களின் கை வண்ணத்தில் உருவான பருத்தி சேலைகளான நெகமம் பருத்தி சேலை, அருப்புக் கோட்டை பருத்தி சேலை , மணமேடு பருத்தி சேலை , செட்டிநாடு பருத்தி சேலை , சுங்குடி பருத்தி சேலை , ஜெயங்கொண்டம் பருத்தி சேலை , திண்டுக்கல் பருத்தி சேலை , சேலம் பருத்தி சேலை மற்றும் ஆர்கானிக் பருத்தி சேலை ஆகிய அனைத்து ரகங்களையும் வாடிக்கையாளர்கள் வாங்கி பயன்பெறலாம் , இந்த கண்காட்சியானது மே மாதம் 31ஆம் தேதி வரை நடைபெறும். கடலூர் மண்டலம் சார்பாக 50 லட்சம் ரூபாய் விற்பனை நடைபெறும் என்று கடலூர் மண்டல மேலாளர் சுப்ரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் முதல் விற்பனையை மேல் கவரப்பட்டு ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் கோமதி தொடங்கி வைத்தார் மற்றும் கே.என்.சி. மகளிர் கல்லூரி உதவி ப் பேராசிரியர் ஸ்ரீதேவி சுந்தர பாலன் , வழக்கறிஞர் சித்ரா ஆகியோர் துவக்கி வைத்தனர். முல்லை கோ ஆப் டெக்ஸ் விற்பனை நிலைய மேலாளர் விமல்ராஜ் , விஜய் சங்கர் மற்றும் மண்டல அலுவலக பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

# அரக்கோணம் நெமிலி நகரில் அன்னதானம்: சாஸ்தா சங்கம் வழங்கியது

**அரக்கோணம் ஏப். 25**

ராணிப்பேட்டை மாவட்டம் நெமிலி நகர பேருந்து நிலையத்தில் சித்ரா பௌர்ணமி தினத்தை முன்னிட்டு ஸ்ரீ தர்ம சாஸ்தா ஐயப்பா சேவா சங்கம் சார்பில் அன்னதானம் வழங்கப்பட்டது

இந்த நிகழ்ச்சிக்கு ஸ்ரீ தர்ம சாஸ்தா ஐயப்பா சேவா சங்க தலைவர் நெமிலி சத்ய மூர்த்தி தலைமை தாங்கினார் அங்காளம்மன் மற்றும் கன்னியம்மன் அருள்பெற்ற அகவலம் ஏ.கே. செட்டியார் குருசாமி அன்னதானம் ஏற்பாடு செய்திருந்தார்

இந்த நிகழ்வில் ஆன்மீக வள்ளல்கள். வேட்டாங்குளம் மோகன், நெமிலி செல்வம், ரவி, வெங்கடேசன், நவநீதகிருஷ்ணன், முருகன், ஆகியோருடன் சக்திவேலு, சென்னை சீனிவாசன், மண்ணூர் ரஞ்சித், அகவலம் பிரபு, அகவலம் செல்வம், பெருவளையம் பசுபதி, புன்னை சுப்பன், மானாமதுரை பொன்னுசாமி, அண்ணாமலை, மெக்கானிக் சேகர், சென்னை செங்காடு ராஜசேகர் உள்ளிட்டவர்களும் அன்னதானம் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு 500-க்கும் மேற்பட்ட பொது மக்களுக்கு அன்னதானம் வழங்கினார்கள்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
No. 61, Cuddalore Main Road, Mudaliyarpet, Puducherry-4.
Ph:0413-2280613
E-Mail: pondyedi@thinaboomi.com
RNI.Regn No.Pontam 2002/7660
EDITOR: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

### நாடாளுமன்ற தேர்தல் முடிந்ததை தொடர்ந்து

# வாக்கு எண்ணிக்கை தொடர்பாக வேட்பாளர்கள் மற்றும் முகவர்களுடனான ஆலோசனைக்கூட்டம்

## விழுப்புரம் கலெக்டர் சி.பழனி தலைமையில் நடந்தது



**விழுப்புரம்,ஏப். 25,**

விழுப்புரம் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் 13.விழுப்புரம் (தனி) நாடாளுமன்ற தொகுதி தேர்தல் வாக்குப்பதிவு நடைபெற்று முடிந்ததை தொடர்ந்து வாக்கு எண்ணிக்கை தொடர்பாக வேட்பாளர்கள் மற்றும் முகவர்களுடனான ஆலோசனைக்கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர்,கலெக்டர் டாக்டர் சி.பழனி தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட தேர்தல் அலுவலர்,கலெக்டர் தெரிவிக்கையில் இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி விழுப்புரம் மாவட்டத்தில் 13.விழுப்புரம் (தனி) நாடாளுமன்ற தொகுதிக்கான தேர்தல் நடைபெற்று முடிந்த நிலையில் 06 சட்டமன்ற தொகுதிகளில் வாக்குப்பதிவான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் விழுப்புரம் அறிஞர் அண்ணா அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அறைகளில் (Strong Room) வைக்கப்பட்டு கண்காணிப்பு கேமராக்கள் மூலம் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில் எதிர்வரும் 04.06.2024 அன்று 13.விழுப்புரம் (தனி) நாடாளுமன்ற தொகுதி தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணும் பணி விழுப்புரம் அறிஞர் அண்ணா அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

அதனடிப்படையில் விழுப்புரம் (தனி) நாடாளுமன்ற தேர்தலில் பதிவான அஞ்சல் வாக்குகள் விழுப்புரம் மாவட்டம் ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள St r ong Ro o m-ல் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. வாக்கு எண்ணிக்கைக்காக 04.06.2024 அன்று காலை 6.00 மணியளவில் வேட்பாளர்கள் முன்னிலையில் St r ong Ro om திறக்கப்படும். இங்கு உள்ள அஞ்சல் வாக்கு சீட்டுகள் வாக்கு எண்ணிக்கை மையத்திற்கு வாக்கு எண்ணிக்கைக்காக எடுத்துச் செல்லப்பட உள்ளதால் வேட்பாளர்கள் விரும்பினால் அஞ்சல் வாக்குசீட்டுகள் எடுத்து செல்லப்பட உள்ளதை கண்காணித்துக் கொள்ளலாம்.

வாக்கு எண்ணிக்கை விழுப்புரம் அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரியில் 04.06.2024 அன்று காலை 8.00 மணியளவில் துவங்கப்படும். எனவே வாக்கு எண்ணிக்கையில் பங்கேற்பதற்காக வருகைபுரியும் வேட்பாளர்கள் மற்றும் முகவர்கள் தங்களுடைய இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்களை மாவட்ட விளையாட்டு அலுவலக மைதானத்தில் நிறுத்திக் கொள்ள வேண்டும். வாக்கு எண்ணும் மையத்தில் வாகனங்கள் கொண்டு வருவதற்கோ நிறுத்துவதற்கோ அனுமதி இல்லை.

வாக்கு எண்ணிக்கையின் போது முதலில் அஞ்சல் வாக்கு எண்ணிக்கை துவங்கப்படும். இதனை தொடர்ந்து 30 நிமிடங்கள் கழித்து மின்னணு வாக்குபதிவு இயந்திரத்தில் பதிவாகியுள்ள வாக்குகளின் எண்ணிக்கை துவங்கப்படும். சேவை வாக்காளர்களின் ஸ்கேனர் மூலம் வாக்கு சீட்டின் உண்மை தன்மையை உறுதி செய்யப்பட்டு சரியான வாக்கு சீட்டுகள் அஞ்சல் வாக்கு சீட்டுகளுடன் சேர்த்து எண்ணப்படும்.

விழுப்புரம் (தனி) பாராளுமன்ற தொகுதியில் உள்ள 6 சட்டமன்ற தொகுதியில் வாக்கு எண்ணிக்கைக்காக ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கும் 14 வுயடிடந-கள் தயார் செய்யப்படவுள்ளது. வேட்பாளர்கள் அவர்களின் சார்பாக ஒரு வுயடிடந-க்கு ஒரு வாக்கு எண்ணிக்கை முகவர் மற்றும் ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கும் ஒரு தலைமை முகவர் நியமனம் செய்திட மாவட்ட தேர்தல் அலுவலர்,கலெக்டர் அவர்களிடம் உரிய விண்ணப்பம் அளித்து அவர்களுக்குரிய ஆளரி சான்றிதழினை 23.05.2024-க்குள் பெற்றுக் கொள்ள வேண்டும்.

அஞ்சல் வாக்கு சீட்டுகள் தேர்தல் நடத்தும் அலுவலரின் முன்னிலையில் தனி அறையில் அமைக்கப்பட்டு வாக்கு எண்ணிக்கை நடைபெற உள்ளது. வேட்பாளர்கள் அவர்களின் சார்பாக ஒரு வாக்கு எண்ணிக்கை முகவரை நியமனம் செய்திட மாவட்ட தேர்தல் அலுவலர், கலெக்டர் அவர்களிடம் உரிய விண்ணப்பம் அளித்து அவர்களுக்குரிய ஆளரி சான்றிதழினை 23.05.2024-க்குள் பெற்றுக் கொள்ள வேண்டும்.

வாக்கு எண்ணிக்கை மையத்திற்கு வரும் வேட்பாளர்கள் மற்றும் முகவர்கள் செல்போன் கொண்டு வர அனுமதிக்கப்படமாட்டார்கள். எனவே செல்போன் கொண்டு வருவதை தவிர்த்திட வேண்டும். சட்டமன்ற தொகுதி வாரியாக அமைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு வாக்கு எண்ணிக்கை மையத்திற்கும் அனுமதிக்கப்படும் முகவர்கள் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள சட்டமன்ற தொகுதி வுயடிடந-லில் மட்டுமே இருக்க வேண்டும். வுயடிடந -மாறி அமரவோ வெளியே சென்று வரவோ அனுமதிக்கப்பட்ட இடத்தை தவிர்த்து வேறு இடத்திற்கு செல்லவோ கூடாது. வேட்பாளர்களின் முகவர்கள் வாக்கு எண்ணும் பணிக்கு எவ்வித இடையூறும் ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் கூச்சல்கள் சத்தமிடுதல் போன்ற செயல்கள் ஏதுமில்லாமல் அமைதியை கடைப்பிடித்து வாக்கு எண்ணிக்கையை நல்லமுறையில் நடத்தி முடிக்க முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும். வேட்பாளர்கள் அல்லது அவர்களது தலைமை தேர்தல் முகவர்கள் தவிர வேறு எவரும் வாக்கு எண்ணிக்கை மையத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

வாக்கு எண்ணிக்கை மைய முகவர்களுக்கு உணவு குடிநீர் சிற்றுண்டி தேநீர் முதலியவை வேட்பாளர்கள் சார்பாக நியமனம் செய்யும் பிரதிநிதிகள் மூலமாக வழங்கப்பட வேண்டும். இதற்குரிய பிரதிநிதி பட்டியலை 6 சட்டமன்ற தொகுதிக்கும் கடிதம் மூலம் 25.05.2024-க்குள் தெரிவித்திட வேண்டும்.

EVM - வாக்கு எண்ணிக்கை நடைபெற்று முடிந்த பின்பு VVPAT - எண்ணிக்கையை ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கும் குலுக்கல் முறையில் உதவி தேர்தல் நடத்தும் அலுவலரால் வாக்குச்சாவடி மையம் தேர்வு செய்யப்பட்டு அதற்குரிய VV P A T-சீட்டுகள் எண்ணிக்கை நடைபெறும். மேற்படி VVP AT - எண்ணிக்கைக்கு தேர்வு செய்யப்பட்ட 5 வாக்குச்சாவடி மையங்களின் VVPAT -சீட்டுகள் எண்ணிக்கை அந்தந்த சட்டமன்ற தொகுதிக்குரிய வாக்கு எண்ணிக்கை மையத்தில் கம்பி வலை அமைத்து ஏற்படுத்தப்பட்டுள்ள கூண்டு அறைக்குள் எண்ணப்படும். வேட்பாளர்களுக்கு உரிய VVPAT - சீட்டுகள் தனித்தனியே சின்னம் வாரியாக பிரிக்கப்பட்டு 25 -சீட்டுகள் கொண்ட கட்டாக கட்டப்பட்டு கட்டுவாரியாக பின்பு வாக்கு எண்ணிக்கை நடைபெறும். ஒவ்வொரு வாக்கு எண்ணிக்கை சுற்று நிறைவு பெற்ற பின்பு அதன் முடிவு உரிய அறிவிப்பு பலகையில் எழுதப்படும். இதில் சுற்றுகளின் முடிவுகளை அறிந்துக் கொள்ளலாம்.

EVM-ல் ஒவ்வொரு சுற்றிற்கும் வேட்பாளர்கள் பெறும் மொத்த வாக்குகள் முகவர்களுக்கு காண்பிக்கப்படும். இதனை முகவர்கள் கண்காணித்து குறித்துக் கொள்ளலாம். வேட்பாளர்கள் பெறும் மொத்த வாக்கு விவரம் படிவம் - 17ஊ பகுதி - 2ல் வாக்கு எண்ணும் மேற்பார்வையாளர்கள் மூலம் எழுதப்பட்டு வேட்பாளர்களின் முகவரிடம் கையொப்பம் பெறப்படும். வேட்பாளரின் முகவர்களுக்கு வாக்கு எண்ணும் மையத்தில் முறையீடு ஏதும் இருப்பின் உதவி தேர்தல் நடத்தும் அலுவலரிடம் தெரிவித்துக்கொள்ளலாம்.

வாக்கு எண்ணிக்கை முடிவில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்படும் வேட்பாளர் அதற்குரிய சான்றிதழை தேர்தல் நடத்தும் அலுவலர் அவர்களிடமிருந்து பெறும் பொழுது வெற்றிபெற்றதாக அறிவிக்கப்படும் வேட்பாளர் உள்ளிட்ட நான்கு நபர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவர்.

எனவே 13.விழுப்புரம் (தனி) நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட அனைத்து06 சட்டமன்ற தொகுதிகளிலும் வாக்கு எண்ணிக்கை அமைதியான முறையில் நடைபெற தக்க ஒத்துழைப்பு வழங்கிட வேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலர், கலெக்டர் டாக்டர் சி.பழனி தெரிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் தீபக் சிவாச் திண்டிவனம் சார் ஆட்சியர் திவ்யான்ஷா நிகம் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) தமிழரசன் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ராணிப்பேட்டை மாவட்டத்தில்

# தடையில்லா குடிநீர் விநியோகம் வழங்க துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆலோசனைக்கூட்டம்

## கலெக்டர் ச.வளர்மதி தலைமையில் நடந்தது



**ராணிப்பேட்டை ,ஏப், 25-**

ராணிப் பேட்டை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட கலெக்டர் ச.வளர்மதி தலைமையில் இராணிப்பேட்டை மாவட்டத்தில் அனைத்து பகுதிகளிலும் பொதுமக்களுக்கு தடையில்லா குடிநீர் விநியோகம் வழங்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

இ ரா ணிப் பேட்டை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட கலெக்டர் ச.வளர்மதி தலைமையில் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் மாவட்டத்திலுள்ள அனைத்துப் பகுதிகளிலும் கோடைக்காலங்களில் குடிநீர் விநியோகம் தங்குதடையின்றி வழங்குவது தொடர்பாக துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.இக் கூட்டத்தில் மாவட்ட கலெக்டர் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு அரசு தலைமை செயலாளர் உத்தரவின் இராணிப்பேட்டை மாவட்டத்தில் அனைத்து ஊரக மற்றும் நகர்புற பகுதிகளில் பொதுமக்களுக்கு தங்கு தடையின்றி குடிநீர் விநியோகம் செய்யப்பட வேண்டும்.

கோடை காலத்தில் வெயிலின் தாக்கம் காரணமாக ஏற்படும் நீர் பற்றாக்குறையை கவனத்தில் கொண்டு பொது மக்களுக்கு அன்றாடம் முறையான குடிநீர் வழங்கிட வட்டார வளர்ச்சி அலுவலர்கள், நகராட்சி ஆணையாளர்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அலுவலர்கள், மற்றும் மின்சார வாரிய அலுவலர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து பணியாற்றிட வேண்டும்.

விளைநிலங்களில் விவசாயிகள் தங்கள் வேளாண் பயன்பாட்டிற்கு ஏற்றார் போல் நீரை பயன்படுத்த வேண்டும்.

வேளாண் மைத் துறை அலுவலர்கள் இது குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைக்க வேண்டும். குடிநீர் பைப்புகள் பழுதின் காரணமாக குடிநீர் வீணாவது தடுக்கப்பட வேண்டும். இது குறித்து சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பு பணியாளர்கள் செயல்பட வேண்டும். எந்த இடத்திலும் பிரச்சனைகள் இருக்கக் கூடாது.

அதே போன்று ஊராட்சி மற்றும் நகராட்சிகளில் குடிநீர் வரி மற்றும் சொத்து வரிகளை இது வரை முறையாக வசூ லிக் க ப ட வில் லை, சொத்து வரி மற்றும் குடிநீர் வரியை முறையாக வசூலிக்க வேண்டும், இடம் மற்றும் கட்டிடத்தின் பரப்பளவிற்கு உகந்த சொத்து வரியை கணக்கிட்டு பெற வேண்டும் என மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட கலெக்டர் தெரிவித்தார்.

இக் கூட் டத் தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் க.லோகநாயகி, ஊரக வளர்ச்சி துறை செயற்பொறியாளர் ராஜவேல், மின்சார வாரிய செயற்பொறியாளர் குமரேசன், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய செயற்பொறியாளர் குமரவேல், உதவி இயக்குனர் ஊராட்சிகள் சுதா மற்றும் அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள், துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ஆரணி கோட்டை ரோட்டரி சங்கம் சார்பில் உலக புத்தக தின விழா



**ஆரணி, ஏப். 25:**

ஆரணி கோட்டை ரோட்டரி சங்கம் சார்பில் ஆரணி சைதாப்பேட்டை நகராட்சி தொடக்கப் பள்ளியில் உலக புத்தக தின விழா நடைபெற்றது.

இவ்விழாவில் ஆரணி கோட்டை ரோட்டரி சங்க தலைவர் இல.ஆறுமுகம் தலைமை தாங்கினார். இதில் முதன்மை விருந்தினராக ரோட்டரி சேர்ந்த சாலை பாதுகாப்பு தலைவர் எம்.பழனி கலந்துகொண்டார். மேலும் சிறப்பு விருந்தினராக மேற்கு ஆரணி வட்டாரக் கல்வி அலுவலர் இரா.அருணகிரி கலந்து கொண்டு மாணவர்களுக்கு புத்தகம் வாசித்தலின் அவசியத்தைப் பற்றி கூறி மாணவர்களுக்கு புத்தகம், கணித உபகரணப் பெட்டி, எண் சுவடி, நோட்டுப் புத்தகங்கள் அளித்து மாணவர்களை வாழ்த்திப் பேசினார். மேலும் இந்நிகழ்ச்சியில் மருசூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு ஒலிபெருக்கி, மைக் வழங்கப்பட்டது.

பள்ளித் தலைமை ஆசிரியை (பொ) திருமதி.க.உலகநாயகி வரவேற்புரை ஆற்றினார். ரோட்டரி சங்க செயலாளர் சு.குமார், பொருளாளர் சு.ஸ்ரீதர், மருசூர் பள்ளி தலைமை ஆசிரியை கோ.உஷாராணி, ஆசிரியர்கள் அன்பு, தினகரன், மகேஸ்வரி, சீதா, கணபதி மற்றும் மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

### தி.மலையில்

# மாவட்ட எம்ஜிஆர் இளைஞரணி சார்பில் 5 ஆயிரம் பக்தர்களுக்கு அன்னதானம்

**திருவண்ணாமலை, ஏப். 25-**

சித்ரா பவுர்ணமி கிரிவலத்தை முன்னிட்டு திருவண்ணாமலையில் 40 லட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் 2 நாட்களாக கிரிவலம் வந்து அண்ணாமலையார் உண்ணாமலையம்மனை வழிபட்டனர். நேற்றுமுன்தினம் மாலை திருவண்ணாமலையில் பல்வேறு இடங்களில் ஆன்மீக அமைப்புகள் ஆசிரமங்கள் பொதுமக்கள் சார்பில் அன்னதானம் வழங்கப்பட்டது வேட்டவலம் சாலையில் அதிமுக திருவண்ணாமலை கிழக்கு மாவட்ட எம்ஜிஆர் இளைஞரணி சார்பில் 10ம் ஆண்டு மாபெரும் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு தலைமையேற்று மாவட்ட எம்ஜிஆர் இளைஞரணி செயலாளர் டிஸ்கோ எஸ்.குணசேகரன் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கி தொடங்கிவைத்தார். தொடர்ந்து 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்களுக்கு நள்ளிரவு வரை அன்னதானம் வழங்கப்பட்டது. இதற்காக 1000 கிலோ அரிசி 500 கிலோ காய்கறி பயன்படுத்தப்பட்டன. சித்ரா பவுர்ணமி கிரிவலம் வந்த பக்தர்கள் நீண்ட வரிசையில் நின்று அன்னதானத்தை பெற்றுச் சென்றனர். மேலும் கோடை வெயில் காரணமாக பக்தர்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீரும் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் திருவண்ணாமலை கிழக்கு மாவட்ட எம்ஜிஆர் இளைஞரணி நிர்வாகிகள் கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

தினபூமி, thinaboomi.com ஏப்ரல் 25, 2024

# உளுந்தை கிராமத்தில் வெங்கடேஸ்வர சுவாமி திருக்கோயிலில் 16-ம் ஆண்டு வாரி கல்யாண உற்சவ வைபவ விழா



**திருவள்ளூர்,ஏப்,25.**

திருவள்ளூர் மாவட்டம் கடம்பத்தூர் ஒன்றியம் உளுந்தை கிராமத்தில் அருள்மிகு ஸ்ரீ வெங்கடேஸ்வர சுவாமி திருக்கோயிலில் பதினாறாம் ஆண்டு சித்ரா பௌர்ணமி கருட சேவை முன்னிட்டு ஸ்ரீவாரி கல்யாண உற்சவ வைபவ விழா திரளான பக்தர்கள் முன்னிலையில் சிறப்பாக நடைபெற்றது.

**உற்சவ விழா**

விழாவை முன்னிட்டு கோயில் வளாகத்தில் நித்திய பூஜை, கருட சேவை புறப்பாடு, திருவேந்தி காப்பு,தீர்த்த பிரசாதம் விநியோகம், மகா சாந்தி ஹோமம், மகா சாந்தி, திருமஞ்சனம், விசேஷ ஆராதனை, தீர்த்த பிரசாத வினியோகம் நடைபெற்றது.விழாவின் முக்கிய நிகழ்வாக ஸ்ரீவாரி திருக்கல்யாணம் திருமலை திருப்பதி தேவஸ்தான சீதாராம ஆச்சார்யலு அர்ச்சக சுவாமிகளால் பக்தர்கள் முன்னிலையில் வெகு சிறப்பாக நடை பெற் றது.இ தனை தொடர்ந்து மஹோற்சவ வைபவ விழா, அனைத்து பக்தர்களுக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.

இதனை தொடர்ந்து ஸ்ரீதேவி,பூதேவி சமேத திருவேங்கடமுடையான் கிராமத்தின் முக்கிய வீதிகளில் திருவீதி எழுந்தருள் நிகழ்ச்சி நடைபெற்றது. விழாவுக்கான ஏற்பாடுகளை கோயில் நிர்வாகிகள் மற்றும் கிராம பொதுமக்கள் செய்திருந்தனர்.

# புழல் பகுதியில் 5 வயது குழந்தையை கொலை செய்த வாலிபர் கைது

**சென்னை ஏப் 25-**

சென்னை புழல் பகுதியை சேர்ந்தவர் திவ்யா. இவர் கணவரை பிரிந்து 9 வயது மகன் மற்றும் 5 வயது மகள் தேஜஸ்வினி ஆகியோருடன் சென்னை, புழல், காந்தி ரோடு 2வது தெருவில் உள்ள வீட்டில் வசித்து வருகிறார். திவ்யா இராயப்பேட்டையில் உள்ள ஒரு வீட்டில் வேலை செய்து வரும் நிலையில், அங்கு வேலை செய்து வரும் சீனிவாசன், என்பவருடன் பழக்கம் ஏற்பட்டு, சீனிவாசன் திவ்யா வீட்டில் தங்கி வந்துள்ளார். இந்நிலையில், திவ்யா கடந்த 22. ந் தேதி அன்று காலை, அவரது மகள் தேஜஸ்வினி மற்றும் 9 வயது மகனை வீட்டில் சீனிவாசனுடன் விட்டுச் சென்றார். பின்னர், குழந்தை தேஜஸ்வினி, பாத்ரூமில் உள்ள பிளாஸ்டிக் டப்பில் விழுந்து இறந்துவிட்டதாக சீனிவாசன் தெரிவித்ததன்பேரில், புழல் காவல் நிலைய காவல் குழுவினர் இறந்துபோன குழந்தையின் பிரேதத்தை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் மேற்படி சம்பவம் குறித்து புழல் காவல் நிலையத்தில் இயற்கைக்கு மாறான மரணம் (174 கு. வி.மு.ச.) பிரிவில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது.இந்நிலையில் பிரேத பரிசோதனை அறிக்கையில் குழந்தை தாக்கப்பட்டதில் இறந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளதன்பேரில், புழல் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சீனிவாசனை பிடித்து விசாரணை செய்ததில், சீனிவாசன் குழந்தையை அடித்து, காலால் மிதித்தபோது, குழந்தை இறந்துவிட்டதாகவும், அதனை மறைக்க குழந்தை பிளாஸ்டிக் டப்பில் விழுந்து இறந்துவிட்டதாக கூறியதாகவும் தெரிவித்தார்.

அதன்பேரில், மேற்படி வழக்கில் கொலை பிரிவாக மாற்றம் செய்யப்பட்டு, மேற்படி குழந்தையை கொலை செய்த சீனிவாசன், என்பவரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட சீனிவாசன் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்.

# 3 குட்டி மோப்ப நாய்களுக்கு பெயர் சூட்டிய போலீஸ் கமிஷ்னர்

**சென்னை ஏப் 25-**

சென்னை பெருநகர காவல் ஆணையர் சென்னை பெருநகர காவல் மோப்ப நாய் பிரிவிற்கு புதிதாக வந்துள்ள பெல்ஜியன் ஷெப்பர்ட் வகையைச் சேர்ந்த 3 நாய் குட்டிகளுக்கு பெயர் சூட்டினார்.

சென்னை பெருநகர காவல் ஆணையர் சந்தீப் ராய் ரத்தோர், ஆணையரகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சென்னை பெருநகர காவல் மோப்ப நாய் பிரிவிற்கு புதிதாக வந்துள்ள பெல்ஜியன் ஷெப்பர்ட் வகையைச் சேர்ந்த 3 மாதங்களான 3 நாய் குட்டிகளுக்கு, கார்லோஸ், சார்லஸ் மற்றும் லாண்டோ என்று பெயரிட்டு, சென்னை பெருநகர காவல், மோப்பநாய் பிரிவிற்கு வழங்கினார். புதிய நாய்குட்டிகளுக்கு காவல்துறையினருடன் ஒருங்கிணைந்து பணியாற்றும் வகையில் பிரத்யேக பயிற்சிகள் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.மேலும், ஏற்கனவே ஓய்வுபெற்ற 5 நாய்களின் நல்வாழ்வை உறுதி செய்வதற்காக மாதவரம் நாய்கள் பராமரிக்கும் இடத்தில் பராமரிக்கப்பட்டு, அவற்றின் அர்ப்பணிப்புச் சேவைக்குப் பிறகு உரிய பராமரிப்பும் மரியாதையும் மருத்துவ சோதனைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

# காவலர் தேர்வுக்கான விடை குறிப்பு போலியாக தயாரித்து விற்பனை சென்னையில் பணியாற்றிய மத்திய அரசு அதிகாரி கைது

**சென்னை ஏப் 25**

உ.பி.யில் கடந்த பிப்ரவரி 17ம் தேதி காவலர் தேர்வு நடந்தது. இந்த தேர்வுக்கான விடை குறிப்புகள் (கீ ஆன்சர்) போலியாக தயாரித்து விற்பனை செய்யப்பட்டது. இது குறித்து காந்த்ராபூர் போலீசார் 7 சட்ட பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்து விசாரித்தனர். அதில் காவலர் தேர்வுக்கான போலி விடைகள் தயாரித்து விற்றது பி.எஸ்.பர்தா மாவட்டத்தை சேர்ந்த விஜய் கண்ணுஜியா(30) என உறுதி செய்யப்பட்டது. அவரை உ.பி. போலீசார் தேடி வந்த நிலையில், சென்னை சூளைமேட்டில் நண்பர்களுடன் தங்கி 8 மாதங்களாக ஆயிரம் விளக்கு பகுதியில் இந்திய உணவு கழகத்தில் உதவி மேலாளராக பணியாற்றியது தெரிய வந்தது. உ.பி.தனிப்படை போலீசார் சென்னை போலீசார் உதவியுடன் நேற்று முன்தினம் விஜய் கண்ணுஜியாவை கைது செய்தனர். நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி உ.பி.க்கு அழைத்து சென்றனர்.

# வழிப்பறி வழக்கில் குற்றவாளிக்கு 7 வருடங்கள் கடுங்காவல் தண்டனை

**சென்னை ஏப் 25-**

சென்னை, திருவல்லிக்கேணி, பி.வி.நாயக்கன் தெருவை சேர்ந்தவர் பாபு, என்பவர் பெட்டி கடை நடத்தி வருகிறார். கடந்த 10.04.2022 அன்று மேற்படி கடைக்கு வந்த 2 அடையாளம் தெரியாத நபர்கள் மேற்படி கடைக்காரர் பாபுவிடம் கத்தியைகாட்டி மிரட்டி சிகரெட் மற்றும் பணம் கேட்டு மிரட்டியுள்ளனர். பாபு சிகரெட் மற்றும் பணம் கொடுக்க மறுப்பு தெரிவித்துள்ளார். உடனே ஆத்திரமடைந்த மேற்படி இருவரும் பாபுவை கத்தியால் தாக்கியுள்ளனர். மேலும் கடையில் இருந்த பாட்டில்களை உடைத்து சேதப்படுத்தி விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர். இது குறித்து பாபு ஐஸ்ஹவுஸ் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்து மேற்படி வழிப்பறி வழக்கில் சம்பந்தப்பட்ட 1.பாலாஜி, 2.யுவராஜ், ஆகிய இருவரை கைது செய்து சிறையில் அடைத்தனர். இவ்வழக்கு தொடர்பாக, சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் உள்ள 5வது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெற்று வந்த நிலையில், நீதிமன்ற வழக்கு விசாரணை முடிவடைந்து இவ்வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டது.

மேற்படி வழக்கில் எதிரி பாலாஜி மீது குற்றம் நிரூபிக்கப்பட்டதால், அவருக்கு 7 வருடங்கள் கடுங்காவல் சிறை தண்டனை மற்றும் ரூ.12,000/- அபராதமும், அபராதம் செலுத்த தவறினால் மேலும் 3 மாதங்கள் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் என நீதிபதி தீர்ப்பு வழங்கினார். மற்றொரு எதிரியான யுவராஜ் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

மேற்படி வழக்கில் சிறப்பாக புலனாய்வு செய்து, நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி குற்றவாளிக்கு உரிய தண்டனை பெற்று தந்த ஐஸ்ஹவுஸ் காவல் நிலைய ஆய்வாளர் மற்றும் நீதிமன்ற அலுவல் பணிபுரியும் காவல் குழுவினரை உயரதிகாரிகள் வெகுவாகப் பாராட்டினர்.

## குற்றாலம் செண்பகாதேவி அம்மன் கோவிலில் சித்ரா பவுர்ணமி திருவிழா



**தென்காசி, ஏப்.25-**

தென்காசி மாவட்டம் குற்றாலம் செண்பகாதேவி அம்மன் கோவில் சித்ரா பௌர்ணமி திருவிழா சிறப்பாக நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு செண்பகாதேவி அம்மனை வழிபட்டனர்.

தென்காசி மாவட்டம் குற்றாலம் மலைப்பகுதியில் அமைந்துள்ள செண்பகா தேவி அம்மன் கோவிலில் சித்ரா பௌர்ணமி திருவிழாவை முன்னிட்டு ஏராளமான பக்தர்கள் அம்மனுக்கு பொங்கலிட்டு சிறப்பு வழிபாடுகள் நடத்தினர்.

குற்றாலம் மெயின் அருவிக்கு மேலே மலைப்பகுதியில் செண்பகாதேவி அம்மன் கோவில் உள்ளது.இங்கு ஆண்டுதோறும் சித்திரை மாதம் சித்ரா பௌர்ணமி திருவிழா சிறப்பாக நடத்தப்படுவது வழக்கம். அதன்படி இந்த ஆண்டு சித்ரா பௌர்ணமி திருவிழா கடந்த 14ஆம் தேதி காலை அம்மனுக்கு காப்பு கட்டும் நிகழ்ச்சியுடன் துவங்கியது. திருவிழா நாட்களில் தினமும் ஒவ்வொரு சமுதாயம் சார்பில் மண்டகப்படி நிகழ்ச்சியில் அம்மனுக்கு சிறப்பு அபிஷேக அலங்கார தீபாராதனை நிகழ்த்தி நடைபெற்றது. சித்ரா பௌர்ணமி தினத்தன்று காலையில் கணபதி ஹோமம் உள்ளிட்ட பல்வேறு ஹோமங்கள் சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. அத்துடன் ஏராளமான பக்தர்கள் பால்குடங்களை சுமந்து வந்து அம்மனுக்கு நேர்த்திக்கடன் செலுத்தினர்.

அதனை தொடர்ந்து அம்மனுக்கு 23 வகையான வாசனை திரவியங்களில் சிறப்பு அபிஷேகமும், அலங்கார தீபாராதனை நிகழ்ச்சியும், மதியம் உச்சிக்கால பூஜையும் நடைபெற்றது. சித்ரா பௌர்ணமியை முன்னிட்டு புனித விரதம் இருந்து நூற்றுக்கணக்கான பக்தர்கள் பொங்கலிட்டு சிறப்பு வழிபாடு நடத்தினர். மேலும் ஏராளமான பெண்கள் அங்குள்ள ஔவையார் அம்மனுக்கு கொழுக்கட்டை படைத்து வழிபட்டனர். சித்ரா பௌர்ணமி விழாவை முன்னிட்டு செண்பகாதேவி அம்மன் கோவிலில் காலை முதல் மாலை வரை சிறப்பு அன்னதான நிகழ்ச்சி நடைபெற்றது. சித்ரா பௌர்ணமி திருவிழாவை முன்னிட்டு குற்றாலம் செண்பகாதேவி அம்மன் மலைக் கோவிலுக்கு சென்ற பக்தர்களுக்கு தமிழக முதல்வரின் மீண்டும் மஞ்சப்பை விழிப்புணர்வு இயக்கத்தின் தொடர்ச்சியாக நெல்லை மாவட்ட வன அலுவலர் முருகன் உத்தரவுபடி வனச்சரக அலுவலர் சீதாராமன் மேற்பார்வையில் குற்றாலம் பிரிவு வனவர் பிரகாஷ் தலைமையில் வனத்துறையினர் பக்தர்களுக்கு பிளாஸ்டிக் பைகளுக்கு பதிலாக மஞ்சள் பைகளை வழங்கினர்.

மேலும் கோவிலுக்கு வருகை தந்த சுமார் 2000க்கும் மேற்பட்ட பக்தர்கள் கொண்டு வந்த பிளாஸ்டிக் பைகளை வனத்துறையினர் பெற்றுக்கொண்டு அவர்களுக்கு மஞ்சப்பை கொடுத்து அனுப்பி வைத்தனர். மேலும் இந்த விழாவில் கலந்து கொண்ட பக்தர்கள் அனைவருக்கும் நீர் மோர் வழங்கினர். மேலும் செண்பகாதேவி அருவியில் நீர் மாசுபடுவதை தவிர்க்க ஆற்றிலும் செண்பகாதேதி அருவியிலும் குளிக்க வனத்துறை சார்பில் தடை விதித்திருந்து இருந்தனர். குற்றாலம் செண்பகா தேவி அம்மன் கோவிலில் நடைபெற்ற சித்ரா பௌர்ணமி திருவிழாவில் தென்காசி கோட்டாட்சி தலைவர் பத்மாவதி, காவல் ஆய்வாளர் உமா, அகஸ்தியர் சன்மார்க்க சபை முத்துக்குமாரசாமி, முன்னாள் தென்காசி ஒன்றிய திமுக செயலாளர் குற்றாலம் துரை (எ) இராமையா, தென்காசி தெற்கு மாவட்ட அதிமுக அவைத் தலைவர் இலஞ்சி சண்முகசுந்தரம், உட்பட ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர். இரவு சிறப்பு அலங்கார தீபாராதனைகள், நள்ளிரவில் சித்ரா பௌர்ணமி சிறப்பு வழிபாடு நிகழ்ச்சியும் நடைபெற்றது. இதில் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை ஏராளமான பக்தர்கள் மலைப்பாதையில் நடந்து சென்று செண்பகாதேவி அம்மனை வழிபட்டனர். சித்ரா பௌர்ணமி திருவிழாவை முன்னிட்டு காலை 9 மணிக்கு மேல் செண்பகாதேவி அருவிகள் அம்மனுக்கு தீர்த்த வாரி நடைபெற்றது.

# கொலை செய்வதாக அடிக்கடி மிரட்டியதால் மது வாங்கி கொடுத்து ரவுடி படுகொலை: நண்பர்கள் பரபரப்பு வாக்குமூலம்

**சென்னை ஏப் 25-**

வியாசர்பாடி கூட்ஸ் ஷெட் ரோடு உட்புறம் உள்ள முட்புதரில் தலையில் பலத்த காயத்துடன் ஒருவர் சடலமாக கிடப்பதாக நேற்று காலை எம்.கே.பி நகர் போலீசாருக்கு அப்பகுதி பொதுமக்கள் தகவல் தெரிவித்தனர். இதையடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற எம்.கே.பி நகர் உதவி கமிஷனர் வரதராஜன், இன்ஸ்பெக்டர் பார்த்தசாரதி உள்ளிட்ட போலீசார், முட்புதரில் சிக்கி கிடந்த அந்த நபரை தூக்கிப் பார்த்தபோது அவர் உயிரிழந்தது தெரிந்தது. பீர் பாட்டிலை உடைத்து, அவரது கழுத்தில் குத்தப்பட்டிருந்தது. அவரது உடலை கைப்பற்றி, பிரேத பரிசோதனைக்காக ஸ்டான்லி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். விசாரணையில், கொலை செய்யப்பட்டு கிடந்த நபர் வியாசர்பாடி சத்தியமூர்த்தி நகர் 60வது பிளாக் பகுதியை சேர்ந்த ராஜ் என்பவரின் மகன் நவீன் குமார் (எ) வாழைப்பழ அப்பு (27) என்பது தெரிய வந்தது. இவர் கடந்த சில ஆண்டுகளாக எம்கேபி நகர் பகுதியில் இல்லாமல் மாத்தூர் அருகே உள்ள எம்எம்டிஏ பகுதியில் வசித்து வந்துள்ளார். 9ம் வகுப்பு வரை படித்துவிட்டு மரவேலைகள் செய்யும் இடத்தில் உதவியாளராக பணிபுரிந்து வந்துள்ளார். திருமணமாகாதவர் என்பதும் தெரிய வந்தது. இவர் மீது எம்கேபி நகர் காவல் நிலையத்தில் ஒரு கொலை வழக்கு உள்பட 6 குற்ற வழக்குகள் உள்ளன என்பதும் தெரிந்தது. மேலும் விசாரணையில், வியாசர்பாடி தேபர் நகர் முதல் தெருவை சேர்ந்த குமரேசன் (38), சத்தியமூர்த்தி நகர் 63வது பிளாக் பகுதியை சேர்ந்த அங்கப்பன் (30), அதே பகுதியை சேர்ந்த தமிமுன் அன்சாரி (32) ஆகியோர் இந்த கொலையை செய்தது தெரிய வந்தது. செங்குன்றம் வடகரை அருகே பதுங்கி இருந்த அவர்களை நேற்று போலீசார் கைது செய்து விசாரித்தனர்.அவர்கள் அளித்த வாக்குமூலமாக போலீசார் கூறியதாவது: கொலை செய்யப்பட்ட நவீன் குமார், கைது செய்யப்பட்ட மூன்று பேருடன் சேர்ந்து அடிக்கடி மது அருந்தி உள்ளார். அப்போது குமரேசன் என்பவரிடம் அடிக்கடி மது வாங்கி தரும்படி கேட்டு தொல்லை கொடுத்து வந்துள்ளார். அவர் பணம் இல்லை என்று கூறினால், உன்னை கொலை செய்து விடுவேன், உனது குடும்பத்தையும் கொன்று விடுவேன் என மிரட்டி வந்துள்ளார். இதனால் கடந்த சில நாட்களாகவே குமரேசன் மன உளைச்சலில் இருந்துள்ளார். கொடுங்கையூர் ஆர்ஆர் நகரில் மதுபாட்டில்களை வாங்கிய குமரேசன் நண்பர்களான அங்கப்பன் மற்றும் தமிமுன் அன்சாரி ஆகியோருடன் சேர்ந்து நவீன் குமாரையும் அழைத்து மது அருந்தியுள்ளார். அப்போது, நவீன் குமாருடன் தகராறு ஏற்பட்டுள்ளது. இதில் ஆத்திரமடைந்த குமரேசன், அங்கப்பன் இருவரும் சேர்ந்து பீர்பாட்டிலை எடுத்து உடைத்து நவீன் குமாரை சரமாரியாக கழுத்தில் குத்தி உள்ளனர். தமிமுன் அன்சாரி யாராவது வருகிறார்களா என வேவு பார்த்துள்ளார். கொலை செய்து முடித்த பின்பு மூன்று பேரும் தப்பியது தெரியவந்தது. இதை தொடர்ந்து, 3 பேர் மீதும் கொலை வழக்கு பதிவு செய்த போலீசார் அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

# வளசரவாக்கம் பகுதியில் வீண் தகராறு காரணமாக ஒருவரை மது பாட்டிலால் தாக்கிய வாலிபர் கைது

**.சென்னை ஏப் 25-**

சென்னை, வளசரவாக்கம், வேலன் நகர் 3வது தெருவில் வசித்து வரும் பாகேஷ்குமார், என்பவர் வளசரவாக்கம், ஆற்காடு சாலையில் உள்ள மதுபான கடையில் அமர்ந்திருந்தபோது, அவருக்கு எதிரில் அமர்ந்திருந்த முத்துஜா அகமது என்பவர் மேற்படி பாகேஷ்குமாரின் செல்போனை எடுத்து பார்த்துள்ளார். அப்போது இருவருக்குமிடையே வீண் தகராறு ஏற்பட்டுள்ளது. தகராறு முற்றிய நிலையில் முத்துஜா அகமது என்பவர் மது பாட்டிலை எடுத்து பாகேஷ்குமாரை தாக்கியுள்ளார். இதில் இரத்த காயமடைந்த பாகேஷ்குமார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று, மேற்படி சம்பவம் குறித்து வளசரவாக்கம் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

வளசரவாக்கம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட முத்துஜா அகமது, என்பவரை கைது செய்தனர்.

விசாரணையில் கைது செய்யப்பட்ட முத்துஜா அகமது மீது ராமாபுரம் காவல் நிலையத்தில் ஏற்கனவே ஒரு குற்ற வழக்கு உள்ளது தெரிய வந்தது.

கைது செய்யப்பட்ட முத்துஜா அகமது விசாரணைக்குப் பின்னர், நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்.

# எழும்பூர் பகுதியில் முன்விரோதம் காரணமாக நடந்த கொலை வழக்கில் 3 குற்றவாளிகளுக்கு ஆயுள் தண்டனை

**சென்னை ஏப் 25-**

சென்னை, சௌகார்பேட்டை, ஆதியப்பன் நாயக்கன் தெருவில் வசித்து வந்த செந்தில், என்பவர் கடந்த 09.02.2015 அன்று முன்விரோதம் காரணமாக சில நபர்களால் கொலை செய்யப்பட்டார். இது குறித்து எழும்பூர் காவல் நிலையத்தில் கொலை வழக்கு பதிவு செய்து, எதிரிகள் 1.சந்திரசேகர், 2.ஜான்சன், 3.கவிதா, உட்பட 13 பேரை காவல் குழுவினர் கைது செய்து சிறையில் அடைத்தனர்.இவ்வழக்கு தொடர்பாக, உயர்நீதிமன்ற வளாகத்தில் உள்ள 21வது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெற்று வந்த நிலையில், நீதிமன்ற வழக்கு விசாரணை முடிவடைந்து இவ்வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டது.

மேற்படி வழக்கில் எதிரிகள் சந்திரசேகர், ஜான்சன் மற்றும் கவிதா ஆகியோர் மீது குற்றம் நிரூபிக்கப்பட்டதால், மேற்படி 3 குற்றவாளிகளுக்கும் ஆயுள் சிறை தண்டனை மற்றும் தலா ரூ.10,000/- அபராதமும் விதித்து நீதிபதி தீர்ப்பு வழங்கினார்.

# 12 கோடி ரூபாயில் நவீனமயமாகிறது அம்பத்தூர் பேருந்து நிலையம்: சிஎம்டிஏ அதிகாரிகள் தகவல்

**சென்னை ஏப் 25-**

அம்பத்தூர் பேருந்து நிலையம் ரூ12 கோடியில் நவீனமயமாக்கப்படுவதாக, சிஎம்டிஏ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சென்னையில் அம்பத்தூர் பேருந்து நிலையம் முக்கியமான பேருந்து நிலையத்தில் ஒன்று ஆகும். இந்த பேருந்து நிலையத்தில் இருந்து சென்னையின் பல்வேறு பகுதிகளுக்கு மாநகர பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. நாள்தோறும் ஆயிரக்கணக்கான பயணிகள் இங்கு வந்து, பேருந்துகளில் பயணம் செய்து வருகின்றனர். இந்நிலையில் தற்போது இருக்கும் அம்பத்தூர் பேருந்து நிலையத்தில், சேதமடைந்த தரை, மேற்கூரைகள், சிசிடிவி கேமராக்கள் மற்றும் அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாமல் பாதுகாப்பற்ற இடமாக இருந்து வருகிறது. மிகவும் மோசமாக அதிகாரிகள் பராமரிப்பதாகவும், அதிகம் பேருந்து நிறுத்த இடம் இல்லாமல் இருப்பதாகவும் பயணிகள் குற்றம்சாட்டி வருகின்றனர். இது அனைத்தையும் சரி செய்து பேருந்து நிலையத்தை புதுப்பிக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இந்நிலையில் அம்பத்தூர் பேருந்து நிலையத்தை ரூ12 கோடியில் புதுப்பிக்க போவதாக சிஎம்டிஏ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதுதொடர்பாக அவர்கள் கூறியதாவது: அம்பத்தூர் பேருந்து நிலையம் சுமார் 1.6 ஏக்கர் நிலப்பரப்பை கொண்டது. இதில் 26 ஆயிரம் சதுர அடியில் எம்டிசி அலுவலகம் அமைக்கப்பட உள்ளது. இதன் மூலம் அம்பத்தூர் பகுதி வளர்ச்சி அடையும். இந்த பணிகள் அனைத்தும் சுமார் 12 கோடி ரூபாய் செலவில் நடைபெற இருக்கிறது. மேலும் 20 பேருந்துகளை நிறுத்தும் வகையில் விரிவுபடுத்தப்பட உள்ளது. இந்த ஆண்டின் இறுதியில் இந்த பணிகள் அனைத்தும் முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது இதற்கான ஆரம்பக் கட்ட பணிகள் அனைத்தும் தொடங்கப்பட்டுள்ளது. இத்துடன் இன்னும் சில பேருந்து நிலையங்கள் புதுப்பிக்கப்பட உள்ளன. இவ்வாறு அவர் கூறினார்.

# கிண்டி கத்திப்பாரா சந்திப்பில் விமான பாதைக்கு பாதிப்பு இன்றி 2ம் கட்ட மெட்ரோ ரயில் பணிகள்

**சென்னை ஏப் 25-**

முதல் கட்ட மெட்ரோ ரயில் வழித்தடம் மற்றும் விமான பாதைக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாத வகையில் கிண்டி கத்திப் பாரா சந்திப்பில் 2ம் கட்ட மெட்ரோ ரயில் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது, என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். சென்னையில் 2015ம் ஆண்டு முதல் மக்களிடம் பெரும் வரவேற்பை பெற்று மெட்ரோ ரயில் இயங்கி வருகிறது. மெட்ரோ ரயில் பொது போக்குவரத்தில் முக்கிய இடத்தை பிடித்துள்ளது. நாளுக்கு நாள் பயணிகளின் எண்ணிக்கையும் அதிகரித்து கொண்டே வருகிறது. சென்னையில் முதல் கட்ட மெட்ரோ ரயில் சேவை 2 வழித்தடங்களில் 54 கிலோ மீட்டர் தூரத்திற்கு பயன்பாட்டில் உள்ளது. அதிகரித்து வரும் பயணிகளின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு, 2ம் கட்ட மெட்ரோ ரயில் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.அதன்படி, 2ம் கட்ட திட்டம் 3 வழித்தடத்தில் 116.1 கிலோ மீட்டர் தூரத்திற்கு பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. அதில் 3வது வழித்தடம் 45.8 கிலோ மீட்டர் தூரத்திற்கு மாதவரம் பால் பண்ணை முதல் சிறுசேரி சிப்காட் வரையிலும், 4வது வழித்தடம் 26.1 கிலோ மீட்டர் தூரத்திற்கு கலங்கரை விளக்கம் முதல் பூந்தமல்லி வரையிலும், 5வது வழித்தடம் 47 கிலோ மீட்டர் தூரத்திற்கு மாதவரம் முதல் சோழிங்கநல்லூர் வரையில் ரூ.63,246 கோடி மதிப்பில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் 119 மெட்ரோ ரயில் நிலையங்கள் அமைக்கிறது. இந்தப் பணிகளை 2026ம் ஆண்டு இறுதிக்குள் முடித்து, மெட்ரோ ரயில்களை இயக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், 5வது வழித்தடம் 47 கிலோ மீட்டர் தூரத்திற்கு மாதவரம் முதல் சோழிங்கநல்லூர் வழித்தடத்தின் ஒருபகுதியான கிண்டி கத்திப்பாரா சந்திப்பின் குறுக்கே மெட்ரோ பணிகளை மேற்கொள்வதற்காக ரயில்வே மற்றும் விமான நிலைய ஆணையத்திடம் அனுமதி பெறப்பட்டுள்ளது, என மெட்ரோ நிர்வாக அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து அதிகாரிகள் கூறியதாவது: 2ம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தின் ஒரு பகுதியான மாதவரம் – சோழிங்கநல்லூர் வழித்தடம் கிண்டி கத்திப்பாரா வழியாக செல்கிறது. இந்த பகுதி ஏற்கனவே உள்ள முதல் கட்ட மெட்ரோ திட்டம், கிண்டி தெற்கு ரயில் நிலையம் மற்றும் விமான நிலையம் அருகில் உள்ளது. இதனால் விமான நிலையத்தின் விமானப்பாதை மற்றும் முதல் கட்ட மெட்ரோ திட்டத்தில் கிண்டி வழியாக செல்லும் ரயில் பாதையில் எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாத வகையில் கட்டுமான பணிகள் மேற்கொள்ளவது சவாலாக உள்ளது. எனவே ரயில்வே பாதுகாப்பு மற்றும் இந்திய விமான நிலைய ஆணையத்திடம் அனுமதி பெறப்பட்டுள்ளது. ஏனென்றால் இப்பகுதி விமான பாதையாக உள்ளதால் உயர் தூண்கள் அமைக்கப்படும்போது எவ்வித பாதிப்பும் ஏற்படாதவாறு தூண்கள் கட்ட கூடுதல் கவனம் தேவைப்படுகிறது. இருப்பினும் 2ம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தின் பணிகள் முடிவடைந்து பயன்பாட்டிற்கு வரும்போது, மாதவரம், அண்ணாநகர், வில்லிவாக்கம் போன்ற பகுதிகளிலிருந்து மடிப்பாக்கம், கீழ்கட்டளை, மேடவாக்கம், சோழிங்கநல்லூர் உள்ளிட்ட நகரத்தின் தெற்குபகுதிகளுக்கு எளிதில் செல்ல முடியும் என்றார்.

# சென்னை காவல் துறை சார்பில் பெண்களுக்கான விழிப்புணர்வு பயிலரங்கம்

**சென்னை ஏப் 25-**

‘அவள்‘ திட்டத்தின் கீழ், வெலிங்டன் சீமாட்டி கல்வியியல் மேம்பாட்டு நிறுவனத்தில் ‘பெண்களுக்கான விழிப்புணர்வு பயிலரங்கு’’ நடத்தப்பட்டது.சென்னை பெருநகர காவல் ஆணையர் சந்தீப் ராய் ரத்தோர், உத்தரவின் பேரில், சென்னை பெருநகர காவல்துறையில் நிர்பயா நிதியுதவியுடன் இயங்கும் பாதுகாப்பு நகரத்திட்டங்களில் ஒன்றான திறன் மேம்பாட்டு திட்டத்தின் கீழ், சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள விலிங்டன் சீமாட்டி கல்வியியல் மேம்பாட்டு நிறுவனத்தில் மாணவிகளுக்கான விழிப்புணர்வு பயிலரங்கு நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சென்னை பெருநகர காவல், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்ற தடுப்புப் பிரிவு துணை ஆணையர் முனைவர்.கோ.வனிதா , சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பெண்களுக்கு எதிரான குற்றங்களிலிருந்து தற்காத்துக் கொள்வது குறித்தும், பணியிடத்தில் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தலில் இருந்து எவ்விதம் பாதுகாத்து கொள்வது குறித்தும் காவல் உதவி செயலி, பல்வேறு காவல் உதவி எண்கள் ஆகியவை குறித்தும் உரையாற்றினார். மேலும் தி.காயத்ரி, உளவியலாளர் மற்றும் நிறுவனத்தின் இணை நிறுவனர் அவர்கள் பங்கேற்று பணியிடத்தில் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் என்ற தலைப்பில் உரையாற்றினார்.

# தொற்று நோய் பரவலைத் தடுக்க இணையதள வசதி

**தென்காசி ஏப்.25:**

தென்காசி மாவட்டத்தில் தொற்று நோய் பரவலைத் தடுக்க பொதுமக்கள் தொற்று நோய் குறித்த விவரங்களை தெரிவிப்பதற்காக இணையதளவசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல் கிஷோர் அறிவிப்பு.

தென்காசி மாவட்டத்தில் உள்ள பொது மக்கள் தங்கள் பகுதியில் ஏற்படும் காய்ச்சல் / இருமல்/ சளி / வயிற்றுப் போக்கு /வாந்திபேதி, தோலில் ஏற்படும் கொப்பளங்கள், அம்மை நோய்கள், மஞ்சள் காமாலை, வெறிநாய்கடி, மனிதர்கள்/ பறவைகளுக்கு ஏற்படும் அசாதாரணமாக உயிரிழப்புகள் போன்ற தகவல்களை தாங்களாகவே முன் வந்து கீழ்காணும் *https://ihip.mohfw.gov.in/cbs/-1* என்ற இணையதளத்தில் பெயர், தொலைபேசி எண், வயது, வேலை, கிராமம், மாவட்டம், மாநிலம், நிகழ்வு நடந்த நாள், இடம் மற்றும் தொற்றுநோய் குறித்த விவரம் போன்றவற்றை பதிவு செய்து அரசுக்கு தாங்களாகவே முன் வந்து தெரிவிப்பதின் மூலம் பொது சுகாதாரத்துறை விரைந்து நடவடிக்கை எடுத்து கொள்ளை நோய் பரவலைத் தடுக்க இவ்வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், தகவல் அளிப்பவரின் விவரங்கள் பாதுகாக்கப்படும் என்பதும் தெரிவித்து கொள்ளப்படுகிறது. எனவே, பொதுமக்கள் தங்கள் பகுதியில் கொள்ளை நோய் பரவலை தடுத்திட இந்த இணையதள வசதியினை பயன்படுத்தி ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் தெரிவித்துள்ளார்.

## லக்னோவுக்கு எதிரான தோல்வி:
# புள்ளி பட்டியலில் சரிந்தது சென்னை



**சென்னை, ஏப். 25-**

லக்னோவுக்கு எதிரான தோல்வியால் புள்ளி பட்டியலில் 5-ம் இடத்திற்கு சென்னை சூப்பர் கிங்ஸ் அணி சரிந்துள்ளது.

**40 லீக் ஆட்டங்கள்...**

ரசிகர்களை மகிழ்வித்து வரும் 17-வது ஐ.பி.எல். சீசன் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. கடந்த மாதம் 22-ம் தேதி தொடங்கிய இந்த தொடரில் இதுவரை 39 லீக் ஆட்டங்கள் முடிவடைந்துள்ளன. இதில் நடப்பு சாம்பியன் ஆன சென்னை சூப்பர் கிங்ஸ் அணி நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் லக்னோ சூப்பர் ஜெயன்ட்சுடன் மோதியது. இந்த ஆட்டத்தில் சென்னை அணி 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

**முதல் 4 இடங்களில்...**

இந்த தோல்வியின் மூலம் புள்ளி பட்டியலில் 4-வது இடத்தில் இருந்த சென்னை 5-வது இடத்திற்கு சரிந்துள்ளது. சென்னை சூப்பர் கிங்ஸ் இதுவரை 8 போட்டிகளில் விளையாடி 4 வெற்றிகள் மற்றும் 4 தோல்விகள் கண்டு 8 புள்ளிகளுடன், புள்ளி பட்டியலில் 5-வது இடத்தில் உள்ளது. இதனையடுத்து சென்னை, தனது அடுத்த போட்டியில் வரும் 28-ம் தேதி ஐதராபாத் அணியுடன் பலப்பரீட்சை நடத்த உள்ளது. தற்போது வரை நடந்து முடிந்துள்ள லீக் ஆட்டங்களின் முடிவில் ராஜஸ்தான் ராயல்ஸ், கொல்கத்தா நைட் ரைடர்ஸ், சன்ரைசர்ஸ் ஐதராபாத், லக்னோ சூப்பர் ஜெயன்ட்ஸ் அணிகள் முறையே புள்ளி பட்டியலில் முதல் 4 இடங்களில் உள்ளன.

**பெங்களூரு கடைசி...**

இந்நிலையில், ஐபிஎல் புள்ளிப் பட்டியலில் ராஜஸ்தான் ராயல்ஸ் அணி 7 வெற்றிகளுடன் 14 புள்ளிகளுடன் முதலிடத்தில் நீடிக்கிறது. கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 5 வெற்றியுடன் 10 புள்ளிகளுடன் 2வது இடத்தில் உள்ளது. சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணி 10 புள்ளிகளுடன் 3-வது இடம் பிடித்துள்ளது. லக்னோ சூப்பர் ஜெயன்ட்ஸ் அணி 4 வெற்றியுடன் 4வது இடத்தில் உள்ளது. சென்னை மற்றும் குஜராத் அணிகள் தலா 8 புள்ளிகள் பெற்று 5, 6-வது இடங்களில் உள்ளன. பெங்களூரு ராயல் சேலஞ்சர்ஸ் அணி ஒரு வெற்றியுடன் 2 புள்ளிகள் பெற்று கடைசி இடத்தில் உள்ளது.

## லாரியஸ் விருதுகள் 2023:
# ஜோகோவிச்-பொன்மட்டி தேர்வு

**லண்டன், ஏப். 25-**

லாரியஸ் விருதுகள் 2023-க்கு சிறந்த வீரர் மற்றும் வீராங்கனை விருதுகளை முறையே ஜோகோவிச் - பொன்மட்டி பெற்றனர்.

**லாரியஸ் அமைப்பு...**

இங்கிலாந்தை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் லாரியஸ் அமைப்பின் 2023-ஆம் ஆண்டுக்கான விளையாட்டு விருதுகள் வழங்கப்பட்டன. விளையாட்டு வீரர்களை கௌரவிக்கும் விதமாக லாரியஸ் அமைப்பு விருதுகளை வழங்கி வருகிறது. இங்கிலாந்தை அடிப்படையாகக் கொண்டு லாரியஸ் அமைப்பின் 2023ஆம் ஆண்டுக்கான விளையாட்டு விருதுகள் வழங்கப்பட்டன. இந்த ஆண்டிற்கான விருது வழங்கும் நிகழ்ச்சி, ஸ்பெயினில் உள்ள மாட்ரிட் நகரில் நடைபெற்றது.

**8 பிரிவுகளில் விருது...**

இதில் 8 பிரிவுகளில் விருதுகள் வழங்கப்பட்டன. லாரியஸ் விருதுக்கான போட்டியாளர்கள் பெயர்களை, சர்வதேச அளவில் விளையாட்டுத் துறை சார்ந்த ஊடகங்கள் பரிந்துரைக்கின்றன. பின்னர், லாரியஸ் உலக விளையாட்டு அகாடமியை சேர்ந்த 71 உறுப்பினர்கள் வாக்களிப்பதன் அடிப்படையில், விருது பெறும் வெற்றியாளர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர். அந்த வகையில் 2023-ஆம் ஆண்டுக்கான சிறந்த வீரர், சிறந்த வீராங்கனை, சிறந்த அணி, சிறந்த மீட்சி, சிறந்த மாற்றுத்திறனாளி போட்டியாளர்,நல்லெண்ண விருது உள்ளிட்ட விருதுகள் வழங்கப்பட்டன.





**சிறந்த வீரராக....**

கடந்த ஆண்டு யு.எஸ். ஓபனில் சாம்பியன் பட்டம் வென்றன் மூலம், 24 கிராண்ட்ஸ்லாம் பட்டங்கள் வென்ற ஒரே டென்னிஸ் வீரராக வரலாறு படைத்திருக்கிறார் ஜோகோவிச். ஜோகோவிச் இந்த விருது வெல்வது இது 5-வது முறையாகும். இதற்கு முன், 2019, 2016, 2015, 2012 ஆகிய ஆண்டுகளிலும் வென்றிருக்கிறார்.

**சிறந்த வீராங்கனையாக....**

ஸ்பெயின் மகளிர் கால்பந்து அணி தனது முதல் உலகக் கோப்பையை கடந்த ஆண்டு கைப்பற்றியதில் முக்கியப் பங்காற்றியவர் மிட்ஃபீல்டரான பொன்மட்டி போட்டியில் சிறந்த வீராங்கனைக்கான கோல்டன் பால் விருது பெற்றிருந்தார். கடந்த ஆண்டு அக்டோபரில் பேலன் தோர் விருதும் வென்றுள்ளார்.

**சிறந்த அணி விருது...**

ஃபிஃபா உலகக் கோப்பை கால்பந்து போட்டியின் இறுதி ஆட்டத்தில் இங்கிலாந்து மகளிர் அணியை 1-0 கோல் கணக்கில் வென்று தனது முதல் உலகக் கோப்பையை வென்றது இங்கிலாந்து மகளிர் அணி. பரிந்துரைக்கப்பட்ட முதல் முறையே ஸ்பெயின் மகளிர் அணி இந்த லாரியஸ் விருதை வென்றிருக்கிறது. அதேபோல, அசாத்திய முன்னேற்றத்திற்கான விருதை ஜூட் பெலிங்கம் (கால்பந்து),சிறந்த மீட்சிக்கான விருதை சைமன் பைல்ஸ் (ஜிம்னாஸ்டிக்ஸ்), சிறந்த மாற்றுத்திறனாளி போட்டியாளருக்கான விருதை டைட் டி குரூட் (வீல்சேர் டென்னிஸ்), சிறந்த அதிரடி விளையாட்டு போட்டியாளருக்கான விருதை அரிசா டிரியு (ஸ்கேட் போர்டிங்) மற்றும் நல்லெண்ண விருதை ரஃபா நடால் அறக்கட்டளை உள்ளிட்டோர் பெற்றுள்ளனர்.

## ஐ.சி.சி. டி-20 பேட்டிங் தரவரிசை:
# சூர்யகுமார் யாதவ் தொடர்ந்து முதலிடம்

**துபாய், ஏப். 25-**

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் டி20 போட்டிகளில் வீரர்களுக்கான புதிய தரவரிசை பட்டியலில் இந்திய வீரர் சூர்யகுமார் யாதவ் பேட்ஸ்மேன்கள் தரவரிசையில் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளார்.

**தொடர் சமநிலையில்...**

நியூசிலாந்து கிரிக்கெட் அணி பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 பொட்டிகள் கொண்ட டி20 தொடரில் விளையாடி வருகிறது. இதில் 3 போட்டிகள் முடிவடைந்த நிலையில் தொடர் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் உள்ளது. இதனையடுத்து சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் டி20 போட்டிகளில் வீரர்களுக்கான புதிய தரவரிசை பட்டியலை வெளியிட்டுள்ளது. அதில் பாகிஸ்தான் மற்றும் நியூசிலாந்து வீரர்கள் முன்னேற்றம் கண்டுள்ளனர்.

**சூர்யகுமார் யாதவ்...**

டி20 பேட்ஸ்மேன்களின் தரவரிசையில் இந்தியாவின் சூர்யகுமார் யாதவ் மாற்றமின்றி முதலிடத்தில் தொடருகிறார். 2-வது இடத்தில் பில் சால்ட்டும் (இங்கிலாந்து), 3-வது இடத்தில் முகமது ரிஸ்வானும் (பாகிஸ்தான்) உள்ளனர். இதில் பாகிஸ்தான் - நியூசிலாந்து தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வரும் டிம் சீபர்ட் (நியூசிலாந்து) 3 இடங்கள் முன்னேறி 24-வது இடத்தையும், மார்க் சாப்மேன் (நியூசிலாந்து) 12 இடங்கள் முன்னேறி 33-வது இடத்தையும் பிடித்துள்ளனர்.

**அடில் ரஷித் முதலிடம்...**

டி20 பந்து வீச்சாளர்கள் தரவரிசையில் இங்கிலாந்தின் அடில் ரஷித் முதலிடத்தில் தொடருகிறார். வனிந்து ஹசரங்கா (இலங்கை) 2-வது இடத்தில் உள்ளார். நியூசிலாந்துக்கு எதிரான தொடரில் சிறப்பாக செயல்பட்டு வரும் ஷாகீன் அப்ரிடி (பாகிஸ்தான்) 2 இடங்கள் முன்னேறி 17-வது இடத்தை பிடித்துள்ளார். நியூசிலாந்தின் இஷ் சோதி 18-வது இடத்தில் உள்ளார்.

# டிக்கெட் விற்பனை: 12 பேர் கைது

**சென்னை, ஏப். 25-**

சென்னையில் கள்ளச்சந்தையில் ஐ.பி.எல். டிக்கெட் விற்பனை செய்ததாக 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சென்னை சேப்பாக்கத்தில் உள்ள எம்.ஏ.சிதம்பரம் ஸ்டேடியத்தில் நடைபெற்ற 39-வது லீக் ஆட்டத்தில் நடப்பு சாம்பியன் சென்னை சூப்பர் கிங்சும், லக்னோ சூப்பர் ஜெயன்ட்ஸ் அணிகள் மோதின.

இந்த நிலையில் சென்னை - லக்னோ அணிகளுக்கு இடையிலான போட்டியின் போது கள்ளச்சந்தையில் டிக்கெட் விற்பனை செய்ததாக புகார் எழுந்தது. இது தொடர்பாக திருவல்லிக்கேணி போலீசார் அதிரடி நடவடிக்கை எடுத்தனர். 10 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் 56 டிக்கெட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

## பாகிஸ்தான் செல்லுமா இந்திய அணி?

**சா**ம்பியன் டிராபி போட்டி பாகிஸ்தானில் நடப்பதால் இந்திய அணி அங்கு சென்று விளையாட வாய்ப்பு இல்லை என தகவல் வெளியாகி உள்ளது. பாகிஸ்தானுக்கு சென்று விளையாட இந்தியா மறுத்து வருகிறது. சமீபத்தில் நடந்த ஆசிய கோப்பையில் இந்தியா மோதிய ஆட்டங்கள் இலங்கையில் நடத்தப்பட்டன. மேலும் இந்திய அணி மோதும் போட்டி மட்டும் வேறு ஒரு இடங்களில் நடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியா அணி விளையாடும் போட்டி ஐக்கிய அரபு அமீரகத்தில் நடக்க அதிக வாய்ப்பு இருப்பதாகவும் தகவல் வெளியாகி உள்ளது. இந்தியா - பாகிஸ்தான் அணிகள் இருதரப்பு தொடரில் விளையாட வேண்டும் என இந்திய அணியின் கேப்டன் ரோகித் சர்மா விருப்பம் தெரிவித்திருந்தார். பாகிஸ்தானுடன் இரு தரப்பு தொடரை மறந்து விடுங்கள் எனவும் பிசிசிஐ தரப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளனர்.

## டெண்டுல்கருக்கு வாழ்த்து

**ச**ச்சின் டெண்டுல்கருக்கு நேற்று 51 - வது பிறந்த நாள். இதையொட்டி அவருக்கு கிரிக்கெட் உலக வீரர்கள்,மற்றும் நண்பர்கள் பிறந்த நாள் வாழ்த்துக்கள் தெரிவித்து வருகிறார்கள். டெண்டுல்கர் 24- 4- 1973-ம் ஆண்டு மும்பையில் பிறந்தார். டெண்டுல்கருக்கு தற்போது 51 வயதாகிறது. கிரிக்கெட்டின் கடவுள் என்று சச்சின் அழைக்கப்படுகிறார்.சச்சின் டெண்டுல்கரின் வாழ்க்கை மற்றும் சாதனைகள் வருமாறு :- டெண்டுல்கர் 11 வயதில் கிரிக்கெட் விளையாட்டில் தனது ஆர்வத்தை வளர்த்துக் கொண்டார். அவரது மூத்த சகோதரர் அஜித் டெண்டுல்கர் அவரை ஊக்குவித்தார். 1988 -ல், 15 வயதில் சச்சின் டெண்டுல்கர், குஜராத்திற்கு எதிராக ரஞ்சி டிராபி ஆட்டத்தில் பம்பாய்க்காக முதல் தடவையாக கிரிக்கெட் போட்டியில் அறிமுகமானார். இந்தப் போட்டியில் சதம் அடித்த அவர், முதல்தர போட்டியில் சதம் அடித்த இளம் இந்திய வீரர் என்ற பெருமையை பெற்றார்.

ரஞ்சி டிராபி, இரானி டிராபி மற்றும் தியோதர் டிராபி ஆகிய 3 உள்நாட்டுப் போட்டிகளிலும் அறிமுகத்திலேயே சதம் அடித்த ஒரே இந்திய கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர். டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் இந்திய அணிக்காக அறிமுகமான இளம் வீரர் இவர். டெண்டுல்கர் 6 உலக கோப்பை போட்டிகளில் விளையாடியுள்ளார். சர்வதேச கிரிக்கெட்டில் அதிக போட்டிகளில் விளையாடியவர் சச்சின் டெண்டுல்கர். அவர் 664 போட்டிகளில் ஆடியுள்ளார். மொத்தம் 34,347 ரன்களை பதிவு செய்து சாதனை படைத்துள்ளார். சர்வதேச வரலாற்றில் 100 சதங்கள் அடித்த ஒரே வீரர் இவர் தான். 20 ஆண்டுகளுக்கு மேலாக தனது இணையற்ற பேட்டிங் நுட்பங்களால் கிரிக்கெட் உலகில் ஜொலித்தார். இவரது சாதனைகளுக்காக இந்திய அரசு டெண்டுல்கருக்கு பல விளையாட்டு விருதுகளை வழங்கி கவுரவித்தது. 1994 -ல் அர்ஜுனா விருது, 1997 -ல் கேல் ரத்னா விருது, 1998 -ல் பத்மஸ்ரீ, 2008 -ல் பத்ம விபூஷன் ,2013 -ல் பாரத ரத்னா விருதுகளை பெற்றுள்ளார்.

## வெற்றி பெற... பிளெமிங் கருத்து

**இ**ந்த வருடம் பேட்டிங் வரிசையில் நிலைத்தன்மை இல்லாதது சென்னை அணியின் தோல்விக்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது. இந்நிலையில் தற்சமயத்தில் சென்னை அணியில் சரியான கலவையை கண்டறிவதற்கான சோதனையை நடத்துவதால்தான் இது போன்ற கசப்பான தோல்விகள் கிடைப்பதாக பயிற்சியாளர் ஸ்டீபன் பிளெமிங் தெரிவித்துள்ளார். எனவே அது சரியாக நடந்து விட்டால் இதே வீரர்கள் ஐ.பி. எல். தொடரின் 2-வது பகுதியில் அபாரமாக விளையாடி வெற்றியில் பங்காற்றுவார்கள் என்று நம்பிக்கை தெரிவிக்கும் அவர் இது குறித்து பேசியது பின்வருமாறு:-

“இது பார்ம் மற்றும் காம்பினேஷனை கண்டறியும் முயற்சியின் கலவையாகும். சில பகுதிகளில் நாங்கள் சற்று அசவுகரியமாக உள்ளோம். அதற்காக விரைவான தீர்வை கண்டுபிடிக்க முயற்சிக்கவில்லை. ஆனால் 2-வது பகுதியில் சிறப்பாக செயல்பட்டு வெற்றியை பெற்றுக் கொடுக்கும் வீரர்களுக்கான கலவையை நாங்கள் கண்டுபிடிக்க முயற்சிக்கிறோம். டேரில் மிட்சேல் மீது அதிக அழுத்தம் ஏற்பட்டுள்ளது. கீழ் வரிசை பொருந்தவில்லை என்பதால் சர்வதேச அளவில் அசத்திய அவரை மேல் வரிசையில் இறக்கினோம். இதற்கு கொஞ்சம் நேரம் எடுக்கும். ஆனால் டாப் 3 பேட்ஸ்மேன்கள் பெரிய ரன்கள் அடிக்க வேண்டும். இன்று அதை செய்த ருதுராஜ் தொடர்வார் என்று நம்புகிறேன். ஒவ்வொரு போட்டியிலும் எங்களை வீழ்த்த எதிரணிகள் சிறப்பாக விளையாடுகின்றன. அதற்கு நாங்களும் கொஞ்சம் நன்றாக விளையாட வேண்டும்” என்று கூறினார்.

## ஜிம்பாப்வே அணி அறிவிப்பு

**ஜி**ம்பாப்வே கிரிக்கெட் அணி வங்காளதேசத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் ஆட உள்ளது. இந்த தொடர் அடுத்த மாதம் 3ம் தேதி முதல் 12ம் தேதி வரை நடைபெறுகிறது. இந்த தொடரில் முதல் 3 போட்டிகள் சட்டோகிராமிலும், அடுத்த இரு போட்டிகள் டாக்காவிலும் நடைபெறுகின்றன. வரும் ஜூன் மாதம் அமெரிக்கா மற்றும் வெஸ்ட் இண்டீசில் நடைபெற உள்ள டி20 உலகக்கோப்பை தொடருக்கு தயாராக வங்காளதேசத்திற்கு இந்த தொடர் மிகவும் உதவியாக இருக்கும். இந்நிலையில் இந்த தொடருக்கான ஜிம்பாப்வே அணி இன்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த டி20 அணிக்கு சீனியர் வீரரான சிக்கந்தர் ராசா கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜிம்பாப்வே அணி விவரம்; சிக்கந்தர் ராசா (கேப்டன்), பராஸ் அகரம், பிரினா பென்னட், ரியான் பர்ல், ஜொனாதன் காம்ப்பெல், க்ரேக் எர்வின், ஜாய்லாட் கும்பி, லூக் ஜாங்க்வே, கிளைவ் மடாண்டே, தடிவானாஷே மருமணி, வெலிங்டன் மசகட்சா, பிளெசிங் முசரபானி, ஐன்ஸ்லி நட்லோவ், ரிச்சர்ட் ங்க்வாரே, சீன் வில்லியம்ஸ். போட்டி அட்டவணை விவரம்: முதல் டி20 போட்டி; மே 3 - சட்டோகிராம், 2வது டி20 போட்டி; மே 5 - சட்டோகிராம், 3வது டி20 போட்டி; மே 7 - சட்டோகிராம், 4வது டி20 போட்டி; மே 10 - டாக்கா, 5வது டி20 போட்டி; மே 12 - டாக்கா

## மார்கஸ் ஸ்டோய்னிஸ் சாதனை



**ஐ**.பி.எல் தொடரில் சென்னையில் நடைபெற்ற ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் - லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் அணிகள் மோதின. லக்னோ தரப்பில் அதிரடியாக ஆடிய மார்கஸ் ஸ்டோய்னிஸ் 63 பந்தில் 124 ரன்கள் குவித்தார். அவருக்கு ஆட்டநாயகன் விருது வழங்கப்பட்டது. ஐ.பி.எல் வரலாற்றில் இலக்கை விரட்டும் போது (ரன் சேச்சிங்கின் போது) தனிநபராக அதிகபட்ச ரன் எடுத்த வீரர் பட்டியலில் பால் வால்தாட்டியை (120 ரன் *) பின்னுக்கு தள்ளி ஸ்டோய்னிஸ் (124 ரன் *) முதல் இடத்தை பிடித்துள்ளார்.

ரன் சேசிங்கின் போது அதிகபட்ச ரன் அடித்த வீரர்கள் விவரம்: 1. மார்க்ஸ் ஸ்டோய்னிஸ் - 124*, சென்னைக்கு எதிராக, சேப்பாக்கம், 2024*, 2. பால் வல்தாட்டி - 120*, சென்னைக்கு எதிராக, மொஹாலி, 2011, 3. வீரேந்திர சேவாக் - 119, டெக்கான் சார்ஜர்ஸ்க்கு எதிராக, ஐதராபாத், 2011., 4. சஞ்சு சாம்சன் - 119, பஞ்சாப் கிங்ஸ்-க்கு எதிராக, மும்பை, 2021., 5. ஷேன் வாட்சன் - 117 *, ஐதராபாத்துக்கு எதிராக, மும்பை, 2018. (இறுதிப்போட்டி).

# காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சிகள் பயங்கரவாதிகளை பாதுகாத்தனர்
## கேரளா பிரசாரத்தில் அமித்ஷா தாக்கு

**ஆலப்புழா, ஏப். 25-**

‘கேரளாவில் காங்கிரஸ் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகள் ஆட்சியின் போது,பயங்கரவாதிகள் பாதுகாக்கப்பட்டனர்’ என அமித்ஷா பேசினார்.

கேரள மாநிலம் ஆழப்புழாவில் நடந்த தேர்தல் பிரசாரத்தில் அமித்ஷா பேசியதாவது: உலகிலும் இந்தியாவிலும் கம்யூனிஸ்ட் கட்சிகளின் கதை முடிந்துவிட்டது. கேரளாவில் காங்கிரசும் கூட்டணி வைக்க மறுத்து விட்டது. கேரளாவில் பா.ஜ., வுக்கு சாதகமான சூழல் நிலவுகிறது. வெற்றி பெற்றால், இந்தியாவின் அணு ஆயுதங்கள் அகற்றப்படும் என கம்யூனிஸ்ட் கட்சி கூறியுள்ளது. இந்தியாவில் உள்ள அணு ஆயுதங்களை அகற்ற முடியாது.

பா.ஜ.,வுக்கு ஓட்டளிக்க ஒட்டுமொத்த கேரளா மக்களும் தயாராக உள்ளனர். விவசாயிகள் மற்றும் மீனவர்கள் பிரதமர் மோடிக்கு ஆதரவு அளிக்க தயாராக உள்ளனர். இந்த தேர்தல் வன்முறை இல்லாத கேரளாவை உருவாக்குவதற்கான தேர்தல். நரேந்திர மோடியை மூன்றாவது முறையாக பிரதமர் ஆக்குவதற்கான தேர்தல். இண்டியா கூட்டணியின் இரு பங்காளிகள் கம்யூனிஸ்ட் மற்றும் மற்றும் காங்கிரஸ். டில்லியில் ஒரு மேடையில் ஒன்றிணைகின்றன.

கேரளாவிலும், மேற்கு வங்கத்திலும் ஒருவருக்கொருவர் சண்டையிடுகிறார்கள். அவர்களின் சண்டை போலியானது. கேரளாவில் காங்கிரஸ் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகள் ஆட்சியின் போது, பயங்கரவாதிகள் பாதுகாக்கப்பட்டனர். பி.எப்.ஐ., பயங்கரவாத அமைப்பிற்கு தடை விதித்தது குறித்து எந்த கருத்தும் தெரிவிக்காமல் கம்யூனிஸ்ட் கட்சிகள் மவுனம் காக்கிறது. அதே நேரத்தில் பிரதமர் மோடி தேசத்தை காக்க பாடுபடுகிறார். தடை செய்யப்பட்ட அமைப்பான பி.எப்.ஐ.,க்கு காங்கிரஸ் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகள் ஆதரவளிக்கிறது. இவ்வாறு அமித்ஷா பேசினார்.

# சத்தீஷ்கரில் நக்சலைட்டுகள் சரண்

**தன்டேவாடா, ஏப். 25-**

சத்தீஷ்காரின் தன்டேவாடா பகுதியில் 18 நக்சலைட்டுகள் சரணடைந்த நிலையில், இதுவரை 738 நக்சலைட்டுகள் போலீசில் சரணடைந்து இருக்கின்றனர்.

சத்தீஷ்காரில் தன்டேவாடா பகுதியில் செயல்பட்டு வந்த நக்சலைட்டுகளில் சிலர் நேற்று ஆயுதங்களை ஒப்படைத்து விட்டு, போலீசார் மற்றும் சி.ஆர்.பி.எப். அதிகாரிகள் முன்நேரில் சரணடைந்தனர். இவர்களில் எச்.பி.எம்.பி. என்ற பிரிவை சேர்ந்த தளபதி ஹித்ம ஓயம் (வயது 34), 3 பெண் நக்சலைட்டுகளான சம்பதி ஓயம் (வயது 23), கங்கி மத்கம் (வயது 28) மற்றும் ஹங்கி ஓயம் (வயது 20) உள்பட 18 பேர் அடங்குவர். இவர்கள் தெற்கு பஸ்டார் நகருக்கு உட்பட்ட பைரம்கார் மற்றும் மலங்கர் பகுதியில் இயங்கி வரும் மாவோயிஸ்டுகளின் ஒரு பிரிவை சேர்ந்தவர்கள் ஆவர்.

இதுபற்றி தன்டேவாடா போலீஸ் சூப்பிரெண்டு கவுரவ் ராய் செய்தியாளர்களிடம் கூறும்போது, போலீசாரின் மறுவாழ்வு இயக்கத்தின் செயல்பாடுகளால் ஈர்க்கப்பட்டு அவர்களாகவே விரும்பி, சரணடைந்து உள்ளனர் என கூறியுள்ளார். இந்த பிரிவினர், நக்சலைட்டுகள் முழு அடைப்புக்கு அழைப்பு விடும்போது, சாலைகளை தோண்டி போடுதல், சாலைகளை மறிக்கும் வகையில் மரங்களை வெட்டி போடுதல், சுவரொட்டிகள் மற்றும் பேனர்களை வைத்தல் போன்ற பணிகளில் ஈடுபடுவது வழக்கம். மாவோயிஸ்டு கொள்கைகளில் அதிருப்தி அடைந்து அதில் இருந்து அவர்கள் வெளியேறி உள்ளனர் என்று அவர் கூறியுள்ளார். இதனால், தன்டேவாடா பகுதியில் இதுவரை 738 நக்சலைட்டுகள் சரணடைந்து இருக்கின்றனர். அவர்களில் 177 பேரின் தலைக்கு பரிசு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டு இருந்தது.

## கேரளாவில் திடீர் பரபரப்பு:
# தேர்தலை புறக்கணிக்குமாறு மாவோயிஸ்டுகள் எச்சரிக்கை

**திருவனந்தபுரம், ஏப். 25-**

கேரள மாநிலத்தில் உள்ள 20 தொகுதிகளுக்கும் வரும் 26ம் தேதி (நாளை) ஒரே கட்டமாக மக்களவை தேர்தல் நடைபெற உள்ளது. அங்கு நேற்று மாலை 6 மணியுடன் தேர்தல் பிரசாரம் நிறைவடைந்தது. இதையொட்டி அரசியல் கட்சியினர் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், நேற்று காலை 6 மணி அளவில் வயநாடு தொகுதிக்குட்பட்ட கம்பமலை கிராமத்திற்கு வந்த ஆயுதம் தாங்கிய மாவோயிஸ்டுகள் 4 பேர் பொதுமக்களிடையே தேர்தலை புறக்கணிக்க வேண்டும் என எச்சரிக்கை விடுத்துள்ளனர். மேலும் அரசுக்கு எதிராக கோஷங்கள் எழுப்பியதாக கூறப்படுகிறது. மேலும் பொதுமக்களிடம் தங்களது கருத்துக்களை வெகுநேரம் தெரிவித்தபடி இருந்த மாவோயிஸ்டுகள் பின்பு அங்கிருந்து புறப்பட்டு மக்கிமாலா தேயிலை தோட்ட பகுதிக்குள் நுழைந்து வனப் பகுதிக்குள் சென்றனர்.

இது தொடர்பாக உள்ளூர் இளைஞர் ஒருவர் எடுத்த வீடியோ தற்போது சமூக வலைதளங்களில் பரவி வரும் நிலையில், அந்த பகுதியில் போலீசார் தீவிர சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர். வீடியோவில் இருந்த காட்சிகளை கொண்டு மிரட்டல் விடுத்த மாவோயிஸ்டுகள் யார் என்பது தெரியவந்துள்ளது.

மாவோயிஸ்டுகள் பகிரங்க மிரட்டல் விடுத்ததன் காரணமாக வயநாடு தொகுதியில் பெரும் பரபரப்பும் பதற்றமும் நிலவி வருகிறது. வயநாடு தொகுதியில் காங்கிரஸ் சார்பில் ராகுல் காந்தி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் ஆனி ராஜா, பா.ஜ.க. சார்பில் மாநில தலைவர் சுரேந்திரன் உள்ளிட்டோர் போட்டியிடுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜம்மு-காஷ்மீரில் நாளை வாக்குப்பதிவு

**ஜம்மு, ஏப். 25-**

ஜம்மு காஷ்மீரில் நாளை 2ம் கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

18-ஆவது மக்களவைத் தேர்தல் நாடு முழுவதும் 7 கட்டங்களாக நடைபெறும் என அறிவிக்கப்பட்டு, ஒவ்வொரு கட்டமாக வாக்குப்பதிவு நடைபெற்று வருகிறது. இதற்காக முதற்கட்ட தேர்தலில் தமிழ்நாடு, புதுச்சேரி உட்பட 21 மாநிலங்களில் 102 தொகுதிகளில் வாக்குப்பதிவு நடைபெற்றது.

2ம் கட்டமாக வரும் 26-ம் தேதி தேர்தல் நடைபெறுகிறது. 12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள 89 தொகுதிகளில் இரண்டாம் கட்ட தேர்தல் நடைபெற உள்ளது. கேரளாவில் 20 தொகுதிகள், கர்நாடகாவில் 14 தொகுதிகள், ராஜஸ்தானில் 13 தொகுதிகள், உத்தரப்பிரதேசத்தில் 8 தொகுதிகள், மகாராஷ்ட்ராவில் 8 தொகுதிகள், மத்திய பிரதேசத்தில் 7 தொகுதிகள், அசாமில் 5 தொகுதிகள், பீகாரில் 5 தொகுதிகள்,சத்தீஸ்கரில் 3 தொகுதிகளுக்கும், மேற்கு வங்கத்தில் 3 தொகுதிகள், மணிப்பூர், திரிபுரா மற்றும் ஜம்மு, காஷ்மீரின் தலா ஒருதொகுதிக்கு வரும் நாளை (ஏப். 26) வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

ஜம்மு – காஷ்மீரின் ஒரு பகுதியாக இருந்த லடாக், தற்போது சட்டசபை இல்லாத யூனியன் பிரதேசமாக உள்ளது. கடந்த 2019-ம் ஆண்டு ஜம்மு – காஷ்மீரின் சிறப்பு அந்தஸ்து ரத்து செய்யப்பட்டது. இதனால், ஜம்மு – காஷ்மீர், லடாக் என்று இரண்டு யூனியன் பிரதேசங்களாக பிரிக்கப்பட்டுள்ளன. ஜம்மு-காஷ்மீரில் யூனியன் பிரதேசத்துக்கான சட்டப்பேரவைத் தேர்தல் நடத்தப்படும் என தலைமை தேர்தல் ஆணையர் ராஜீவ் குமார் தெரிவித்தார். ஜம்மு காஷ்மீரில் உள்ள கட்சிகள், மக்களவைத் தேர்தலோடு, சட்டப்பேரவைக்கும் தேர்தல் நடத்த வேண்டும் என கோரிக்கை விடுத்திருந்ததாகவும், ஆனால், உரிய பாதுகாப்பு வழங்க முடியாது என பாதுகாப்பு படையினர் தெரிவித்தாகவும் கூறினார்.

# உக்ரைனில் 5 லட்சம் ராணுவ வீரர்கள் உயிரிழப்பு: ரஷ்யா

**மாஸ்கோ, ஏப். 25-**

போர் தொடங்கியதில் இருந்து தற்போது வரை 5 லட்சம் ராணுவ வீரர்களை உக்ரைன் இழந்துள்ளதாக ரஷ்யா தெரிவித்துள்ளது

ரஷ்யாவின் தொடர் எச்சரிக்கைகளை மீறி நேட்டோ அமைப்பில் இணைவதற்கான முயற்சிகளை உக்ரைன் தொடர்ந்து முன்னெடுத்தது. இதன் காரணமாக கடந்த 2022-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் உக்ரைன் நாட்டின் மீது ரஷ்யா தனது படைகளை அனுப்பி தாக்குதல் நடத்த தொடங்கியது.

மிகப்பெரிய படைபலத்தை கொண்ட ரஷ்யா, ஓரிரு நாட்களில் உக்ரைனை கைப்பற்றும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் நேட்டோ உறுப்பு நாடுகளான அமெரிக்கா மற்றும் பிற மேற்கத்திய நாடுகள் உக்ரைனுக்கு தேவையான ராணுவ மற்றும் நிதியுதவிகளை வாரி வழங்கி வருகின்றன.

இதன் காரணமாக போர் தொடங்கி 2 ஆண்டுகளை கடந்த பிறகும் உக்ரைன் ராணுவம் ரஷ்யாவுக்கு தொடர்ந்து பதிலடி கொடுத்து வருகிறது. அதே சமயம் இந்த போரில் உக்ரைன் பெரும் இழப்பையும் சந்தித்து வருகிறது. உக்ரைனின் பல்வேறு நகரங்கள் தற்போது ரஷ்யாவின் கட்டுப்பாட்டுக்குள் வந்து விட்டன. அவற்றை மீட்டெடுப்பதற்கான முயற்சியில் உக்ரைன் ராணுவம் தீவிரம் காட்டி வருகிறது.

3-வது ஆண்டாக தொடரும் இந்த போரில் இருதரப்பிலும் ஏராளமான வீரர்கள் உயிரிழந்துள்ளனர். இதனால் இருநாடுகளுமே கட்டாய ராணுவ சேவை திட்டத்தின் கீழ் ராணுவத்துக்கு ஆட்களை சேர்த்து வருகின்றன.

இந்த நிலையில் போர் தொடங்கியதில் இருந்து தற்போது வரை உக்ரைனில் சுமார் 5 லட்சம் ராணுவ வீரர்கள் பலியாகி உள்ளதாக ரஷ்ய ராணுவம் தெரிவித்துள்ளது. இது குறித்து மாஸ்கோவில் நடைபெற்ற பத்திரிகையாளர்கள் சந்திப்பின் போது ரஷ்ய ராணுவ அமைச்சர் செர்ஜி ஷோய்கு கூறுகையில்,

மொத்தத்தில், சிறப்பு ராணுவ நடவடிக்கையின் தொடக்கத்திலிருந்து தற்போது வரையில் உக்ரைன் ஆயுதப்படைகள் கிட்டத்தட்ட அரை மில்லியன் (5 லட்சம்) ராணுவ வீரர்களை இழந்துள்ளன.

உக்ரைன் ராணுவத்தின் 22 ஆயிரத்துக்கும் மேற்பட்ட டிரோன்கள், 1,000 ஏவுகணைகள், சுமார் 900 விமானங்கள் மற்றும் ஹெலிகாப்டர்களை ரஷ்யா அழித்துள்ளது என்று தெரிவித்தார்.

### 2-ம் கட்ட பார்லி. தேர்லுக்கான பிரசாரம் ஓய்ந்தது:

# 89 தொகுதிகளில் நாளை தேர்தல்

புதுடெல்லி, ஏப். 25-

கேரளா, கர்நாடகா உட்பட 13 மாநிலங்களைச் சேர்ந்த 89 தொகுதிகளில் நாளை மறுநாள் மக்களவை தேர்தலின் 2ம் கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ள நிலையில், நேற்று மாலை 5 மணியுடன் தேர்தல் பிரசாரம் ஓய்ந்தது.

பாராளுமன்ற மக்களவை தேர்தல் தொடங்கி மும்முரமாக நடைபெற்று வருகிறது. மொத்தம் 7 கட்டங்களாக வாக்குப்பதிவு நடந்து வருகிறது. அதில், முதற்கட்டமாக கடந்த 19-ம் தேதி தமிழ்நாடு, புதுச்சேரி உள்ளிட்ட 21 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த, 102 தொகுதிகளில் வாக்குப்பதிவு நடைபெற்றது. தமிழ்நாட்டில் 69.72 சதவீத வாக்குகள் பதிவாகின.

இந்நிலையில், நாளை பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 89 தொகுதிகளில் இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. 13 மாநிலங்களைச் சேர்ந்த 89 தொகுதிகளில் இரண்டாம் கட்டத்தில் வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. தமிழ்நாட்டைப் போலவே கேரளாவிலும் 20 தொகுதிகளுக்கும் நாளை ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

வாக்குப்பதிவு நடைபெறும் மாநிலங்கள்: கேரளா - 20 தொகுதிகள், கர்நாடகா - 14 தொகுதிகள், ராஜஸ்தான் - 13 தொகுதிகள், உத்தரப்பிரதேசம் - 8 தொகுதிகள், மகாராஷ்ட்ரா - 8 தொகுதிகள், மத்தியப் பிரதேசம் - 7 தொகுதிகள், அசாம் - 5 தொகுதிகள், பீகார் - 5 தொகுதிகள், சத்தீஸ்கர் - 3 தொகுதிகள், மேற்கு வங்கம் - 3 தொகுதிகள், மணிப்பூர் - 1 தொகுதி, திரிபுரா - 1 தொகுதி ஜம்மு, காஷ்மீர் - 1 தொகுதி.

இரண்டாம் கட்ட தேர்தலுக்காக பிரதமர் மோடி, மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா, காங்கிரஸ் கட்சியின் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, ராகுல் காந்தி உள்ளிட்ட தேசிய தலைவர்கள் தேர்தல் நடைபெறும் பகுதிகளில் அனல் பறக்கும் பிரசாரத்தில் ஈடுபட்டனர். மாலை 5 மணிக்கு மேல் வெளிநபர்கள் தொகுதியில் தங்க அனுமதி அளிக்கப்படாது. வாக்குப்பதிவுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் தேர்தல் ஆணையம் தயார் செய்துள்ளது. வாக்குப்பதிவு நடைபெறும் மாநிலங்களிலும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.



சென்னை நீலாங்கரையில் நடைபெற்ற திருவள்ளூர் தெற்கு மாவட்ட எம்.ஜி.ஆர். மன்ற தலைவர் ருக்மாங்கதன், பிரேமா தம்பதியரின் மகன் பைலட் குலசேகர், டாக்டர் கீதாஞ்சலி ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் அ.தி.மு.க பொது செயலாளர் எடப்பாடி பழனிசாமி கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். அருகில் முன்னாள் அமைச்சர்கள், முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

# பிரதமர் மோடி மதத்தை வைத்து அரசியல் செய்ததே கிடையாது

### நொய்டாவில் ராஜ்நாத் சிங் பிராசாரம்

நொய்டா, ஏப். 25-

பிரதமர் மோடி மதத்தை வைத்து அரசியல் செய்ததே கிடையாது என்று நொய்டாவில் நடந்த பிரசாரத்தில் மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற தேர்தல் வாக்கு சேகரிப்பு பணிகளில் அரசியல் கட்சிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன. அந்த வகையில், ராஜஸ்தான் மாநிலத்தின் பன்ஸ்வாராவில் நடைபெற்ற பா.ஜ.க. பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய பிரதமர் மோடி, நாட்டின் வளங்கள் முதலில் சிறுபான்மையினர் குறிப்பாக இஸ்லாமிய மதத்தை சேர்ந்தவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று கடந்த 2006 ஆம் ஆண்டு அப்போதைய பிரதமர் மன்மோகன் சிங் பேசியதாக தெரிவித்தார். பிரதமர் மோடியின் கருத்துக்கு நாடு முழுக்க கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு வருகிறது. மேலும், அவர் மதத்தின் பேரில் அரசியல் செய்வதாக எதிர்கட்சிகள் சார்பில் குற்றம்சாட்டப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் , மத்திய பாதுகாப்பு துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் கிரேட்டர் நொய்டாவில் வாக்கு சேகரித்தார். அப்போது, பொது மக்களிடையே பேசிய அவர், சகோதர சகோதரிகளே பிரதமரை எனக்கு இப்போது தான் தெரியும் என்றே இல்லை. நீண்ட காலம் அவருடன் எனக்கு நல்ல தொடர்பு இருந்து வருகிறது. அவர் இந்து, முஸ்லீம், கிறிஸ்துவம் என மதத்தின் பேரில் எப்போதும் அரசியல் செய்ததே இல்லை. நமது பிரதமர் சமூகத்தை பிளவுபடுத்த ஒருபோதும் நினைத்ததே இல்லை. என்று தெரிவித்தார்.



தமிழ்நாடு அரசின் சார்பில் நேற்று சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங்கோவடிகளை போற்றும் வகையில் சென்னை அண்ணா சதுக்கத்தில் அமைந்துள்ள இளங்கோவடிகளின் திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப்படத்திற்கு தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் சுப்பிரமணியன், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் வைத்திநாதன், தமிழ்வளர்ச்சித்துறை இயக்குநர் அருள் ஆகியோர் மலர்தூவி மரியாதை செலுத்தினர். உடன் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

# அதிகரிக்கும் வெப்பதால் கண்களுக்கு அதிக பாதிப்பு

### மருத்துவர்கள் எச்சரிக்கை

சென்னை, ஏப். 25-

அதிகரிக்கும் கோடை வெப்பத்தால் கண்களுக்கு பாதிப்பு ஏற்படும் என டாக்டர்கள் எச்சரித்துள்ளனர்.

கோடை துவங்கியுள்ள நிலையில் வெயிலின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைகிறது. இந்த நிலையில், கோடை வெப்பத்தால் கண்களுக்கு பாதிப்பு ஏற்படும் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக அவர்கள் கூறியதாவது:

"பருவ காலங்களில் தொற்றுகள் ஏற்படுவது வழக்கம். அந்த வகையில் கோடை காலத்தில் வெப்பம் அதிகமாக இருக்கும் போது அது நேரடியாக கண்களை பாதிக்கக் கூடிய வாய்ப்பு அதிகமாக உள்ளது. இதனை அலட்சியப்படுத்தும் போது பாதிப்பு தீவிரமடைந்து பார்வைத் திறன் குறைய நேரிடும். கடந்த சில வாரங்களாக உலர் விழி, கண் அழற்சி, புறஊதா கதிர்வீச்சு பாதிப்பு, ஒவ்வாமை பாதிப்பு ஆகியவை அதிக அளவில் ஏற்படுகின்றன.

உலர் விழி பிரச்னை கண்களில் போதிய ஈரத்தை தக்க வைப்பதற்கான கண்ணீர் சுரக்காதபோது ஏற்படுகிறது. இதற்கு சொட்டு மருந்துகள் மூலம் சிகிச்சை அளிக்கலாம். இளம் சிவப்பு கண் நோய் எனப்படும் கண் அழற்சி பாதிப்புகள் அதிகரித்து வருகின்றன. கண் இமைக்கு உள்ளே அமைந்திருக்கும் திசுவில் வீக்கம் அல்லது அழற்சி ஏற்படும்போது இத்தகைய பாதிப்பு உருவாகிறது.

அசுத்தமான கைகளால் கண்களைத் தொடாமல் இருப்பதன் மூலம் இதனைத் தவிர்க்கலாம். சூரியனிலிருந்து வரும் புறஊதா கதிர்வீச்சு பல வகையான கண் நோய்களை விளைவிக்கக் கூடும். இந்த கதிர்வீச்சு கண் புரை, விழிப்புள்ளிச் சிதைவு, ஃபோட்டோகரட்டாடிஸ் போன்றவற்றை ஏற்படும். இத்தகைய பாதிப்பைத் தவிர்க்க சூரிய ஒளியிலிருந்து கண்களைக் காக்கும் கண்ணாடிகளை அணியலாம்.

கோடை காலத்தில் உடலில் நீர்ச்சத்தைக் குறையாமல் வைத்திருக்கும் பானங்களை அருந்த வேண்டும். செயற்கை குளிர்பானங்கள், கார்பனேற்றப்பட்ட பானங்களைத் தவிர்க்க வேண்டும் என மருத்துவர்கள் தெரிவித்தனர்.

# தனியார் பள்ளிகளில் இடஒதுக்கீடு நிறைவேற்றப்படுகிறதா?

### கண்காணிக்க அரசுக்கு செல்வப்பெருந்தகை கோரிக்கை

சென்னை, ஏப். 25-

தமிழகத்தில் உள்ள பள்ளிகளில் கல்வி உரிமைச் சட்டப்படி தனியார் பள்ளிகளில் 25 சதவிகித இடஒதுக்கீடு முழுமையாக நிறைவேற்றப்படுகிறதா என்பதை நாள்தோறும் கண்காணித்து உரிய தீர்வினை காண வேண்டும். எந்த நோக்கத்திற்காக கல்வி உரிமைச் சட்டம் கொண்டு வரப்பட்டதோ, அந்த நோக்கம் முழுமையாக நிறைவேற தமிழக கல்வித்துறை உரிய நடவடிக்கைகளை விழிப்புணர்வோடு எடுக்க வேண்டுமென தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் கூறியிருப்பதாவது,

நீண்ட நெடுங்காலமாக கல்வித் துறையில் இந்தியாவின் முன்னோடி மாநிலமாக தமிழகம் திகழ்ந்து பெருமை பெற்று வருகிறது. காங்கிரஸ் தலைமையில் அமைந்த ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு அனைவருக்கும் கல்வியை வழங்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்தில் 2006-ம் ஆண்டில் கல்வி உரிமைச் சட்டத்தை கொண்டு வந்தது.

இச்சட்டத்தின்படி 6 வயது முதல் 14 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு கட்டாய இலவச கல்வியை அளிக்க வேண்டுமென தெரிவிக்கப்பட்டது. கல்வி பெறுவது சட்ட உரிமையாக அங்கீகரிக்கப்பட்டது. இதனை செயல்படுத்த வேண்டிய பொறுப்பு மாநில கல்வித்துறைக்கு இருக்கிறது.

மத்திய அரசில் காங்கிரஸ் கொண்டு வந்த இலவச கல்வி உரிமைச் சட்டத்தின்படி அனைத்து தனியார் பள்ளிகளும் ஒவ்வொரு வகுப்பிலும் 25 சதவிகித இடங்களில் ஏழை எளிய, பட்டியலின, பிற்படுத்தப்பட்ட மாணவர்களை முன்னுரிமை அடிப்படையில் சேர்க்க வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.


இதற்கான கல்வி கட்டணத்தை மத்திய அரசு, மாநில அரசின் மூலமாக செலுத்துவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையில் தமிழகத்தில் உள்ள பள்ளிகளில் கல்வி உரிமைச் சட்டப்படி தனியார் பள்ளிகளில் 25 சதவிகித இடஒதுக்கீடு முழுமையாக நிறைவேற்றப்படுகிறதா என்பதை நாள்தோறும் கண்காணித்து உரிய தீர்வினை காண வேண்டும்.

எந்த நோக்கத்திற்காக கல்வி உரிமைச் சட்டம் கொண்டு வரப்பட்டதோ, அந்த நோக்கம் முழுமையாக நிறைவேற தமிழக கல்வித்துறை உரிய நடவடிக்கைகளை விழிப்புணர்வோடு எடுக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்த அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளார்.

### பாடலாசிரியரும் உரிமை கோரினால் என்ன ஆகும்?

# இளையராஜா தரப்புக்கு உயர் நீதிமன்றம் கேள்வி



சென்னை, ஏப். 25-

இளையராஜா பாடலை பயன்படுத்த விதித்த இடைக்கால தடையை நீக்கக்கோரி நிறுவனங்கள் தொடர்ந்த மேல் முறையீடு வழக்கில் பாடலுக்கு பாடலாசிரியரும் உரிமை கோரினால் என்ன ஆகும்? என்று இளையராஜா தரப்புக்கு உயர் நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.

இசையமைப்பாளர் இளையராஜா 4,500 பாடல்களுக்கு மேல் இசையமைத்துள்ளார். தற்போதும் பல படங்களுக்கு அவர் இசையமைத்து வருகிறார். இவரது பாடல்களை எக்கோ, அகி உள்ளிட்ட இசை நிறுவனங்கள் ஒப்பந்த காலம் முடிந்த பின்பும் பயன்படுத்தி வருவதாக காப்புரிமை கேட்டு, இளையராஜா சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கில், இளையராஜாவின் பாடலகளை பயனபடுத்த, இசை நிறுவனங்களுக்கு உரிமை உள்ளது என கோர்ட் தீர்ப்பளித்தது. இதனை எதிர்த்து இளையராஜா தரப்பில் மேல்முறையீடு செய்யப்பட்டது.

இதனை விசாரித்த இரு நீதிபதிகள் அமாவு இளையராஜா பாடல்களை பயன்படுத்த இசை நிறுவனங்களுக்கு தடை விதித்தனர். படத்தின் காப்புரிமை தயாரிப்பாளர்களிடம் இருப்பதால் அவர்களிடம் செய்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் பாடல்கள் பயன்படுத்தப்பட்டதாக கூறி எக்கோ நிறுவனம் சார்பில் மேல்முறையீடு செய்யப்பட்டது.

இந்த வழக்கு நேற்று நீதிபதிகள் ஆர். மகாதேவன் மற்றும் முகமது ஷபிக் ஆகியோர் முன் விசாரணைக்கு வந்தது. அப்போது இசை நிறுவனம் சார்பில் ஆஜரான வக்கீல், இளையராஜாவிற்கு தயாரிப்பாளர் சம்பளம் வழங்கிவிட்டார். அதன்படி அதன் உரிமை தயாரிப்பாளருக்கு சென்றுவிடும் அதன் அடிப்படையில் தயாரிப்பாளர்களிடம் இருந்து உரிமை பெற்று பாடல்கள் பயன்படுத்தப்பட்டது' என்று கூறினார்.

இதற்கு பதிலளித்த இளையராஜா தரப்பு வக்கீல், இசையமைப்பு என்பது கிரியேட்டிவ் சம்பந்தப்பட்டது. இதற்கு காப்புரிமை சட்டம் பொருந்தாது என்றார். அப்போது குறுக்கிட்ட நீதிபதிகள், வரிகள், பாடகர் அனைத்தும் சேர்ந்துதான் பாடல் உருவாகிறது. வரிகள் இல்லை என்றால் பாடல் இல்லை. அந்த வகையில் பாடலுக்கு பாடலாசிரியரும் உரிமை கோரினால் என்ன ஆகும்? என்று கேள்வி எழுப்பினர்.

இந்த பாடல்கள் விற்பனை மூலம் இளையராஜா பெற்ற தொகை யாருக்கு சொந்தம் என்பது இந்த வழக்கின் இறுதி தீர்ப்பிற்கு கட்டுப்பட்டது என்று நீதிபதிகள் தெரிவித்தனர். இளையராஜா பாடல்கள் தொடர்பாக பாடலாசிரியர்கள் உரிமை கோர வாய்ப்புள்ளதா என்பதை பற்றி தங்களுடைய விளக்கம் என்ன என்று இளையராஜா தரப்பிடம் நீதிபதிகள் கேட்டுள்ளனர். அதன் பின்னர் வழக்கின் விசாரணையை ஜூன் 2 ஆம் வாரத்திற்கு நீதிபதிகள் ஒத்தி வைத்தனர்.

### திருச்சி விமான நிலையத்தில், சிங்கப்பூரில் இருந்து

# நூதனமாக காலணியில் வைத்து தங்கத்தை கடத்தி வந்தவர் கைது

திருச்சி, ஏப். 25-

திருச்சி சர்வதேச விமான நிலையத்தில் சிங்கப்பூரிலிருந்து நூதனமாக காலணியில் தங்கத்தை பதுக்கி எடுத்து வந்த நபரை சுங்கத்துறை அதிகாரிகள் கைது செய்தனர்.

திருச்சி சர்வதேச விமான நிலையத்திற்கு இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, சார்ஜா, துபாய் போன்ற பல்வேறு நாடுகளில் இருந்து சர்வதேச விமானங்கள் வந்து செல்கின்றது. இவ்வாறு பல்வேறு நாடுகளில் இருந்து வருகை தரும் பயணிகள் நூதன முறையில் தங்கத்தை கடத்தி வருவதும், அதனை விமான நிலைய சுங்கத்துறை அதிகாரிகள் கைப்பற்றுவதும் அவ்வப்போது நிகழ்ந்து வருகின்றன.

விமான பயணிகளை வான் நுண்ணறிவு மற்றும் சுங்கத்துறை அதிகாரிகள் சோதனை செய்வது வழக்கம். அவ்வாறு நேற்று சிங்கப்பூரில் இருந்து திருச்சி வந்த பயணிகளிடம் வான் நுண்ணறிவு சுங்கத்துறை அதிகாரிகள் சோதனை மேற்கொண்டனர். அப்போது ஆண் பயணி ஒருவர் சந்தேகப்படும்படி நின்று கொண்டிருந்தார். தொடர்ந்து அவரது உடமைகளை சோதனை செய்த போது அவர் காலணியின் அடிபாகத்தில் தங்கத்தை பேஸ்ட் வடிவில் நூதன முறையில் கடத்தி வந்தது தெரியவந்தது. அந்த நபர் எடுத்துவந்த தங்கத்தின் எடை 401.5 கிராம் எனவும், அதன் சர்வதேச சந்தை மதிப்பு ரூ.28,85,179/- எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து அந்த பயணியிடம் வான் நுண்ணறிவு மற்றும் சுங்கத் துறை அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# கூவாகம் கூத்தாண்டவர் கோயில் தேரோட்டம் கோலாகலம்:ஆயிரக்கணக்கானோர் பங்கேற்பு

கள்ளக்குறிச்சி, ஏப்.25

கள்ளக்குறிச்சி மாவட்டம் பிரசித்தி பெற்ற கூவாகம் கூத்தாண்டவர் கோயிலில் நடைபெற்ற தேரோட்டத்தில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.

மகாபாரதப் போரில் வெற்றி கிடைப்பதற்காக அரவான் என்ற இளவரசன், பஞ்ச பாண்டவர்களால் களபலி கொடுக்கப்பட்ட வரலாற்று சிறப்புமிக்க புராண வரலாற்றை கூவாகம் திருவிழா நினைவுக் கூறுகிறது. உலகத்திலேயே திருநங்கைகளுக்கு என்றே தனியாக கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே கூவாகம் கிராமத்தில் கூத்தாண்டவர் கோயில் அமைந்துள்ளது.

இங்கு ஆண்டுத்தோறும் சித்திரை மாதத்தில் திருநங்கைகள் ஒன்று கூடி விழா எடுத்து கொண்டாடி வருகின்றனர். அதன்படி, இந்த ஆண்டு கூவாகம் கூத்தாண்டவர் கோயிலில் சித்திரை திருவிழா கடந்த 9-ம் தேதி சாகை வார்த்தல் நிகழ்ச்சியுடன் தொடங்கி நாள்தோறும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது. இத்திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சிகளான கோயில் பூசாரிகளிடம் திருநங்கைகள் தாலி கட்டி திருமணம் செய்து கொள்ளும் நிகழ்ச்சி நேற்று மாலையும், அதனைத்தொடர்ந்து கூத்தாண்டவர் தேரோட்டமும், திருநங்கைகள் தாலி அறுக்கும் நிகழ்வும் நடைபெற்றது.

இதனைத்தொடர்ந்து, நேற்று (ஏப். 24) அரவான் கண் திறத்தல் மற்றும் திருத்தேரோட்டம் நடைபெற்றது. இந்த விழாவிற்காக மாவட்ட நிர்வாகம் சார்பில் குடிநீர் மற்றும் கழிவறை வசதி ஏற்படுத்தியதோடு மருத்துவத் துறையினர் கிராமத்தில் உள்ள இரண்டு இடங்களில் 24 மணி நேரம் செயல்படக்கூடிய மருத்துவ முகாம் அமைக்கப்பட்டிருந்தது.

அதேபோல் காவல் துறை சார்பில் கிராமம் முழுவதும் 130 கண்காணிப்பு கேமராக்கள் அமைக்கப்பட்டு தொடர்ந்து பக்தர்களை கண்காணிக்கப்பட்டனர். 1500 க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.